


# கட்டடமும் கதையும்

# கட்டடமும் கதையும்

புலவர் தி. முருகு சுந்தரம் எம். ஏ.,
சேலம்.

கிடைக்குமிடம்

வேலா பதிப்பகம்

ஈரோடு-1

முதற் பதிப்பு — 1965

© 1965

வெளியிட்டோர் :
சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்,
ஈரோடு - 1.

விலை ரூ. 1–50 காசுகள்

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ், சென்னை-1.

# முன்னுரை

கலை என்பது மக்கள் உள்ளத்தின் அரிய கண்டுபிடிப்பு. உணர்ச்சிகளின் நுண்ணுருவம். இசை, ஓவியம், சிற்பம், ஆடல், இலக்கியம் ஆகிய யாவும் நுண்கலைகள். கட்டடக் கலையும் இவற்ருேடு ஒப்பவைத்துப் போற்றத் தக்க சிறப்பினை உடையது. இக்கலைகள் யாவும், ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சிக் கேற்பத் தாமும் வளர்ந்து சிறப்புறுகின்றன. இக் கட்டடக்கலை நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் வேறு பட்டுக் காணப்படுகிறது. ஒவ்வோரினத்தாரும் தங்களுக் கெனத் தனித்தன்மை பெற்ற ஒவ்வொரு கட்டடக் கலையை வளர்த்து வந்திருக்கின்றனர். அக் கலையார்வத்தின் காரண மாக உலகம் போற்றும் உயரிய கலைக் கோவில்கள் பல உருப் பெற்றன. அவைகள் காலத்தை வென்று தத்தம் கலைச் சிறப்பைப் பறை சாற்றிய வண்ணம் இன்றும் செம்மாந்து நிற்கின்றன. அவற்றுள் ஒரு சில கட்டடங்களைப் பற்றியும், அவை தோன்றிய கதைகள் பற்றியும், இந்நூலில் சுவைபட எடுத்துக் கூறியிருக்கிறேன்.


இருபதாம் நூற்ருண்டில் கட்டடக் கலை அடைந்துள்ள வியக்கத்தக்க வளர்ச்சியைப் பற்றிப் பல அரிய கருத்துக்களை எடுத்துக் கூறி, இந்நூல் சிறப்புற அமைவதற்குப் பெரிதும் துணை புரிந்தவர், எனது கெழுதகை நண்பரான திரு K. L. அண்ணுசாமி B. E. அவர்கள். அன்னுருக்கும், இந்நூல் சிறந்த முறையில் அச்சேற உடனிருந்து பணியாற்றிய புலவர் பு. செல்வராசனுர் அவர்கட்கும், இந்நூலை வெளியிட்ட சிவலிங்க நூற்பதிப்புக் கழகத்தார்க்கும் என் உளங் கலந்த நன்றி.

கவிதைப் பண்ணை
10-10-63

இங்ஙனம்
முருகு சுந்தரம்.

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | தஞ்சைப் பெரிய கோவில் | 8 |
| 3. | பிரமிடு | 30 |
| 4. | தாஜ்மகால் | 55 |
| 5. | குதுப்மினர் | 70 |
| 6. | செங்கோட்டை | 82 |
| 7. | வாத்திகன் நகரம் | 94 |
| 8. | இறுவாய் | 105 |




தஞ்சைப் பெரிய கோவிலின் தோற்றம் (பக்கம் 8)




சியாப்ஸ் (Cheops) எனும் இடத்தில் காணப்படும் ஸ்பிங்சும், பிரமிடும்
(பக்கம் 30)




தங்கத் தகடுகளால் அலங்
கரிக்கப்பட்ட நான்காயிரம் ஆண்டு
கட்குமுன் வாழ்ந்த அரசரின் உடல்
(பக்கம் 46)




சுமார் 72 மீட்டர் உயரமுள்ள
குதுப்மினாரின் தோற்றம்
(பக்கம் 70)




ஆக்ரா நகரிலுள்ள தாஜ்மகால் (பக்கம் 55)



டில்லி நகரிலுள்ள செங்கோட்டை (பக்கம் 82)



வாத்திகன் நகரின் ஒரு தோற்றம் (பக்கம் 94)



இன்றைய கட்டடக் கலையின் சிறப்புகளைக் கொண்டு மிளிரும்
நியூயார்க் நகரின் ஒரு தோற்றம் (பக்கம் 105)

# 1. தோற்றுவாய்

‘‘விண்மறைக்கும் கோபுரங்கள்
வினைமறைக்கும் கோயில்கள்
வேறு எந்த நாட்டில் உண்டு
வேலையின் விசித்திரம்!!’’

என்று மெய்ம்மறந்து பாடுகிறார் நாமக்கல் கவிஞர். தமிழன் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்பதற்கு நம் நாட்டின் கட்டடக் கலையும் ஒரு காரணமாகும். திரும்பிய பக்கமெல்லாம் மலை போன்ற பெருங்கற் கோவில்களையும், சிற்பக் கலையழகு கொழிக்கும் குகைக் கோவில்களையும் தமிழகமெங்கும் காணலாம். இவை யாவும் பண்டைத் தமிழர் கட்டடக் கலையில் அடைந்திருந்த மேம்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாம்.

மாந்தன் ஆறறிவு படைத்தவன்; சிந்திக்கக் கற்றவன். ஆனாலும் அவன் நாகரிகத்தின் துவக்க வளர்ச்சி, பின்பற்றும் ஊக்கத்தாலேயே (imitation) ஏற்பட்டுள்ளது. மாந்தனின் கட்டடக்கலையுணர்வுக்கு முதற் காரணமாக அமைந்தவை பறவைகளும் விலங்குகளுமேயாம். தென்னங் கீற்றில் ஊஞ்சலாடும் தூக்கணாங்குருவியின் கூடும்,

ஆலின் உச்சியில் அழகாக அமைக்கப்பெறும் காக்கைக் கூடும் பறவைகளுக்கு இயற்கை வழங்கிய பேராற்றலின் விளைவுகள். நாரினாலும், குச்சியினாலும், வைக்கோலினாலும் அமைக்கப் பட்ட இக்கூடுகளைப் பார்த்துத்தான் இன்று மாந்தன் வைக்கோற் பலகைகள் (Straw Boards) செய்யக் கற்றுக் கொண்டான்.

நிலத்தினடியில் பெருஞ்சுரங்கங்களை அமைத்து அங்குப் பெரும் நகரத்தையே அமைக்கிறோம். அமெரிக்க நாட்டிலும், உருசிய நாட்டிலும் நிலத் தினடியில் ஓடும் சுரங்க வண்டித் தொடர்கள் (Metro Trains) நிறைய உண்டு. அவற்றின் சிறப்பைக் கண்டு வியவாத வெளி நாட்டார் இலரென்றே சொல்லலாம். இக்கலைக்கு முன்னோடி களாக இருந்தவை எலிகளே! பொறியியற் கல்வி யில் மண்ணியற்கலை (Soil Mechanism) என்ற தனித் துறையே உண்டு. இத்துறையைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. இத்துறையின் முதல் ஆசான் யார்? இறைவன் படைப்பில் இழிந்ததாகக் கருதப்படும் எலியே அன்றோ?

அமெரிக்க நாட்டில் நூற்றுக்கணக்கான மாடி களையுடைய மாபெருங் கட்டடங்கள் விண்ணை அளாவி நிற்கின்றன. இக்கட்டடங்களை எழுப்பிய சிற்பிகளை வியந்து பாராட்டுகிறோம். ஆனால் மரக் கிளையில் தொங்கும் தேனடையைக் காணும் போது, சிற்பிகளின் பேராற்றல் நமக்குச் சிறிதாகத் தோன்றும்.

தமிழ் அறிஞர்கள் கலைகளை அறுபத்து நான்கு வகைகளாகப் பிரித்தனர். அவற்றுள் ஓவியக்கலை, இசைக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றை நுண் கலைகள் என்றனர். சிற்பக்கலைக்குத் தாயாக விளங்கும் கட்டடக் கலையும் நுண் கலையே. நாகரிகமறியாக் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த மக்கள், பசி வந்த போது காட்டு விலங்குகளை வேட்டையாடி உண்டனர்; நீர் வேட்கை கொண்டபோது காட்டில் ஓடி வரும் ஆற்றுநீரை அருந்திக் களை தீர்ந்தனர்; மழைக்கும், வெயிலுக்கும், பனிக்கும் அஞ்சி மலை முழைஞ்சுகளிலும், மரத்தின் கிளைகளிலும் வாழ்ந்தனர். எலி வளைகளையும் பறவையின் கூடுகளையும் கண்ட நாகரிகமற்ற அம்மக்கள், அவ்வுயிர் இனங்களைப் போலத் தாமும் நிலைத்த பாதுகாப்பான தங்குமிடங்களை அமைத்துக் கொண்டு வாழ விரும்பினர். இவ்வாறு அவர்கள் உள்ளத்தில் தோன்றிய எண்ணம்தான் கட்டட நாகரிகத்தின் முதற்படி என்று கூறவேண்டும்.

அவர்கள் சிறிது நாகரிகம் பெறத் தொடங்கியதும் மண்ணாற் சுவர் எழுப்பி, அதன் மேல் இலை தழைகளைப் பரப்பிக் கூரைவேய்ந்து அதிலே குடியிருக்கத் தொடங்கினர். பிறகு மனித இனத்தின் நாகரிக வளர்ச்சிக் கேற்பக் கட்டடக் கலையும் வளர்ச்சி பெற்றது. மண்ணால் சுவர் எழுப்பிய மக்கள், பச்சைச் செங்கற்களையும், பிறகு சூளையில் வைத்துச் சுட்டெடுத்த செங்கற்களையும் பயன்படுத்தி வீடு கட்டத் தொடங்கினர். சங்க காலத்திலேயே தமிழ் மக்கள் அழகிய மாளிகைகளை

எழுப்பி அவற்றில் வாழ்ந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. நெடுநல்வாடை என்னும் சங்க நூலில் பாண்டியன் அரண்மனையின் சிறப்புப் பேசப்படுகின்றது. அவ்வரண்மனையில் மானின் கண் போன்ற சாளரங்கள் (மான் கண் அதர்) இருந்தன வென்றும், கழுநீர் வெளியிற் செல்லச் சிறந்த அமைப்புகள் அதில் இருந்தன வென்றும், அழகிய வேலைப்பாடமைந்த மரக்கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன வென்றும் நாம் அந் நூலிலிருந்து படித்தறியலாம். அவ்வரண்மனையில் பாண்டிமாதேவி பள்ளி கொள்வதற்கென்று அமைக்கப்பட்டிருந்த அறை கலைச் சிறப்புடன் விளங்கியதென்றும், அவ்வறையின் விதானத்தில் பல வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன வென்றும் அறியலாம்.

ஐம்பெருங்காப்பியங்களில் தலைசிறந்தவை யென்றும், காலத்தால் முற்பட்டவை என்றும் போற்றிப் பாராட்டப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் கட்டடக் கலையின் சிறப்புக்கள் விரித்துக் கூறப்படுகின்றன. இந்திர விழாவைக் காண்பதற்கு வந்த மக்களெல்லாரும் அழகிய மாளிகைகளின் முற்றங்களில் சுண்ணும்புச் சாந்தினல் அமைக்கப்பட்டிருந்த உருவங்களைக் கண்டு வியந்து நின்றனர் என்று மணிமேகலை கூறுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரன், சூரியன், சம்பாதி, சிவன், முருகன், திருமால் ஆகியோருக்கு எழுப்பப்பட்டிருந்த கோவில்களின் சிறப்பைச் சிலப்பதிகாரம் பலபடக் கூறுகின்றது.

ஆனால் அக்கட்டடங்களெல்லாம் காலத்தால் அழிவுற்றன. மன்னர்கள் வாழ்ந்த மாபெரும் அரண்மனைகள் யாவும் மண்ணோடு மண்ணாக மறைந்தன. பண்டைத் தமிழ் மன்னர்கள் தங்களுடைய பெருமையை நிலைநாட்டுவதற்காக மாபெரும் கோவில்களை எழுப்பினர். அவைகளுள் பல அழிந்து விட்டன. சங்க காலத்தில் கோவில்களெல்லாம் செங்கற்களாலும், மரத்தாலுமே கட்டப்பட்டன. முதன்முதலாக நாடெங்கும் பெருங்கோவில்களை எழுப்பியவன் சைவ சமயப் பற்றுமிக்க செங்கணான் என்ற சோழ மன்னனே. அவன் சிறப்பைச் சேக்கிழார் போன்ற பெரும் புலவர்கள் பாராட்டிப் பாடியிருக்கின்றனர். அம் மன்னன் செங்கற்களாலும் மரங்களாலுமே அக் கோவில்களை எழுப்பினான். அக்கோவில்கள் காலத்தால் அழிவுற்றன.

ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பல்லவர்கள் தமிழகத்தை ஆளத் தொடங்கினர். கட்டடக் கலையில் புதிய திருப்பத்தையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்கியவர்கள் இவர்களே. இவர்கள் காலத்திலேயே, பெரிய கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து அடுக்கிக் கட்டப்பட்ட கற்றளிகள் தோன்றின. முதல் முதலாகக் கற்றளிகளைத் தமிழகத்தில் எழுப்பிய மன்னன் இராச சிம்ம பல்லவன் என்பவன். காஞ்சியில் உள்ள ஏகாம்பர நாதர் கோயில் இவனால் கட்டப்பட்டதாகும். அஃது இன்றும் அழியாமல் இவன் சிறப்பைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

பல்லவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டில் சிறப்போடு ஆட்சி புரிந்தவர்கள் பிற்காலச் சோழர்கள் (Imperial Cholas). இவர்கள் தஞ்சையையும், கங்கை கொண்ட சோழபுரத்தையும் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இவர்களில் இராசராச சோழனும் அவன் மகனான இராசேந்திர சோழனும் குறிப்பிடத் தக்கவர்கள். இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோவிலும் இராசேந்திரன் எழுப்பியுள்ள கங்கை கொண்ட சோழபுரக் கோவிலும் தமிழ்நாட்டுச் சிற்பக் கலையின் சிகரங்களாகும். இச் சோழர்கள் வாழ்ந்த அரண்மனைகள் யாவும் அழிவுற்றன. எனவே சோழர் காலத்து அரண்மனைகளின் அமைப்பைப் பற்றி அறிந்து கொள்ளமுடியாமல் போய்விட்டது.

சோழர்களின் ஆட்சிக்குப் பிறகு, தஞ்சை மராட்டிய மன்னர்களின் கட்டடக் கலையும், மதுரை நாயக்க மன்னர்களின் கட்டடக் கலையும் குறிப்பிடத் தக்கவை. தஞ்சையிலுள்ள அரண்மனையும், கலைக்கூடமும் மராட்டியக் கட்டடக் கலையின் சிறப்பை விளக்குகின்றன. மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகால், நாயக்கர் காலத்துக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

வட இந்தியாவில் அமைந்துள்ள கட்டடங்களுக்கும் தமிழ் நாட்டில் அமைந்துள்ள கட்டடங்களுக்கும் வேறுபாடுண்டு. தமிழகக் கோவில்களில் காணப்படுவதுபோன்ற சிற்பக் கலையழகை வட இந்தியக் கோவில்களிலோ கட்டடங்களிலோ

காணமுடியாது. எனவே தமிழகக் கட்டடக் கலையை அவைகளினின்றும் வேறுபடுத்தி வேறு பெயர் கொடுத்து வழங்குகின்றனர்.

தக்கணத்தில் உள்ள அஜந்தாச் சிற்பங்களும், எல்லோராக் குகைக் கோவில்களும் குறிப்பிடத் தக்கவை. இவை முறையே சாளுக்கியர்களாலும், இராட்டிரகூடர்களாலும் உருவாக்கப்பட்டவை. தில்லி, ஆக்ரா, பதேபூர்சிக்ரி, தௌலதாபாத் ஆகிய இடங்களில் காணப்படும் கோட்டைகளும், மசூதிகளும், மாளிகைகளும், சமாதிகளும் இசுலாமியக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

இந்திய நாட்டில் மட்டுமன்றி, உலகில் வேறு பகுதிகளிலும் கட்டடக் கலை சிறப்புற்று ஓங்கியுள்ளது. எகிப்து நாட்டுக் கட்டடக்கலை தமிழ்நாட்டுக் கட்டடக் கலைக்குக் காலத்தால் முற்பட்டது. அங்குக் காணப்படும் பிரமிடுகளின் அமைப்பு உலக விந்தைகளு ் ஒன்றுகக் கருதப்படுகின்றது.

இராசராச சோழன் தஞ்சையில் எழுப்பிய கலைக்கோவிலைப் பற்றியும், உலகத்தின் மிகப் பழைய சின்னங்களான பிரமிடுகளைப் பற்றியும், இந்திய நாட்டின் பெருமைக்கு நிலைக்களனாக விளங்கும் பளிங்கு மாளிகையாம் தாஜ்மகாலைப் பற்றியும், போப் ஆண்டவரின் வாத்திகன் மாளிகையைப் பற்றியும் இந்நூலின்கண் விளக்கிக் கூறியிருக்கிறேன். இனிக் கதை தொடரும்.

## 2. தஞ்சைப் பெரிய கோவில்

முற்காலச் சோழர்களில் புகழ்பெற்றவன் கரிகாற் பெருவளத்தான். பிற்காலச் சோழர்களில் புகழ்பெற்றவன் முதலாம் இராசராச சோழன். இராச ராசன் தமிழக வரலாற்றில் முதலிடம் பெறத்தக்க சிறப்பு வாய்ந்தவன். இவன் வெற்றிச் சிறப்பில் சந்திரகுப்த மௌரியன், சமுத்திரகுப்தன், நெப்போலியன், அலெக்சாந்தர் போன்ற பெருவீரர்களுக்கு இணையானவன்; ஆட்சிச் சிறப்பில் மொகலாயப் பெருவேந்தனை அக்பருக்கு இணையானவன். தமிழக வேந்தர்களில், தென்னாடு முழுவதையும் வென்று ஒரு பேரரசை அமைத்த பெருமை இவனையே சாரும். கடல் கடந்து சென்று வெளிநாடுகளை வென்று, அங்கெல்லாம் தமிழர் அரசாட்சியை நிறுவிய முதல் மன்னன் இவனே. சேரன் செங்குட்டுவன் போன்றவர்கள் கடல்கடந்து சென்று, எதிரிகளைத் தோற்கடித்தார்களே தவிர, அங்கெல்லாம் தங்கள் ஆட்சியை நிறுவவில்லை.

இரண்டாம் பராந்தகச் சோழனுக்கு, அவன் மனைவியான வானவன் மாதேவியாரிடத்திலே பிறந்த அரும்பெறற் செல்வனே முதலாம் இராசராசன். இவன் ஐப்பசித் திங்கள் சதய நாளிலே பிறந்தான். பெற்றோர்கள் இவனுக்கு இட்டு வழங்கிய பெயர் அருண்மொழி வர்மன் என்பது. சேரனையும் பாண்டியனையும் வெற்றிகொண்ட காரணத்தால், இராசராசன் என்ற பட்டப் பெயர் இவனுக்கு ஏற்பட்டது. இப்பெயரே இவன் வாழ்நாள் முழுதும் நிலைத்துவிட்டது.

இவன் அரியணை யேறியதும் முதன் முதலாகப் பாண்டியரையும், சேரரையும் வென்றான்; பிறகு குடகு நாட்டையும், மைசூரின் ஒரு பகுதியான கங்கபாடியையும் வென்றான் ; பல்லவர்களை வென்று நுளம்பபாடியைக் கைப்பற்றினான் ; தெலுங்க நாட்டையும், கீழைச் சாளுக்கிய நாட்டையும், கலிங்க நாட்டையும் வென்று கைப்பற்றிக் கொண்டான்; ஈழநாட்டின் வடபகுதியைக் கப்பற் படையின் துணைகொண்டு வெற்றிகண்டான்; 'பழந்தீவு பன்னீராயிரம்' என்று பண்டைக் காலத்தில் குறிப்பிடப்பட்ட மாலத்தீவுகளையும் வென்றான். இவ்வாறு அரிய பல வெற்றிகளைப் பெற்ற இராசராச சோழன், தன் பெயர் என்றும் நிலைத்து நிற்பதற்காகத் தன் பெயரால் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான். அது 'இராசராசேச்சுரம்' என்ற பெயரைத் தாங்கி, இன்றும் அவன் புகழைப் பறை சாற்றிக் கொண்டு உயர்ந்து நிற்கிறது.

இராசராசன் தஞ்சைப் பெருங் கோவிலைக் கட்டியதற்கு வேறு பல காரணங்களும் உண்டு. அவன் கலைப்பிரியன். எனவே சிறந்த கலைக்கோவில் ஒன்றைக் கட்ட விரும்பினான். மற்றொரு சிறந்த காரணம், அவன் சைவ சமயத்தின்பால் கொண்டிருந்த அளவுகடந்த பற்றாகும். சோழர்கள் தில்லையிலுள்ள சிவன் கோவிலுக்குத் திருப்பணி புரிவதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். இவனும் அப் பணிகளைக் குறைவறச் செய்தான். இருந்தாலும் , தன் தலைநகராகிய தஞ்சாவூரில், தில்லைக் கூத்தப் பெருமானின் கோவிலைப்போன்று சிறந்த

ஒரு கோவிலைக் கட்ட வேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தான்.

பெருங்கற்களினால் கோவில் கட்டும் கலை பல்லவர் காலத்திலிருந்தே தமிழகத்தில் சிறப்புற்றிருந்தது. தமிழ் நாட்டின் முக்கிய ஊர்களிலெல்லாம் சிற்பக் கலையழகு மிக்க கோவில்கள் எழுந்தன. நாடெங்கும் சிற்பிகள் வாழ்ந்தனர். அவர்களை யெல்லாம் இராசராசன் தஞ்சைக்கு வரவழைத்தான். தலைமைச் சிற்பி கலைக்குப் பிறப்பிடமான காஞ்சி மாநகரத்தைச் சார்ந்தவன்.

இக் கோவிற்பணி கி. பி. 1005 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு நான்கு ஆண்டுகளில் முடிவுற்றது. தஞ்சை வயற்பாங்கான இடம். இங்கு மலைகளோ குன்றுகளோ இல்லை. இராசராசன் கட்ட விரும்பிய கோவிலோ பெரிய கோவில். பெருங்கோவில் அமைப்பதற்குப் பெரிய கருங்கற்கள் வேண்டும். ஆதலாலே கருங்கற்கள் நெடுந்தொலைவிலிருந்தே கொண்டு வரப்பட்டன. சிற்பிகள் குறிப்பிட்ட அளவிலே, கல் தச்சர்கள் பாறைகளைப் பிளந்தெடுத்தனர். யானைகள் அக்கற்களைத் தஞ்சைக்கு இழுத்து வந்தன. இக் கோவிற் பணியில் ஆயிரக் கணக்கானவர் ஈடு பட்டனர். இக்கோவில் கட்டப்பட்ட காலம், இராசராசன் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதி. நாட்டில் போர் ஒழிந்து அமைதி பெற்றிருந்த காலம். எனவே இராசராசன் தன் முழு முயற்சியையும் கோவில் கட்டுவதிலேயே ஈடுபடுத்தி இருந்தான். நாடெங்கும், தஞ்சையில் உருவாகும் இப் பெருங் கோவிலைப்பற்றியே பேச்சாக இருந்தது.

தஞ்சையில் சிவகங்கைச் சிறு கோட்டையின் தென்பகுதியில் இக்கோவிலுக்கு அடிக்கல் நாட்டத் தொடங்கினர். இக்கோவிலின் நீளம் ஏறத்தாழ 242 மீட்டர். அகலம் ஏறக்குறைய 121 மீட்டர். கோபுரத்தின் உயரம் சிறிது ஏறத்தாழ 65 மீட்டர். 65 மீட்டர் உயரம் உடைய கோபுரத்தை நடுவிலே கொண்ட பெரிய கோவிலுக்கு இடும் கடைக்கால் எவ்வளவு ஆழமும் அகலமும் பெற்றிருக்க வேண்டும் எனச் சிற்ப நூல்வல்லார் கணக்கிட்டுக் கடைக்கால் வெட்டுவித்தனர்.

அடிக்கற்கள் நாட்டப்பட்டபின், கருவறையையும், அதைச் சுற்றித் திருச்சுற்றுகள் முதலியவற்றையும் சிற்பிகள் கட்டத் தொடங்கினர். தமிழகத்தில் பொதுவாகக் கோபுரங்களைக் கருவறைக்கு எதிரே தனியாக அமைப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இச்சிற்பியோ கோபுரத்தைக் கருவறைக்கு மேலேயே எழுப்பினான். இக்கோவிலும் கோபுரமும் கருங்கல்லால் கட்டப்பட்டவை. அக்காலச் சிற்பிகள் கல்லைக் கல்லோடு சேர்ப்பதற்கு ஒருவகைக் கூட்டு மருந்தைப் பயன்படுத்தினர்; அது அட்டபந்தன மருந்து என்னும் பெயரோடு வழங்கியது; கீழ்க்கல்லில் துளையும், மேற்கல்லின் கீழ்ப் பொருத்தும் அமைத்து, இடையில் மருந்திட்டுக் கல்லைக் கல்லோடு சேர்ப்பர்; கற்களின் அளவுத்திட்டம், ஒவ்வொரு கல்லிலும் செதுக்குதற்குரிய சிற்ப வேலைப் பகுதிகள் முதலியவற்றையெல்லாம் முன்னரே முடிவு செய்துவிடுவர்; பின்னர் மிகச் சிறியவற்றையும் தவறின்றிப் பொறுமையாகச் செய்யத் தொடங்குவர்.

சிற்பிகளின் தலைவன் வகுத்துக் கொடுத்த அளவிலும் வடிவத்திலும், துணைச் சிற்பிகள் கற்களைச் செதுக்கிச் செப்பனிட்டு மெருகிடுவர். கோவில் எழுப்பக் குறித்திருந்த இடத்தைச் சுற்றிக் கல்லுளிகளின் ஓசையும், கற்களைச் சுமந்து செல்லும் கூலியாட்களின் ஏலப் பாட்டும், மிகவும் பாரமான கற்களை இழுத்துச் செல்லும் யானைகளின் பிளிற்றெலியும், பணியாளர்க்கு மோர் விற்கும் ஆய்ச்சியர் கூவும் பண்டமாற்றெலியும், மற்றும் பலவகை ஒலிகளும் முழங்கிக்கொண்டிருக்கும்.

நாற்சதுரமான அடித்தளத்தின்மீது கருவறை அமைக்கப்பட்டது. அதைச் சுற்றித் திருச்சுற்றும் அமைக்கப்பட்டது. கருவறைக்கு எதிரில் 58½ மீட்டர் நீளமும் 32½ மீட்டர் அகலமும் உடைய மண்டபம் அமைக்கப்பட்டது. கருவறைக்குக் குறித்திருந்த நாற்சதுரமான அடித்தளத்திலும், அதற்கு முன்னிலையில் எழுப்பிய மண்டபத் தளத்திலும் நிறுத்தவேண்டிய தூண்கள், அமைக்க வேண்டிய சுவர்கள் யாவும் தத்தமக்குரிய இடங்களில் அமைக்கப்பட்டபின் பணியாளர் கட்டி முடித்த அளவிற்கு மணலைக் கொட்டி மூடிச் சாரம் அமைத்தனர். கட்டடம் வளர வளரச் சாரமேடும் வளர்ந்தது.

கருவறையின் முன் மண்டபத்தைக் கல்லால் மூடிச் சாந்து பூசியதும், அதனையும் மணல்மேடு மூடியது. கருவறைக்குமேல் கோபுரம் நாள்தோறும் வளர்ந்து கொண்டு வந்தது. தமிழகத்திலுள்ள மற்றக் கோவில்களில் அமைந்துள்ள கோபுரங்களி

னின்றும் இது உருவத்தால் மாறுபட்டது. மற்றக் கோபுரங்களின் சதுர அளவு மேலே செல்லச் செல்லப் படிப்படியாகக் குறைந்திருக்கும். ஆனால் இக்கோவிற் கோபுரமோ மேலே செல்லச் செல்லச் சதுர அளவு மிகவும் குறைந்து, கூம்பி எழுந்துள்ளது. இது பதின்மூன்று மாடிகளைக் கொண்டது. கற்களாலேயே அமைக்கப்பட்டுள்ள இக் கோபுரம் சிற்பக் கலைக்குப் பெயர் பெற்றது. புராண நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் அரிய சிற்பங்கள், உள்ளத்தைக் கவரும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் ஒவ்வொன்றும், சிற்பக் கலையின் நுண்ணிய வேலைப்பாட்டுக்குச் சான்றுகளாக விளங்குவதோடு, அவற்றை அமைத்த சிற்பிகளின் கலை ஆற்றலையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கோபுரத்தின் உச்சியைப் பிரமரந்திரதளம் என்று சொல்லுவார்கள். இது சுமார் 7¾ மீட்டர் சதுரமுடையது. இந்த அளவுள்ள ஒரே கல்லைத் தேடிப் பொருத்த, அரசனும் சிற்பிகளும் விரும்பினார்கள். இந்தக் கல்லைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன.

ஒரு நாள் அரசன் உறங்கிக் கொண்டிருந்த போது சிவபெருமான் கனவில் தோன்றி, “நாம் கிழவியின் நிழலில் மகிழ்ந்திருப்போம்” என்று கூறினாராம். உறக்கம் தெளிந்து எழுந்த அரசன் மறுநாட் காலை பலரையும் அழைத்துக் கனவில் ஆண்டவன் கூறிய கிழவியைப் பற்றி விசாரித்தான். மக்கள் அழகி என்ற கிழவியைப் பற்றியும்,

அவள் சிவபக்தியைப் பற்றியும் அரசனிடம் எடுத்துக் கூறி விளக்கினர். உடனே அரசன் அக் கிழவியை அழைத்து விசாரித்தான். பிரமரந்திர தளத்தில் அமைப்பதற்கு ஏற்ற அளவுடைய ஒரு கல் தன் வீட்டு முற்றத்தில் கிடப்பதாக அக்கிழவி சொன்னாள். அரசன் தன் ஆட்களையும் யானைகளையும் அனுப்பி அக்கல்லைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான்.

தஞ்சாவூர் மாவட்டக் கழகப் பனகல் கட்டடத்திற்கு அருகில் 'அழகி குளம்', 'அழகி தோட்டம்' என்ற குளமும் தோட்டமும் உள்ளன. இவற்றை இராசராசன் அக்கிழவிக்குத் தீர்வையின்றிப் பதிவு செய்து கொடுத்தான் என்ற வரலாறு ஒன்று வழங்குகிறது. இதைப்பற்றிக் கூறப்படும் வேறொரு கதையும் உள்ளது. கோபுர வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோது, அழகி என்ற ஒரு கிழவி நீரும் உணவும் சிற்பிகளுக்குக் கொடுத்து உதவி செய்தாளாம். அவளுடைய பணிவிடையைப் பாராட்டக் கருதிய சிற்பிகள், அவள் வீட்டில் கிடந்த ஒரு கல்லைக் கொண்டுவந்து பிரமரந்திர தளத்தில் பொருத்தினார்கள் என்றும் கூறப்படுகிறது. இதைப்பற்றி வழங்கும் மூன்றாவது கதை பின்வருமாறு:

இக்கல்லை ஓர் இடையர் குலப்பெண் கொடுத்து உதவினாள். அவளுடைய சிவ பக்தியை வியந்த அரசன் அவளுடைய ஊரில் இராசராசேச்சுரம் என்ற பெயரால் ஒரு சிவன் கோவிலைக் கட்டினான். அக்கோவில் நாளடைவில் தாராசுரம் என்ற

பெயர் மாற்றத்தைப் பெற்றது. கும்பகோணத்திற்கு அருகில் தாராசுரம் என்ற சிற்றூர் உள்ளது. அதுவே இந்த இடைச்சியின் ஊர் என்று கூறப் படுகிறது. எப்படியோ பிரமரந்திரக்கல் கிடைத்தது.

இக்காலத்தில் இருப்பது போன்ற பாரந்தூக்கி கள் அக்காலத்தில் இல்லை. பிரமரந்திர தளக் கல் லின் எடை ஏறத்தாழ 81¼ மெட்ரிக் டன். அவ்வளவு பளுவான ஒரு கல்லைக் கோபுரத்தின் உச்சிக்குக் கொண்டு செல்வதென்பது எளிதான செயலா? இப்போது தஞ்சாவூருக் கருகில் சாரப்பள்ளம் என்ற ஓர் ஊர் உள்ளது. அவ்விடத்திலிருந்து மண்ணைக் கொட்டிப் பல மீட்டர் தொலைவிலுள்ள ஒரு சார மேட்டை அமைத்தனர். யானைகள் அக்கல்லை உருளைகளின்மேல் வைத்து உருட்டிச் சாரப்பள்ளம் வரை கொண்டுவந்து சேர்த்தன. பிறகு சில யானைகள் முன்னிருந்து இழுத்தன; சில யானைகள் பின்னிருந்து மேலே உந்தித் தள்ளின. சாரத்தின் மேல், கல் மெதுவாக ஏறிக் கோபுர உச்சியை அடைந்தது.

சிற்பிகள் பிரமரந்திர தளக்கல்லின் மீது அரைக்கோள வடிவமான கல் கட்டுமானம் அமைத்தனர். அதற்குத் தூபித்தறி என்பது பெயர். அதன்மீது வைக்கப்பட்டுள்ள செப்புக் குடத்தின் நிறை சுமார் 108 கி. கிராம் ஆகும். அதன்மீது தங்கத்தினால் ஆன தகடு போர்த்தப்பட்டு உள்ளது. இக்கோவில் விமானம் தக்கண மேரு எனப்படும். இதன் நான்கு மூலைகளிலும் முறையே இரண்டு நந்திகள் அமைந்துள்ளன. அவை

தனித்தனி ஏறத்தாழ 2 மீட்டர் நீளமும், 1¾ மீட்டர் அகலமும் கொண்டவை.

இக்கோவிலின் கருவறையில் அமைக்கப்பட்டிருக்கும் சிவலிங்கம் மிகவும் உயரமானது. இதனை நருமதை ஆற்றின் கரையில் உள்ள கரும்பாறையில் செதுக்கிக்கொண்டு வந்தனர் என்று கூறுவர். சிவலிங்கத்திற்கு எதிரே தனியாகக் கட்டப்பட்டுள்ள மண்டபம் ஒன்றில் சிற்பி, சிவபெருமானின் ஊர்தியாகிய நந்தியை ஒரே கல்லில் அமைத்து வைத்தான். இதன் உயரம், முன்பக்கத்தில் பீடத்திலிருந்து தலை வரை சுமார் 3¾ மீட்டர் எனவும், அதன் பின்பாகத்தின் உயரம் சுமார் 2¼ மீட்டர் எனவும், நடுவில் பீடத்திலிருந்து முகப்பு வரை சுமார் 3·15 மீட்டர் எனவும், அதன் மூக்கு நுனிமுதல் பின்பாகம்வரை சுமார் 4·87 மீட்டர் நீளம் எனவும், முதுகின் குறுக்களவு சுமார் 2·13 மீட்டர் எனவும் தொல்பொருளாராய்ச்சி வல்லார் கணக்கிட்டுக் குறித்திருக்கின்றனர். இந்நந்தியைத் தஞ்சைக்கு 640 கி.மீட்டர் தொலைவிற்கப்பாலிருந்து கருங்கல்லில் செதுக்கிக் கொண்டு வந்தனர் என்றும் கூறுகின்றனர். கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் உயரமும், நந்தியின் உயரமும் ஒரே அளவு எனவும், இரண்டும் சம மட்டத்தில் இருப்பவை எனவும் கூறுகின்றனர்.

தஞ்சைக் கோவிலின் திருப்பணி நடைபெற்ற காலத்தில் இராசராசன் நாள் தோறும் சிற்பிகளின் வேலையை மேற்பார்வையிட வருவது வழக்கம். சில நேரங்களில் சிற்பிகளின்மீது வெயில் படாத

வாறு தானே குடை கவித்து நிற்பான். ஒரு சமயம் சிற்பிகளின் தலைவன் நுணுக்கமான சிற்ப வேலை யில் ஆழ்ந்திருந்தான். அருகில் அரசன் வந்து நிற்பதையும் அவன் அறியவில்லை. சிற்பி, தன் அடைப்பைக்காரனின் பெயரைச் சொல்லி, 'வெற்றிலை மடித்துக் கொடடா' என்று சொன்னான். அந்நேரத்தில் அடைப்பைக்காரன் ஏதோ வேறு வேலையாகச் சென்றிருந்தான். அடைக்காய் இல் லாமையால் சிற்பியின் கவனம் சிதையுமே என்று அரசன் கருதினான். ஆகையால், அரசன் தானே அடைப்பைக்காரனாக இருந்து, வெற்றிலை மடித்துக் கொடுத்தானும். அவ்வெற்றிலைச்சுருளை வாயிலிட்டு மென்ற சிற்பி, அது வழக்கத்திற்கு மாருக நறு மணம் வீசுவதை உணர்ந்தான். தலை நிமிர்ந்து நோக்கினான். எதிரில் மன்னர் மன்னன் நின்று கொண்டிருந்தான். சிற்பி மனங்கலங்கினான். "அரசர் பெரும! நான் பெருந் தவறிழைத்து விட் டேன். நான் அறியாமல் செய்த பிழையை மன்னித் தருள வேண்டும்" என்று வேண்டினான்.

"நீவிர் ஏதும் பிழை செய்யவில்லை. ஆண்டவன் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் உமக்குத் தொண்டு செய்வதை என் நற்பேருகக் கருதுகிறேன். ஆண்டவன் அழகன். அவனை அழகுக் கோவிலில் அமைக்கிறீர் நீவிர். அவ்வழகுப் பணிக்குத் தொண்டு செய்வது என் கடமை" என்று கூறினான் இராசராசன். மன்னனின் அழகுணர்ச்சியை உணர்ந்த சிற்பி பெருமகிழ்ச்சியடைந்தான்; பெரிய கோவிலின் வேலை முற்றுப் பெற்றதும், அங்கேயே

அழகுத் தெய்வமான முருகப் பெருமானுக்கு எழில் மிக்க ஒரு கோவிலை அமைத்தான். அக் கோவிலை அமைப்பதில் தன் முழுத் திறமையையும் காட்டினான் அச்சிற்பி.

பெரிய கோவிலின் திருப்பணிகள் யாவும் முடிவுற்றன. இனிச் சிவலிங்கத்தைக் கருவறையில் எழுந்தருளச் செய்ய வேண்டும். அதற்காக அரசன் ஆதிசைவர்களை வரவழைத்தான். அவர்களும் மருந்து அறைத்து இலிங்கத்தைப் பந்தனம் செய்தனர். ஆனால் இலிங்கம் பொருந்த வில்லை. மருந்து இளகிப் போயிற்று. அரசன் உள்ளம் மிகவும் வருந்தினான்; யாது செய்வதென்று அறியாமல் மனம் குழம்பினான். அப்போது வானத்தில் ஓர் அசரீரி கிளம்பியது. "கருவூர்த் தேவரை அழைத்து இப்பணியைச் செய்! உன் கவலை தீரும்" என்று கூறியது அக்குரல். உடனே அரசன், "கருவூர்த் தேவர் என்பவர் யார்? அவர் எங்கிருக்கிறார்? அவரை இப்பொழுதே இங்கு அழைத்து வர வேண்டும்" என்று ஆணையிட்டான்.

ஆனால் அருகிலிருந்த ஒருவருக்கும் கருவூர்த் தேவர் யார் என்பது புரியவில்லை. அரசன் மீண்டும் பெருங் குழப்பத்திலாழ்ந்தான். அரசனின் குழப்பத்தைப் போக நாதர் என்ற சித்தர் உணர்ந்தார். சித்தரால் ஆகாத செயலும் உண்டோ? கருவூர்த் தேவர் எங்கிருக்கிறார் என்பதை அவர் தம் ஞானநோக்கால் உணர்ந்து தெரிவித்தார். கருவூர்த்தேவர் சேரநாட்டைச் சேர்ந்த ஒரு மலையில் வாழ்ந்து வந்தார். இராசராசன் வேண்டு

கோளுக்கு இசைந்து, அவர் தஞ்சைக்கு எழுந்தருளினர். தம்முடைய வாயிலிருந்த தம்பலத்தை மருந்தாகப் பயன்படுத்தி இலிங்கத்தைக் கருவறையில் பொருத்தினர் தேவர். வியக்கத்தக்க முறையில் உருக்கி வார்த்தாற் போல் அது பொருந்தியது.

தஞ்சைப் பெரிய கோவில் இந்திய நாட்டிலேயே தலைசிறந்த கோவில் என்று பிரித்தானியக் கலைக்களஞ்சிய நூல் (Encyclopaedia Brittanica) கூறுகிறது. இக்கோவில் தஞ்சையின் நடுவிலுள்ள சிவகங்கைச் சிறு கோட்டையின் தென் பாதியில் அமைந்துள்ளது. கோட்டையைச் சுற்றி ஆழமான அகழி ஒன்று அமைந்துள்ளது. கோவிலுக்குள் செல்பவர்கள் அகழி மேலுள்ள பாலத்தைக்கடந்து கோட்டைச் சுவரிலுள்ள வளைவுக்குள் நுழைந்து உள்ளே செல்ல வேண்டும். அகழியைக் கடந்ததும் அழகிய கோபுரம் ஒன்று தென்படும். அதைக் கடந்து உள்ளே சென்ருல் அகன்ற கோபுரம் தென்படும். பிறகு ஏறத்தாழ $152\frac{1}{2}$ மீட்டர் நீளமும் $76\frac{1}{4}$ மீட்டர் அகலமும் உடைய பெரு மன்றம் உள்ளது. அதன் எதிரில் அமைந்துள்ள பீடத்தின் மேல் மிகப் பெரிய நந்தி படுத்திருக்கிறது. தமிழகத்திலுள்ள வேறு எந்தக் கோவிலிலும் இவ்வளவு பெரிய நந்தியைக் காண முடியாது. இதன் கலையழகு கண்ணைக் கவரும் தன்மையது. உயிருள்ள காரெருது ஒன்று இளைப்பாறுவதற்காகப் படுத்திருப்பது போல் இது தென்படும். நாக்கை வெளியில் நீட்டி வளைத்து, மூக்கிற்குள் செலுத்தியிருக்கும் சிற்ப நயத்தை வியவாதார் எவரும் இருக்க முடி

யாது. அந்நந்தியின் பெருமிதமான தோற்றமும், காதுகளின் நெரிப்பும், முகப்பின் சரிவும், முதுகின் பரப்பும், வயிற்றின் வடிப்பும், கால்களின் மடிப்பும் குளம்புகளின் பிளப்பும் சிற்பியின் கைவண்ணத்தைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

இந்நந்தியைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. இந்நந்தி இராக் காலங்களில் வெளியில் சென்று பயிர்களை அழித்து வந்ததாம். இதனால் சினம் கொண்ட தஞ்சைப் பெருவுடையார், இதைக் கல்லாகுமாறு சபித்தாராம். இந்நந்தியின் அடியில் ஒரு தேரை இருந்ததாம். ஆண்டவன் சாபத்திற்குள்ளாகாத அத் தேரை நாள்தோறும் வளர்ந்ததாம். தேரை வளர வளர நந்தியும் வளரத் தொடங்கியது. இப்படியே விட்டு விட்டால் நந்தியின் வளர்ச்சி அளவற்றதாகி விடும் என்று உணர்ந்து, அதன் முதுகில் ஓர் இருப்பாணியை அடித்தார்களாம். அதன் பிறகு நந்தி வளருவதில்லையாம். நந்திக்கு முன்னால் இறைவன் கோவில் விமானமும், பக்கத்தில் பெரிய நாயகி கோவிலும் இருக்கின்றன.

கோவிலைக் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஆடல் அரங்கம், இசை அரங்கம் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இக்கோவிலுக்குக் 'கேரளாந்தகன் வாயில்', 'இராசராசன் திருவாயில்' 'அணுக்கன் திருவாயில்' எனப் பல வாயில்கள் உள்ளன. கருவறையைச் சூழத் 'திருச் சுற்று மண்டபம்' உள்ளது. துவாரபாலகர் வடிவங்களை வாயிலின் இருபுறமும் அமைத்துள்ளார்கள். பெருவுடை

யார் சந்நிதி தரை மட்டத்திற்குமேல் உயர்ந்த மேடையில் நிறுவப்பட்டிருப்பதால், மாடக்கோவில் என்று இது பெயர் பெற்றது போலும். படிகளில் ஏறி, உள்ளே செல்ல வேண்டும். துவாரபாலகர் களின் உருவம் மிகவும் கம்பீரமானவை; ஏறத்தாழ $5\frac{1}{2}$ மீட்டர் உயரமும், $2\frac{1}{2}$ மீட்டர் சுற்றளவும் உடையவை.

தென் வாயிலின் கிழக்குப்பகுதியில் திருமகளின் உருவமும், வடக்கு வாயிலின் கிழக்குப் பகுதி யில் கலைமகளின் உருவமும் அழகுடன் அமைந் துள்ளன. முன்னால் உள்ள திருவணுக்கன் திரு வாயிலுக்கு இருபக்கமும் அமைந்த படி வழியா கவே செல்ல வேண்டும். இராசராசன் கட்டிய காலத்தில் இப்படிகளே இருந்தன. இதற்கு எதிரில் இப்போது தென்படும் படிகள் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனான சரபோஜியினால் கட்டப் பட்டவை.

இராசராசன் சிறந்த சிவபக்தன் என்றும், அவன் சைவ சமயத்தின்பால் கொண்டிருந்த பற்று அளவற்றது என்றும் நாம் முன்பே அறிந் தோம். ஆனால் சமய வெறி அவனுக்கு இல்லை. பிற சமயங்களையும் போற்றும் பண்பு அவனிடம் உண்டு. எனவே கோவில் விமானத்துத் தென் பக்கத்து மதிற் சுவரில் திருமாலின் உருவத்தைப் பொறித்து வைத்தான். அவ்வுருவத்தைச் சுற்றிச் சோழ வீரர், பிள்ளையார், பிச்சாடனர், சூல தேவர், தக்கணாமூர்த்தி, மார்க்கண்டேயர், ஆடல்வல்லான் ஆகியோரின் உருவங்கள் அமைந்துள்ளன.

கோபுரத்தின் மேற்குப் பக்கத்து மதிலில் இலிங் கோற்பவர், அர்த்த நாரீச்சுவரர் ஆகியோரின் உருவங்கள் அழகாக வடித்து வைக்கப் பட்டிருக் கின்றன. வடபுறத்தில் கங்காதரர், கலியாண சுந்தரர், மகிடாசுரமர்த்தனி ஆகியோரின் உருவங் கள் செதுக்கப்பட்டுள்ளன.

திருச் சுற்று மண்டபத்தின் தென் பக்கத்தைத் தவிர மற்றைய பகுதிகளில் மகாலிங்கங்களும், நாக கன்னிகைகளின் பதுமைகளும், அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தர், மாணிக்க வாசகர் ஆகியோ ரின் சிலைகளும் அழகுடன் காட்சியளிக்கக் காண லாம். தென்பக்கத்திலுள்ள விக்கிரமன் வாயிலில் பௌத்த சிலைகள் தென்படுகின்றன. இச்சிலைகள் இராசராசன் சமயப் பொது நோக்கிற்கு மற்ருெரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கோபுரத்தின் கிழக்குப் பக்கத்தில் ஓர் ஐரோப் பியனின் உருவம் காணப்படுகிறது. இராசராசன் காலத்தில் யவனர், அராபியர் போன்ற வெளிநாட்டு வணிகர்கள் வாழ்ந்தார்களல்லவா? அவர்களில் ஒருவனுடைய உருவமாக இது இருக்கலாம் என்று கருதுகிருர்கள். ‘இச்சிலை இராசராசர் காலத்தில் வடிக்கப்படவில்லை; மராட்டிய மன்னர்களின் காலத் தில் அமைக்கப்பட்டது’ என்று சிலர் கூறுகிருர்கள். ‘பதினேழாம் நூற்ருண்டில் தஞ்சை இரகுநாதநாயக் கர் சபையில் இருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவனை ரோலண்டு கிரேப் என்ற பிரித்தானிய னின் வடிவமே இது’ என்றும் சிலர் கூறுகிருர்கள். ‘பதின்மூன்ரும் நூற்ருண்டில் தமிழகத்தில் சுற்றுப்

பயணம் செய்த மார்க்கோ போலோ என்ற இத்தாலியப் பிரயாணியின் சிலையே இது' என்று வேறு பலர் கூறுகிறார்கள். இப்படியாகப் பல கருத்துக்கள் இச்சிலையைப் பற்றி வழங்குகின்றன. தஞ்சைப் பெரிய கோவிலின் கோபுரத்தை அமைத்த சிற்பி, தன் முன்னறிவால் சோழ மன்னன் சிலையையும், சோழர்களுக்குப் பிறகு தஞ்சையை ஆண்ட பரம்பரைகளையும் வடித்தான் என்றும் கூறுகிறார்கள்.

தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் உட்புறச் சுவரில் இராசராசன் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் உள்ளன. அவை இடைக்காலச் சோழர்களின் ஓவியக் கலைச் சிறப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இந்த ஓவியங்களின் சிறப்பை உணராத நாயக்க மன்னர்கள், பதினேழாம் நூற்றாண்டில், இவற்றின்மீது சுண்ணச் சாந்தைப் பூசிவிட்டு வேறு ஓவியங்களைத் தீட்டி யிருக்கின்றனர். அச்சாந்து உதிர்ந்துள்ள இடங்களில் சோழர் கால ஓவியங்கள் தென்படுகின்றன. இதைக் கண்டு தமிழ் நாட்டிற்கு வெளிப்படுத்தியவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரலாற்று விரிவுரையாளராக இருந்து, அண்மையில் காலஞ்சென்ற திரு. ச. க. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள். இவ்வோவியங்களைப் பற்றி எழுதிய தம் கட்டுரையில், "இவ்வோவியங்கள் இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டபோது, அதாவது கி. பி. 1010 ஆம் ஆண்டு வாக்கில் தீட்டப்பட்டிருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். இவ்வோவியங்களின் சிறப்பைப் பார்ப்போம்.

மேற்புறச் சுவரில் நடராசப் பெருமானின் சிற்ப வடிவம் அமைந்துள்ளது. இவ்வடிவத்தின் இரு புறங்களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. ஒரு பக்கத்தில், சிவபெருமான் மான்தோல் இருக்கையின்மீது கண்ணை மூடிக்கொண்டு யோகத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு எதிரில் சிவனடியார்களும், சிவகணங்களும் நின்றுகொண்டு பணிவோடிருக்கும் காட்சி தீட்டப்பட்டிருக்கிறது. அதை அடுத்து அழகான போர்வையும், நான்கு தந்தங்களும் உடைய வெள்ளை யானை ஒன்றும் தென்படுகிறது. அதன்மீது தாடியோடு கூடிய ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவர் தம் கையிலுள்ள தாளத்தை முழக்கி இன்னிசை பாடிக் கொண்டிருக்கிறார். அந்த ஓவியத்திற்கு அருகில் வெள்ளைக் குதிரையின்மீது ஏறிக்கொண்டு உடற்கட்டுடைய ஒருவர் விரைவாக வான வீதியில் சென்று கொண்டிருக்கிறார்.

மற்றொரு பக்கத்தில் வேதியர் பலர் கூடி அமர்ந்துள்ள அவை ஒன்று உள்ளது. அவ்வவையின் எதிரே ஓலையைக் கையில் தாங்கியபடி முதியவர் ஒருவர் தென்படுகிறார். அவருக்கு எதிரில் அடக்கமே உருவான இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருக்கிறான். அவனுக்கு வலப்பக்கத்தில் கோவில் விமானமொன்றும், அதற்குள் நுழைவதற்கு விரைந்து செல்லும் வேதியர் கூட்டமொன்றும் தெரிகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஓவியங்கள் யாவும் சைவ சமய ஆசிரியர்களுள் ஒருவரான சுந்தர

மூர்த்தியின் வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் முதியவர் வேடந்தாங்கி வந்து, திருமணத்தின்போது தடுத்தாட் கொண்ட நிகழ்ச்சியையும், வேதியர் அவையில் அவ்விருவரும் வழக்குரைத்த நிகழ்ச்சியையும், சுந்தரர் வெள்ளை யானையின்மீது ஏறிக் கைலாயம் செல்லும் நிகழ்ச்சியையும், அவர் பிரிவைப் பொறுக்க முடியாத சேரமான் பெருமாள் நாயனார் குதிரைமீது ஏறி அவருக்கு முன் கயிலையை அடைந்த நிகழ்ச்சியையும் இந்த ஓவியங்கள் யாவும் அழகாக விளக்குகின்றன.

வேறோர் இடத்தில் இல்வாழ்க்கையை இனிது விளக்கும் ஓவியங்கள் உள்ளன. பல பெண்கள் சமையல் கூடத்தில் உணவு சமைக்கும் காட்சியும், சமைத்த உணவினைக் கணவனுக்கு இட்டு மகிழும் காட்சியும் எழுதப்பட்டுள்ளன.

இச்சுவரின் மற்றொரு பகுதியில் தில்லைப் பொன்னம்பலம் போன்றதொரு மண்டபத்தின் கூரையும், கூத்தப் பெருமான் உருவத்தின் ஒரு பகுதியும் எழுதப்பட்டுள்ளன. அதன் அருகில் ஒரு சிவனடியாரும், மூன்று பெண்களும் கைகூப்பி ஆண்டவனை வணங்கும் காட்சி எழுதப்பட்டுள்ளது. மண்டபத்தின் வெளியே அரசனும் அரசியும் நின்று கொண்டிருக்கின்றனர். மற்றும் நான்கு பெண்களும், ஆறு ஆடவர்களும் பக்தியோடு வணங்கும் காட்சிகள் கண்ணைக் கவரும் விதத்தில் வரையப்பட்டுள்ளன. இங்குக் காணப்படும் பெண்ணுருவங்கள் நுண்ணிய கலைச்சிறப்போடு விளங்கு

கின்றன. இம்மகளிர் அனைவரும் பூவேலை செய்த கரைகளையுடைய ஆடைகளும், முத்து மாலைகளும், பலவித அணிகளும் பூண்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிரில் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்து எழிலோடு அமர்ந்திருக்கும் இரு பெண்களின் உருவமும், அடியில் மூன்று பெண்களின் தலைகளும் காணப்படுகின்றன. இந்த ஓவியங்களுக்கு அடுத்தாற்போல், கூட்டமாக அமர்ந்துள்ள இருபது பெண்கள் சிறு அளவில் வரையப்பட்டுள்ளனர்.

வடக்குப்புறச் சுவரில் சிவபெருமான் முப்புரத்தை எரித்த காட்சி எழுதப்பட்டுள்ளது. ஒரு பக்கம் தேவர்களும், மற்றொரு புறம் அசுரர்களும், நடுவில் உயர்ந்த தேரில் சிவனும் வரையப்பட்டுள்ளனர். சிவபெருமானின் எட்டுக் கைகளில் எட்டுவிதப் படைகள் திகழ்கின்றன. அவருடைய புருவங்கள் வில்லைப்போல் வளைந்திருக்கின்றன. மூன்றாவது கண் பிதுங்கிக் கொண்டிருக்கிறது. மூக்குத் தொளைகள் அகன்று திறந்துள்ளன. தலையின் நிலை போருக்கு அறைகூவும் பாவனையில் அமைந்துள்ளது. முகத்தில் சினக்குறி இல்லாவிடினும், பெருமிதமும், வீரமும், ஆற்றலும் பொலிகின்றன. உதடுகளிலும் கண்களிலும் ஒருவித ஏளனச் சிரிப்புத் தவழ்கின்றது. இந்த ஓவியம் இடைக்கால ஓவியக்கலையின் சிகரம் என்று சொல்லலாம்.

இச்சுவரில் காணும் அரக்கரும், அரக்கப் பெண்டிரும் அழகாகவே தீட்டப் பட்டுள்ளனர்.

உருண்டு திரண்ட தசை நார்களும், அச்சத்தை ஊட்டும் கண்களும், மீசையும் உடைய அரக்கர் அஞ்சாமையோடு போர் செய்கின்றனர். அச்சங் கொண்ட அரக்க மகளிர் தங்கள் வீரக் கணவரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு புலம்பு கின்றனர். அரக்க மகளிர் மானிட மகளிரைப் போலவே மெல்லினத்திற்குரிய அங்க அழகு களோடு காட்சியளிக்கின்றனர். இச்சுவருக்கு எதிரே உள்ள சுவரில், சுண்ணும்புப் பூச்சுக்கு அடியில் பலவித அரிய அணிகலன்கள் அமைக் கப் பெற்ற திருமுடிகளைத் தரித்த நான்கு தேவர் களின் முகங்கள் தென்படுகின்றன. காதளவு நீண்டு ஒளிவிடும் கண்களும், வளைந்த புருவங் களும், காதிலும், கழுத்திலும் மிளிரும் பலவித ஆபரணங்களும் இம்முகங்களுக்குப் பேரழகூட்டு கின்றன.

பழைய இந்திய ஓவியங்களைப் போலவே இவை யாவும் முதலில் எல்லைக் கோடுகள் வரைந்து பின்னர் வண்ணந் தீட்டப்பட்ட ஓவி யங்களாகும். இக் கோடுகள் மிக நுண்மையான தூரிகைகளால் எழுதப்பட்டிருப்பது வெளிப்படை. தசையின் நிறத்தைக் காட்டத் தூய வெள்ளை, மஞ்சள், நீர்க்காவி, பச்சை ஆகிய வண்ணங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. விரல்கள், மூக்கு முதலிய உறுப்புக்கள் மிக நுண்மையாக வரை யப் பட்டுள்ளன. பல வித ஓவிய வேலைப்பாடுகள் அமைந்த கரைகளை உடைய ஆடைகளும், பல வித முடியணிகளும், காதணிகளும், கழுத்தணி

களும் உருவங்களுக்கு அழகு தருகின்றன. இங்குக் காணப்படும் குதிரையிலும் யானையிலும் கூட அலங்காரங்களைக் காணலாம். யானையும் குதிரையும் மட்டுமன்றி எருது, மயில் போன்ற விலங்குகளும் பறவைகளும் காணப்படுகின்றன. இங்குள்ள ஆண் உருவங்களிலெல்லாம் தாடி காணப்படுகிறது. சோழர் காலச் சிற்பங்களிலும் தாடி காணப்படுவதால், இக்கோலம் சோழர் காலத்தின் பழக்க வழக்கங்களில் ஒன்று போலும். கை தேர்ந்த ஓவியர்களால் வரையப்பட்ட இவை யாவும் அஜந்தாவின் மிகச்சிறந்த ஓவியங்களுடன் ஒப்பிடுவதற்குரியன வென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இராசராசன் தஞ்சைப் பெரிய கோவிலைத் தன்னுடைய நேரான மேற்பார்வையில் வைத்துக் கொண்டான். அவனுக்குப் பிறகு வந்த மன்னர்களும் அவ்வாறே செய்தனர். இராசராசன் கோவிலுக்கெனப் பேரளவில் நிலங்கள் மானியமாக அளித்தான்; ஆபரணங்கள் வழங்கினான்; நாள் வழிபாடுகளுக்கு வேண்டிய வசதிகளும் செய்து வைத்தான், திருமுறை ஓதுவதற்கென ஓதுவார்களையும், இன்னிசை முழக்குவதற்கென்று இசைக் கலைஞர்களையும்; திருவிழாக் காலங்களில் ஆடல் நிகழ்த்துவதற்கென்று ஆடல் மகளிரையும் அமர்த்தினான். அவர்கட்கு ஆண்டுதோறும் மானியமாக நெல்லும், பொருளும் வழங்கினான். கோவிலின் நடுவிலுள்ள திறந்த வெளியில் ஒரு மேடை அமைந்திருப்பதை இன்றும் காணலாம். அதன் எதிரில் அழகிய ஒரு மண்டபம் உள்ளது. விழாக்

காலங்களில் ஆடல் மகளிரும் கூத்தரும் அம் மேடையில் ஏறித் தங்கள் கலைத்திறனை வெளிப் படுத்துவர். அரசர் தம் பரிவாரத்தோடு அம் மண்டபத்தில் அமர்ந்து ஆடலைக் கண்டு களிப் பார். இவ்வழக்கம் சரபோஜியின் காலம் வரையில் இருந்து வந்தது. சரபோஜியின் காலத்தில் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சியை' ஆடல் மகளிர் இம்மேடையில் ஏறி நடித்துக்காட்டுவர்.

தஞ்சை இராசராசேச்சுரம், காலத்தை வென்ற ஒப்பற்ற கலைத்திறனுக்குச் சான்று பகருகிறது. இது கடவுளின் கோவில் மட்டுமன்று; கலையின் பெரிய கோவில் என்றும் கூறலாம். இதனுடைய கோபுரம் தஞ்சையை அணி செய்யும் கலைப் பெரும் ஓவியம்! தஞ்சையின் வரலாற்றுக்கு ஒரு முன்னுரை! எத்தனையோ கோபுரங்கள் மிடுக் குடன் அடுக்கடுக்காய் அமைந்து தமிழகத்தை அலங்கரிக்கின்றன. ஆனால் அழகு வளர்க்கும் கோபுரம் பெரிய கோவில் கோபுரமே. இது தமிழகத்துப் பெருஞ்செல்வம்.

# 3. பிரமிடு

உலகில் மிகவும் பழமையான நாகரிகம் என்று குறிப்பிடத்தக்கவை சிலவே. சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழர் நாகரிகம் மிகத் தொன்மையானது என்று நாம் பெருமைப்படு கிறோம். பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடல் கடந்து சென்று கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து, அரே பியா முதலிய நாடுகளுடன் வாணிகம் செய்தனர் என்பதைச் சங்க இலக்கியங்களின் மூலமாகவும், கிரேக்க, உரோம ஆசிரியர்களின் பிரயாணக் குறிப் புகள் மூலமாகவும் அறியலாம். பழம் பெரும் கடற்றுறைமுகப்பட்டினமான பூம்புகாரில் வெளி நாட்டு வணிகர்கள் கடற்கரையின் ஓரத்தில் கண் கவர் மாளிகைகளை எழுப்பி அவற்றில் வாழ்ந்தனர்.

ஐரோப்பாக் கண்டத்து மக்கள் நாகரிக நுட்பம் தெரியாது வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் மூவேந் தர்களின் பண்பட்ட ஆட்சி நிலவியது. இயல், இசை, நாடகம் சிறப்புற்று விளங்கின. கட்டடக்கலை யும் பிற கலைகளும் போற்றற்குரிய வளர்ச்சியைப் பெற்றிருந்தன.

இத்தகைய பழம்பெரும் நாகரிகமான தமிழர் நாகரிகத்திற் கிணையான மிகத்தொன்மையான நாக ரிகம் ஒன்று உண்டு. அதுதான் எகிப்திய நாகரிகம். அந்நாகரிகம் சாக்ரட்டீசு, பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற அறிஞர்கள் அரும்பாடு பட்டு வளர்த்த கிரேக்க நாகரிகத்திற்கும் முற்பட்டது. சீசர் போன்ற பெருவீரர்கள் கடல்கடந்து பரப்பிய

உரோம நாகரிகத்திற்கும் முற்பட்டது. உலகத்தையே கட்டியாண்ட உரோமானியர்கள் எகிப்து நாட்டிற்குள் காலடி எடுத்து வைத்த பொழுது, அங்கு விண்ணையிடித்து நிமிர்ந்து நின்ற பிரமிடுகளையும், மாபெரும் கோவில்களையும், கலை நுணுக்கம் மிக்க சிற்பங்களையும், வானளாவிய அழகுத் தூண்களையும் கண்டு வியப்படைந்தனர். அவ்வழகுச் சின்னங்களைத்தான் அவர்களால் காண முடிந்ததே தவிர, அம்மாபெரும் நாகரிகத்தின் சிற்பிகளான அம்மக்களைப் பற்றி எதுவும் அறிந்து கொள்ள முடியவில்லை. உரோமானியர்கள் காலடி வைப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே அந்நாகரிகம் அழிந்துபட்டது.

எகிப்து நாட்டு நாகரிகச் சின்னங்களை நேரில் கண்டு வியந்த பண்டைக் காலத்து மக்கள், "இந் நாகரிகம் மிகவும் பழமையானது. இந்நாகரிகத்தை உருவாக்கிய மக்கள் கட்டடக் கலையிலும், சிற்பக் கலையிலும் வல்லவர்கள்; பாறைகளைப் பிளந்தெடுப்பதிலும், பளுவான பெரும் பொருள்களை இடம் பெயர்த்துக் கொண்டு செல்வதிலும், பெரும் பாறைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி மலைபோன்ற கோபுரங்களை எழுப்புவதிலும் ஆற்றல் படைத்தவர்கள்!" என்று மட்டுமே எண்ணியிருந்தனர். ஆனால் இந்நாகரிகத்தின் தலைவர்களான பாரோ மன்னர்களைப்பற்றியும், அவர்கள் சிறப்புக்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாத நிலையில் இருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டு மக்களான நாம், உரோமானியர்களைவிட இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்

பிற்பட்டவர்கள் என்ருலும், பாரோ மன்னர்களைப் பற்றியும், அவர்களுடைய பழம் பெரும் நாகரிகத்தைப்பற்றியும் மிகத் தெளிவாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. பத்தொன்பது-இருபதாம் நூற்ருண்டுகளில் புதை பொருள் ஆராய்ச்சி சிறப்புறத் தொடங்கியது. நிலத்திற்கடியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் புதையுண்டு மறைந்த பொருள்களையெல்லாம் தோண்டி எடுத்துப் பழமையான நாகரிகச் சிறப்புக்களையெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

பாரோ மன்னர்களின் எகிப்திய நாகரிகம் அழிந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆனுலும், அவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பங்களும், தூண்களும், நாகரிகச் சின்னங்களும் நிலத்திற்குள் இன்றும் மறைந்து கிடக்கின்றன. புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் இன்று அவற்றையெல்லாம் தோண்டி எடுத்துள்ளனர். தோண்டியெடுக்கப்பட்ட அச்சிற்பங்களெல்லாம் சிறிது கூடப் பழுதுபடாமல், சிற்பியின் கையிலிருந்து புதிதாக வெளிப்பட்டவை போல் தோன்றுகின்றன. எகிப்து நாட்டில் படிந்திருக்கும் மணலும், தட்பவெப்ப நிலையுமே இதற்குக் காரணம்.

எகிப்து நாட்டில் எந்த இடத்தைத் தோண்டினுலும், பழங்காலச் சின்னங்களைக் காணலாம். இதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. உலகில் வாழ்ந்த மக்கள் எல்லாரும் இறப்பிற்குப்பின் ஒரு வாழ்க்கை உண்டு என்று நம்பினர். தமிழ் மக்

களாகிய நாம்கூடச் சுவர்க்கம், நரகம் இவற்றில் நம் பிக்கையுடையவர்களாக இருக்கிறோம். இறந்த பிறகு ஒருவன் தான் செய்த பாவ புண்ணியங் களுக்கேற்ப நன்மையோ, தீமையோ வேறொரு உலகில் சென்று அடைவதாக நம்புகிறோம். எகிப்தில் வாழ்ந்த பண்டைய மக்கள், ஒருவன் இறந்த பிறகு அவனுடைய ஆவி வசதியோடு வாழ்வதற்கு வேண்டிய தேவைப் பொருள்களையும் அவன் பிணத்தோடு வைத்துப் புதைப்பது வழக்கம். ஒரு பாரோ மன்னன் இறந்தால் தேர், குதிரை, பல்லக்கு, ஆடை, அணி, அள வற்ற செல்வம் ஆகியவற்றையும் அவனுடன் வைத்துப் புதைப்பார்கள்; செல்வராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அவரவர் தகுதிக்கு ஏற்ற முறையில் தேவையான பொருள்களை வைத்துப் புதைப்பார்கள். இவ்வாறு கோடிக்கணக்கான மக்கள் எகிப்து மண்ணில் புதைக்கப்பட்டனர். இக்காரணத்தால் எகிப்து நாட்டில் எந்த இடத் தைத் தோண்டினாலும் பண்டைய நாகரிகச் சின்னங்கள் தென்படுகின்றன.

கிரேக்க நாட்டு வெற்றி வீரனான அலெக்சாந்த ரும் உரோம நாட்டுத் தலைவனான சீசரும் எகிப்தை வென்றபொழுது, அந்நாட்டின் நாகரிகச் சின்னங் களைக் கண்டு வியப்படைந்தார்களே யல்லாமல், அவைகளைப்பற்றி ஆராய வேண்டும் என்று எண்ணியதில்லை. ஆனால் பிரெஞ்சு நாட்டுப் பேரரசனான நெப்போலியன் எகிப்து நாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது ஆ ரா ய் ச் சி

யாளர் பலரையும் உடன் அழைத்துச் சென்ருன். அவ்வாராய்ச்சியாளர்கள் எகிப்து நாட்டில் தங்கி, அந்நாட்டின் பழமையான நாகரிகத்திற்குக் காரணமாக விளங்கிய சின்னங்களையெல்லாம் ஆராயத் தொடங்கினர்.

தேனுன் என்ற ஆராய்ச்சியாளர், பெரு முயற்சி எடுத்துக் கொண்டு தம் ஆய்வுகளை நிகழ்த்தினுர்; தம் ஆராய்ச்சிகளின் பயனுக வெளிப்பட்ட உண்மைகளை யெல்லாம் ஒன்று திரட்டி இருபத்து நான்கு பகுதிகளடங்கிய ஒரு பெரு நூலாக எழுதி வெளியிட்டார். "எகிப்து நாட்டின் வருணனை" என்பது அந்நூலின் பெயர் ஆகும். அந்நூல் வெளியானவுடன் எகிப்து, உலக மக்களின் கவனத்தைக் கவரத் தொடங்கியது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் எகிப்து நாட்டில் வந்து கூடினர். பழமைச் சிறப்பைப் பறைசாற்றிய வண்ணம் நிமிர்ந்து நிற்கும் அச்சின்னங்கள் கண்டோரைப் பெரு வியப்பில் ஆழ்த்தின.

எகிப்து மணலில் புதைந்து கிடந்த எண்ணற்ற சிற்பங்களும், விண்முட்டும் தூண்களும், பரப்பிலுயர்ந்த கற்கோவில்களும், பார்த்தவர்களின் உள்ளத்தை மலைக்க வைக்கும் பிரமிடுகளும், அப்பிரமிடுகளுக்குள் பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பாரோ மன்னர்களின் பிணங்களும் அவர்களுடைய அன்ருட உரையாடல்களாகி விட்டன. எல்லா நாட்டு மக்களும் எகிப்து நாட்டுப் பழஞ்சின்னங்களைத் தத்தம் பொருட்காட்சி நிலையங்களில் கொண்டுவந்து சேர்க்கப் போட்டியிட்டனர்.

எகிப்து நாட்டைப் பழம்பொருள்களின் சுவர்க்கம் என்று குறிப்பிடலாம். அங்குக் காணப்படும் பழம் பொருள்களில் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்வது பிரமிடுதான். பிரமிடுகளை நாம் படத்தில் பார்த்திருக்கிறோம். அவைகளைப் படத்தில் பார்த்தால், அவற்றின் சிறப்பு நமக்குத் தெரியாது. அவற்றைக் கண்ணெதிரில் கண்டால்தான், அவைகளுடைய சிறப்பு நமக்குப் புலப்படும். எகிப்து நாட்டில் வந்து காலடி வைத்தவுடன், பிரமிடைப் பார்த்ததும் எல்லாருடைய உள்ளத்திலும் பல கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பும்.

எகிப்து நாட்டை ஆண்ட பாரோ மன்னர்கள் இவ்வளவு பெரிய செயற்கை மலைகளை நிறுவக் காரணம் என்ன? கல்லே கிடைக்காத பாலை நிலத்தில் மாபெரும் பாறைகளை எவ்வாறு கொண்டு வந்தார்கள்? பெரும் பாறைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அக்காலத்தில் அவர்களால் எப்படி அடுக்க முடிந்தது? இம்மலைகளை உருவாக்க எவ்வளவு மக்கள் இடையறாது உழைத்திருப்பார்கள்? எவ்வளவு பொருள் செலவாகி இருக்கும்? என்பன போன்ற கேள்விகள் தோன்றும். அங்குள்ள பிரமிடுகளில் மிகவும் பெரியது ஏறத்தாழ 137½ மீட்டர் உயரமுடையது; ஏறத்தாழ 805 மீட்டர் சுற்றளவுடையது. இதன் பருமனை எண்ணும்போது, உலக விந்தைகளில் இதுவும் ஒன்று என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஒரு மனிதன் இறந்தவுடன், அவனுடைய ஆவிக்கும் உடலுக்கும் மீண்டும் எந்தவிதத்

தொடர்பும் இல்லை என்பது நம்முடைய நம்பிக்கை. ஆனால் பண்டைய எகிப்தியரின் கொள்கை அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். ஒருவன் இறந்தவுடன் அவனுடைய ஆவி, மறு உலகம் செல்வதில்லை யென்பதும், அவனுடைய உடலையே சுற்றிக் கொண்டிருக்கும் என்பதும் அவர்களுடைய கொள்கை. ஆவி பிரிந்ததும் உடல் அழிந்துவிடும் என்று நாம் கருதுகிறோம். அவர்கள் அவ்வாறு கருதவில்லை. உடல் உலகில் எதுவரை அழியாமல் இருக்கிறதோ, அதுவரை ஆவிக்கும் அதற்கும் தொடர்புண்டு என்று கருதினர். உடலின் ஒரு பகுதி அழிந்தால் ஆவியின் ஒரு பகுதி அழிகின்ற தென்றும், உடல் முழுதும் அழிந்தால் ஆவியும் அடியோடு அழிந்து விடுகின்ற தென்றும் அவர்கள் நினைத்தனர். எனவே உடலை அழியாமல் பாது காத்தால், ஆவியையும் அழியாமல் பாதுகாக்க முடியும் என்று அவர்கள் கருதினர்.

உடலை எவ்வாறு அழியாமல் பாதுகாப்பது என்பதைப்பற்றி அவர்கள் சிந்தித்தனர்; ஒரு விதத் தைலத்தைக் கண்டுபிடித்தனர். அத்தைலத்தில் பிணத்தைப் போட்டுப் பதப்படுத்தினர். அவ்வாறு பதப்படுத்தப்பட்ட சடலங்கள் நான்காயிரம் ஆண்டுகள் ஆகியும் இன்றும் அழியாமல் இருக்கின்றன. அவ்வுடல்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது அவர்களது அடுத்த கடமை யாயிற்று. அதற்காக மாபெரும் பிரமிடுகளை எழுப்பி அவற்றுக்குள் அவ்வுடல்களை வைத்து மூடினர். பிரமிடு எகிப்தியர்களின் குறிக்கோளாக மாறிவிட்டது.

ஏழையாக இருந்தால் பூமிக்குள் ஓர் உறுதியான கல்லறை அமைத்து, அதற்குள் அவனுடைய உடலைப் பதுப்படுத்தி வைத்தனர். செல்வர்கள் பெரிய கல்லறைகளை எழுப்பினர். எகிப்து நாட்டை ஆண்ட பாரோ மன்னர்கள் தங்களைக் கடவுளுக்கு ஒப்பாகக் கருதி வந்தனர். புனிதமான தம் உடலை அழியாமல் காக்கப் பெரிய மலைகளை எழுப்பினர்.

குபு என்ற பாரோ மன்னன், தான் இறந்தபின் தன் உடலைப் பேணிப் பாதுகாப்பதற்காக எழுப்பிய பிரமிடு குறிப்பிடத்தக்கது. அதைக் கட்ட முப்பது ஆண்டுகள் பிடித்தனவாம். பல்லாயிரக் கணக்கான எகிப்து மக்கள் அப்பணியில் ஈடுபட்டனர். அதைக் கட்டுவதற்கு நிறையப் பொருள் வேண்டுமல்லவா ? அதனுல் தாங்கமுடியாத கொடிய வரிகளை விதித்து நாட்டு மக்களின் செல்வத்தை அவன் உறிஞ்சினன். தன்னுடைய உடலையும், செல்வத்தையும் கள்வர் கவர்ந்து செல்லமுடியாதபடி மறைவு வழிகளை அதில் அமைத்தான். எகிப்து நாட்டுச் சிற்பிகள் தம் நுண்ணறிவையெல்லாம் பயன்படுத்தி இப்பிரமிடை எழுப்பினர்.

ஒருவன் இறந்த பிறகு அவன் உடலைச்சுற்றித் திரியும் ஆவிக்கு வாழ்க்கையுண்டு என்று எண்ணிய எகிப்தியர் இவ்வுலகில் வாழும் மக்களுக்கு ஏற்படும் இன்ப துன்பங்கள் ஆவிகளுக்கும் ஏற்படுகின்றன என்று கருதினர். மக்களின் அன்றட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையெல்லாம் பிரமிடுகளில் பாரோ மன்னர்கள் வைத்துப் புதைத்தனர். பட்டாடைகள், பொன்

அணிகள், வைர மாலைகள் போன்ற ஆடம்பரப் பொருள்களையும் வைத்துப் புதைத்தனர். அரசனுடைய ஆவி அமர்ந்து களைப்பாற அரியணையும், படுத்துறங்கப் பஞ்சணையும் உடன் வைத்தனர். இன்னும் வேறு தேவைப் பொருள்களான ஆடு, மாடு, குதிரை, தானியம், பொன் ஆகியவற்றையும் உடன் வைத்து மூடினர். அரசனின் பிரிவைத் தாங்கமுடியாத நெருங்கிய உறவினரும், கணவன் ஆவியோடு இன்பவாழ்வு நடத்த விரும்பிய மனைவியரும், அறிவுரை கூறும் அமைச்சரும் கூடப் பிரமிடுகளில் வைத்து மூடப்பட்டனர்.

ஒவ்வொரு பிரமிடுக்குக் கிழக்கிலும் ஒரு கோவில் கட்டப்பட்டுள்ளது. அக்கோவில்கள் பிரமிடுகளைவிடப் புனிதமான இடங்களாகக் கருதப்பட்டன. உலகில் வாழும் ஒரு மனிதன் பசியால் வாடுவது போலவே, ஆவிகளும் வாடுகின்றன என்று எகிப்தியர் கருதினர். எனவே நாள்தோறும் மூன்று வேளையும், அறுசுவை உண்டியை அக்கோவில்களில் வைத்துப் படைப்பர். இறந்தவரின் ஆவி அவ்வுணவை ஏற்றுக்கொள்கிறது என்று நம்பினர். ஒவ்வோர் எகிப்திய மன்னனும் தான் இறப்பதற்கு முன்பாகவே, தன் உடலைப் பாதுகாப்பதற்கு வேண்டிய பிரமிடையும், அதன் கிழக்கில் ஒரு கோவிலையும் எழுப்பிவிடுவது வழக்கம்; அதனுடன் தனக்குரிய விளைநிலத்தின் ஒரு பகுதியை, அக்கோவிலுக்கு எழுதிவைப்பான்; அந்நிலத்தில் விளையும் தானியங்களைக்கொண்டு, இறந்த பிறகு தன் ஆவிக்கு உணவு படைக்க வேண்டும் என்று

அவன் விரும்பினான்; இச்செயலைப் பொறுப்பாகச் செய்ய ஒரு பணியாளையும் அமர்த்திவிடுவான். அப்பணியாளும், அவன் பரம்பரையினரும் இப்பணியைத் தப்பாமல் செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

பாரோ மன்னர்களின் பிரமிடுகளை அடுத்தாற்போல் அவர்களுடைய அமைச்சர் பிரதானியர் முதலியோரின் சமாதிகளும் எழுப்பப் பட்டுள்ளன. இவைகள் உருவத்தால் பிரமிடுகளை ஒத்திருந்தாலும் அளவால் சிறியவை. இச்சமாதிகளின் உள்ளே நுழைந்து பார்த்தால், சுவர்களில் அழகான வண்ண ஓவியங்களைக் காணலாம். அவ்வோவியங்கள் நாட்டுப்புற வாழ்க்கையை விளக்குவனவாகக் காட்சியளிக்கின்றன. நிலத்தை உழுதல், பண்படுத்தல், விதை விதைத்தல், பயிர் வளர்த்தல், தானியங்களை அறுத்தல், அடித்தல் போன்ற படங்களும், உணவு சமைப்பது போன்ற ஓவியங்களும் காணப்படுகின்றன. ஆடு, கோழி போன்ற உயிரினங்களை வளர்ப்பது போலவும், அவற்றைக் கொன்று உணவு சமைப்பது போலவும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றைக் காணும்போது புதிய உண்மை ஒன்றும் புலப்படுகிறது. இறந்தவர்களின் ஆவி, சுவரில் தீட்டப் பட்டுள்ள இவ்வுணவுப் பண்டங்களைக் கண்ணால் பார்த்தாவது தம் பசியைத் தீர்த்துக்கொள்ளலாமன்றோ?

எகிப்தியர்கள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கட்டடக் கலையில் வல்லவர்களாக விளங்

கினர் என்பதற்குப் பிரமிடுகள் சான்றுகளாக விளங்குகின்றன. இக்காலத்தில் மாபெரும் கட்டடங்களைக் கட்டுவதற்குப் பல கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இக்காலத்தில் உள்ள புதிய கருவிகளைப் போன்று, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இல்லை.

நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள பெருங் கற்களை மேலே கொண்டு செல்ல 'உயரந் தூக்கி'கள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. பண்டைக் காலத்தில் எகிப்தியர்கள் மிக எளிய முறைகளைக் கையாண்டு, பெருங்கற்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு எடுத்துச் சென்றனர். இம்முறை, ஒரு பிரமிடின் உட்சுவரில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. வானளாவிய ஒரு பெருஞ்சிலை. அச்சிலை பல நூறு டன் எடையுள்ளது. அதை உருளைகளின் மேல் ஏற்றி நூற்று எழுபத்திரண்டு பேர் அடங்கிய ஒரு மக்கட்கூட்டம் மணலின்மேல் இழுத்துச் செல்வதுபோல் அச்சிலை அமைந்துள்ளது. பெரும் பாறைகளை இழுத்துச் செல்லவும், மேலே தூக்கவும் அளவு கடந்த மக்களாற்றலே அவர்களால் பயன்படுத்தப்பட்டது.

எகிப்து நாட்டில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கல் தச்சர்களாகவும், கூலிகளாகவுமே வாழ்ந்தார்கள் எனலாம். அவர்களுடைய வயிற்றுக்கு அரைவயிற்றுச் சோறு வழங்கப் பட்டது. பாரோ மன்னர்களுக்குப் பிரமிடு எழுப்பும் வேலை, வாழ்க்கையின் குறிக்கோள்; மக்களுக்கோ அது வாழ்க்கைப் பிழைப்பு.

மக்கள் மாடுகளைப்போல் உழைத்தனர். மன்னர்களோ மக்களை இப்பணியில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தினர். மன்னனின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். கட்டடப் பணியை மேற்பார்வை செய்த அரசாங்க அதிகாரிகள் மிலாறினால் கூலிகளை அடித்துத் துன்புறுத்தினர். ஒரு தனி மனிதன் விருப்பத்திற்காகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் குருதியை வடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சுவீடன் நாட்டில் ஆல்பிரெட் நோபெல் என்ற விஞ்ஞானி தோன்றி, வெடி மருந்து கண்டுபிடித்தார் என்று நாம் படித்திருக்கிறோம். அவ்வெடி மருந்தின் துணைகொண்டு இக்காலத்தில் பெரும் பெரும் பாறைகளைப் பிளந்து தூளாக்கிவிடுகிறோம். பண்டைக் காலத்தில் எகிப்து நாட்டில் இதுபோன்ற வாய்ப்பு ஒன்றுமில்லை. அவர்கள் பெரும் பாறைகளைப் பிளப்பதற்கு மிகவும் எளிய ஒரு முறையைக் கையாண்டனர். எந்தப் பாறையைப் பிளக்க வேண்டுமோ அப்பாறையில் துளையிடுவர். அத்துளையில் மர ஆப்புகளைச் சீவி உறுதியாக அடிப்பர். பிறகு நாள்தோறும் அவ்வாப்பில் தண்ணீர் விடுவர். அவ்வாப்பு நீரில் ஊறிச் சிறிது சிறிதாகப் பருக்கும். ஆப்புப் பருக்கத் தொடங்கியதும் பாறையில் பிளவு ஏற்படும். பிறகு தங்களுக்குத் தேவையான அளவு கற்களைப் பிளந்து எடுத்துச் செல்லுவர்.

கற்களோடு போராடுவதே பண்டை எகிப்தியரின் வாழ்க்கையாக இருந்த காரணத்தால் பெரும்

பெரும் பாறைகளைக் கையாளுவதில் அவர்கள் மிக்க திறமை பெற்றிருந்தனர். பிரமிடுகளில் பயன் படுத்தப்பட்ட கற்களைவிட மிகவும் பளுவான கற் களைக் கோவில்கள் கட்டுவதில் பயன்படுத்தினர். கோவில்களின் மேற் கூரையாகப் பயன்படுத்தப் பட்ட கற்களும், கோவில்களின் முன்னால் சிற்பக் கலையழகோடு நாட்டப்பட்டிருக்கும் உயர்ந்த தூண் களும், கோவிலின் வாயிலை அலங்கரிக்கும் கண் கவர் சிற்பங்களும் நூற்றுக்கணக்கான டன் எடை யுள்ளவை.

பாரோ மன்னர்கள், பிரமிடுக்குள் பிணங்களைப் புதைக்கும்போது அளவற்ற செல்வத்தையும் உடன் வைத்துப் புதைத்தனர் எனக் கண்டோம். இப்பழக்கம் பின் நாட்களில் பெருந் தீமையாக முடிந்தது. செல்வத்திற்கு ஆசைப்பட்ட கள்வர் கள், பிரமிடுகளின் வழிகளை உடைத்து உள்ளே நுழைந்து களவாடத் தொடங்கினர். இதை அறிந்த பாரோ மன்னர்கள் பிரமிடைப் பெரிய அள வில் கட்டுவதைவிடச் சிறியதாகவும், எளிதில் வழி யைக் கண்டறிய முடியாதபடி நுட்பமான கட்டடக் கலைத்திறனோடு அமைந்ததாகவும் கட்டத் தொடங் கினர். இச்செயலால், திருடர்களை வேண்டுமானால் தடுக்கலாம். ஆனால், அப்பிரமிடுகளை எழுப்பிய சிற்பிகளை எவ்வாறு தடுக்கமுடியும்? கட்டட நுட்பம் தெரிந்த சிற்பிகளே பிரமிடுகளைக் கொள்ளை யடிக்கத் தொடங்கினர்.

இவ்வுண்மையை அறிந்த பாரோ மன்னர்கள் புதியதொரு வழியைப் பின்பற்றத் தொடங்கினர்;

தங்களுடைய ஆவிகளை வழிபடுவதற்காகவும், அவைகளுக்கு உணவு படைப்பதற்காகவும் பெரிய கோவில்களைத் தலைநகருக்கருகில் எல்லாருடைய கண்களுக்கும் தெரியும்படி அமைத்தனர்; பிணத்தையும், செல்வத்தையும் ஒருவர் கண்ணுக்கும் தெரியாதபடி தலைநகருக்கு வடக்கே நெடுந்தொலைவில் அமைந்திருந்த ஒரு பள்ளத்தாக்கில் புதைத்தனர். இவ்வாறு செய்வதைப் பாரோ மன்னர்கள் முதலில் தொல்லையாகக் கருதினர்; இறந்தவரின் ஆவி உணவின் பொருட்டு நாள் தோறும் நெடுந்தொலைவு பயணம் செய்ய வேண்டுமே என்று எண்ணி வருந்தினர்; இதனால் முதலில் சிறிது தயக்கம் கூடக் கொண்டனர். ஆனால் வேறு வழியில்லை. இறந்தவரோடு அளவற்ற செல்வத்தைப் புதைக்கும் வழக்கத்தைவிட்டு விட்டால், கள்வர்களும் தங்கள் தீச் செயலை விட்டுவிடுவர். ஆனால் செல்வத்தைப் புதைக்காமலிருப்பதென்பது அவர்களால் முடியாத செயல்.

கி. மு. 1500 ஆம் ஆண்டிலிருந்து பாரோ மன்னர்கள் இப்புதிய பழக்கத்தை மேற்கொண்டனர்; ஐந்நூறு ஆண்டுகள் தொடர்ந்து இவ்வாறு செய்தனர். முப்பது பாரோ மன்னர்களின் பிணங்கள், அளவற்ற பெருஞ்செல்வத்தோடு இப்பள்ளத்தாக்கில் புதைக்கப்பட்டன. பொதுமக்களுக்கு இவ்வுண்மை தெரியாதவாறு மறைக்கப் பாரோ மன்னர்கள் எவ்வளவோ முயற்சி செய்தனர். ஆனால் எப்படியோ இவ்வுண்மை வெளியாகி விட்டது. இறந்த மன்னர்களின் பிணங்களை அடக்-

கம் செய்த போது, சில முக்கியமான அரசியல் அதிகாரிகளும், உறவினர்களும் உடன் செல்வது வழக்கம். அவர்களுக்கெல்லாம் இவ்வுண்மை தெரியாமற்போகாது. அப்பிணங்களை அடக்கம் செய்வதற்காகப் பூமிக்கடியில் சமாதி எழுப்பவேண்டும். அப்பணியைச் செய்யும் சிற்பிகளுக்கும் அவ்வுண்மை தெரிந்துதான் ஆகவேண்டும். மீண்டும் கள்வர்களின் தொல்லை தொடங்கிற்று.

சமாதிப்பள்ளத்தில் புதைந்து கிடந்த செல்வத்தைக் கொள்ளையடிப்பதில், கள்வர்களேயன்றி வேறு பலரும் ஈடுபட்டனர். பிணவடக்கத்தின் போது சடங்குகள் செய்த குருமார்களும், அப்பள்ளத்தாக்கின் காவற்பொறுப்பை ஏற்றுக் கொண்ட அதிகாரிகளுமே இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் சமாதிகளை எழுப்பிய சிற்பிகளை வரவழைத்து அவர்களுக்குக் கையூட்டு வழங்கி அவர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டனர். சமாதிப் பள்ளத்தாக்கைக் கொள்ளையடிக்கும் வேலை ஒரு கூட்டத்தாரின் தொழிலாகவே மாறிவிட்டது. இச்செய்தி எப்படியோ பாரோ மன்னர்களின் செவிகளுக்கு எட்டியது. இக்கொள்ளையைத் தடுக்கத் தீவிரமான நடவடிக்கைகளை மேற் கொண்டனர். பள்ளத்தாக்கில் காவலை அதிகப்படுத்தினர். கொள்ளையடிக்க முயற்சி செய்தவர்களைப் பிடித்து ஈவிரக்கமின்றிக் கொன்றனர்.

தாட்மசு என்ற பாரோ மன்னனுடைய பிணம் புதைக்கப்பட்டபோது, சமாதி எழுப்பிய சிற்பிகளைக் கொன்று விட்டனர். அவ்வாறு செய்வதன்

மூலம் உண்மை வெளியாகாதவாறு காப்பாற்ற முடியும் என்று எண்ணினர். வேறு சில மன்னர்கள் மிகவும் நம்பிக்கையான ஒரு சிற்பியை மட்டும், சமாதி வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வாறு பலவித முறைகளைக் கொண்டு, புதைக்கப்பட்ட செல்வமும், முன்னோர்களின் பிணமும் அழியாதவாறு காக்கப் பெரு முயற்சி செய்தனர் பாரோ மன்னர்கள். ஆனால் என்ன செய்தும் கள்வர்களின் கழுகுக் கண்களிலிருந்து இவை தப்ப முடியவில்லை.

ஒரு முறை சமாதிப் பள்ளத்தாக்கின் காவல் அதிகாரியாகப் பீரோ என்பவன் இருந்தான். வேலியே பயிரை மேய்வது போல், இவனே சமாதிகளைக் கொள்ளையிடத் தொடங்கினான். இத்திருட்டு எப்படியோ வெளியாகி, இறுதியில் மன்னரின் காதுகளையும் எட்டிவிட்டது. பீரோ கைது செய்யப்பட்டு அரசவையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். தனக்கும் சமாதித் திருட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று முதலில் அவன் சாதித்தான். அரசவையில் இருந்த காவலர்கள் அவனை நையப் புடைத்தனர். பிறகு அவன் வாயிலிருந்து உண்மை பின் கண்டவாறு வெளிப்பட்டது:

"தெய்வத்தன்மை பொருந்திய மன்னர் பெருமானே! நான் சமாதித் திருட்டில் ஈடுபட்டது உண்மை. பள்ளத்தாக்கின் வடக்குப் பகுதியிலிருந்த சமாதி யொன்றை நான் கொள்ளையடித்தேன். இக் கொள்ளையில் என்னோடு இன்னும் எழுவர் ஈடுபட்டனர். முதலில் சவப்பெட்டியின்

மூடியைக் கழற்றினோம். அதில் இறந்த மன்னரின் பிணம் காணப்பட்டது. மன்னரின் முகம் தங்க முக மூடியால் போர்த்தப்பட்டிருந்தது. உடல் வெள்ளித் தகட்டினால் போர்த்தப்பட்டிருந்தது. வெள்ளித் தகட்டின்மேல் தங்கத் தகடு போர்த்தப் பட்டிருந்தது. தங்கத்தகட்டில் விலைமதிப்பற்ற மாணிக்கக் கற்கள் பதிக்கப் பட்டிருந்தன. கழுத்தில் பொன்னரி மாலைகள் பல பூட்டப்பட்டிருந்தன. அம்மாலைகளை முதலில் கழற்றினோம். தங்கத் தகட்டின்மேல் பதிக்கப்பெற்றிருந்த மாணிக்கக் கற்களைப் பெயர்த் தெடுத்தோம். பிறகு உடலை ஒட்டிக்கிடந்த வெள்ளியையும் தங்கத்தையும் பெயர்த்தெடுத்தோம். அரசரின் பிணத்திற்கருகில் அரசியாரின் பிணம் காணப்பட்டது. அதன் கழுத்திலும் தங்கச் சரங்கள் நிறையப் பூட்டப்பட்டிருந்தன. அரசருடைய உடலுக்குப் போர்த்தப்பட்டிருந்தாற்போல், அரசியாரின் உடலுக்கும் தங்கத்தினாலும், வெள்ளியினாலுமான தகடுகள் போர்த்தப் பட்டிருந்தன. அவைகளையும் நாங்கள் எடுத்துக் கொண்டோம். இவ்விரண்டு பிணங்களுக்கும் அருகில் தங்கத்தாலும் வெள்ளியினாலும் செய்யப் பட்ட பலவிதப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளும் எங்களால் களவாடப்பட்டன. பிறகு களவாடிய பொருள்களை எட்டுப் பங்காகப் பிரித்து ஆளுக்கொரு பங்கு வைத்துக் கொண்டோம்.”

இவ்வாறு தன் கொள்ளையைப்பற்றி விளக்கமாகக் கூறினான் பீரோ. பீரோ கூறிய செய்திகளிலிருந்து நாம் பல உண்மைகளை அறிந்து கொள்ள

லாம். பண்டைய எகிப்து மன்னர்கள் தங்களுடைய பிணங்களைப் புதைக்கும்போது, எவ்வளவோ பெருஞ் செல்வத்தை உடன் வைத்துப் புதைத்தார்கள் என்பது நன்கு தெரிகிறது. சமாதிப் பள்ளத்தாக்கில் வேலைபார்த்த தாழ்ந்த வேலைக்காரரிலிருந்து, உயர்ந்த அதிகாரிகள் வரை எல்லாரும் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டனர் என்பதும், சமாதித் திருட்டு அவர்களுடைய அன்றாடத் தொழிலாகவே மாறிவிட்டது என்பதும் புலனாகின்றன.

பிற்காலத்தில் பாரோ மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது. திறமையற்ற மன்னர்கள் எகிப்து நாட்டை ஆளத் தொடங்கினர். அவர்கள் காலத்தில் சமாதித் திருட்டு மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கியது. கள்வர்களைத் தடுத்து நிறுத்த அம்மன்னர்களால் முடியவில்லை. அம்மன்னர்களின் ஆட்சி ஒழிந்த பிறகு, எகிப்து நாட்டில் அரச குருமார்களின் ஆட்சி தோன்றியது. அவர்களில் ஒரு மன்னன் சமாதித் திருட்டை ஒழிக்கப் புது வழியொன்றைக் கையாண்டான். சமாதிப் பள்ளத்தாக்கிலிருந்து எல்லாச் சமாதிகளையும் தோண்டி எடுத்தான். அவைகளை யெல்லாம் நகருக்கு நெடுந்தொலைவில், யாரும் நெருங்க முடியாத ஓரிடத்தில் புதைத்து விட்டான். அச் சமாதிகள் மூவாயிரம் ஆண்டுகளாக யாருடைய கண்களிலும் படாமல் மண்ணிற்குள் உறங்கிக் கொண்டிருந்தன. சென்ற நூற்றாண்டிலேயே அவைகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு உலகின்

பல பகுதிகளிலுமுள்ள பொருட்காட்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன.

இனிப் பிரமிடுகளின் உட்பகுதிகளில் என்னென்ன பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன என்பதைக் காண்போம். பிரமிடுகளை ஆராய்ந்த ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளர் பின்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:

"நான் பலநாள் முயன்று வழிகண்டுபிடித்தேன்; பிரமிடின் அடித்தளத்தை அடைந்தேன். அங்கு ஒரே இருட்டாக இருந்தது. காற்று மிகவும் குறைவாக இருந்த காரணத்தால் என்னுடைய உடலெங்கும் எரிச்சலெடுத்தது. கையில் கொண்டு சென்ற மின்விளக்கை ஏற்றினேன். நான் கண்ட காட்சி என்னை வியப்பில் ஆழ்த்தியது. என் எதிரில் தங்கத்தாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்ட பொருள்கள் குவிந்து கிடந்தன. ஒரு பொருட்காட்சி நிலையமே என் எதிரில் இருப்பதாக உணர்ந்தேன். அங்கிருந்தவற்றில் என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த பொருள்கள் மூன்று. ஒன்று, தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளித்தேர். அத்தேரின் கலையழகு என்னை மெய்ம்மறக்கச் செய்தது. தேரின் இரண்டு பக்கங்களிலும் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உட்புறத்தில் பெரிய விலங்குகளின் உருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டிருந்தன.

"மற்ற இரண்டு பொருள்கள், அப் பிரமிடில் புதைக்கப்பட்டிருந்த மன்னனின் சிலைகளாகும். அவைகளும் வெள்ளியினால் செய்யப்பட்டு மேலே

தங்க முலாம் பூசப்பட்டவை. மூவாயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த பாரோ மன்னன் உயிரோடு எழுந்து நடமாடுவதுபோல என் கண்களுக்குப் பட்டது. "இப்பொருள்களேயன்றி, வைரக்கற்கள் நிரப்பப்பட்ட பொற்பேழைகளும், பளிங்கினுல் செய்யப்பட்ட பூந்தொட்டிகளும், பளிங்குப் பலி பீடமும், தந்த நாற்காலிகளும், கட்டில்களும், பொன்னுலான அரியணையும், வெண்மையான தந்தப் பெட்டிகளும் அங்கு வைக்கப்பட்டிருந் தன" என்று எழுதியிருக்கிருர்.

இப்பிரமிடுகளின் துணைகொண்டு, பண்டைய எகிப்து நாகரிகமும், மன்னர்களின் ஆடம்பர வாழ்க் கையும் எப்படியிருந்தன என்பதை ஆராய்ச்சி யாளர் ஆராய்ந்து வெளிப்படுத்தி யுள்ளனர்.

எகிப்து நாட்டை ஆண்ட பாரோ மன்னர்கள் வளர்த்த நாகரிகம் மிகவும் தொன்மையானது. அவர்கள் வளர்த்த அழகுக் கலைகள் மிகவும் உயர்ந் தவை. இம்மன்னர்கள் ஆடம்பரமான வாழ்க்கை யைப் பெரிதும் விரும்பினர். அழகைக் கடவுளாக வழிபட்டனர். இவர்கள் வாழ்ந்த அரண்மனைகள் அளவால் பெரியவை. இவ்வரண்மனையின் வெளிச் சுவர்கள் கரடுமுரடான செங்கற்களால் கட்டப் பட்டவை. உட்சுவர்கள் மழமழப்பான கற்களால் கட்டப்பட்டவை. அச்சுவர்கள் கலையழகோடு காட்சியளித்தன. கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள் அச்சுவர்களில் வரையப்பட்டிருந்தன.

அரண்மனையின் மேற் கூரையைத் தாங்கி நிற் பதற்காகப் பெரிய தூண்கள் வரிசையாக அமைக்

கப்பட்டிருந்தன. அத்தூண்கள் கிடைத்தற்கரிய உயர்ந்த மரங்களால் செய்யப்பட்டவை; மழமழப் பாக இழைக்கப்பட்டுச் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டவை. இவ்வரண்மனைகளில் இணைக் கப்பட்டிருந்த கதவுகள் வெள்ளியினாலும் தங்கத்தி னாலும் இழைக்கப்பட்டிருந்தன. இடையிடையே வைரக்கற்களும், மரகதக் கற்களும், கெம்புக் கற் களும் பதிக்கப் பட்டிருந்தன. அரண்மனையின் தளங்களும் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியிருந் தன. மேல் விதானங்களில் இயற்கைக் காட்சிகள் தீட்டப் பெற்றிருந்தன. மலைகளும், அருவிகளும், சோலைகளும் அங்குக் காட்சியளித்தன. வன விலங்குகளை வேட்டையாடுவது போன்ற காட்சி களும் வரையப்பெற்றிருந்தன. அரசன் வீற்றிருந்து ஆட்சிபுரியும் அத்தாணி மண்டபத்தில் வரிசையாக இடப்பட்டிருந்த இருக்கைகள் யாவும் உயர்ந்த மரத் தால் சிற்பக்கலையழகோடு செய்யப்பட்டவை.

அரண்மனைகள் மிகவும் பெரிய அளவில் கட்டப்பட்டன. அவ்வாறு கட்டப்பட்டதற்குக் காரணமுண்டு. ஒவ்வொரு மன்னனுக்கும் பல மனைவியர் இருந்தனர். ஒரு சில மன்னருக்கு நூற்றுக் கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தனவாம். இவ் வளவு பெரிய குடும்பம் வாழ வேண்டுமானால் அரண்மனையைச் சிறிதாகவா கட்ட முடியும்?

அரண்மனையில் அன்றாட வேலைகள் செம்மை யாக நடைபெறுவதற்கு நூற்றுக் கணக்கான அடிமைகள் அமர்த்தப்பட்டனர். அரண்மனையில் வாழும் அரச குடும்பத்தை மகிழ்விக்க இசைக்குழு

ஒன்று இருந்ததாம். அரண்மனை நிருவாகத்திற் கென்றே பல அதிகாரிகள் இருந்தார்களாம்.

பாரோ மன்னர்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றி மாசுபெரோ என்ற தொல் பொருள் ஆராய்ச்சி யறிஞர், சுவையான செய்திகள் பலவற்றைக் கூறு கிறார். எகிப்து நாட்டின் தொல்பொருள் துறைத் தலைவராக நீண்ட நாள் பணியாற்றிய அவர் கூறும் செய்திகள் பின்வருவனவாகும்:

"பாரோ மன்னர்கள் மணம் தரும் பொருள் களைப் பெரிதும் விரும்பினர். இத்துறையில் இருபது வகைத் தொழில்கள் வளர்ச்சி பெற்று இருந்தன. அரசாங்க நாவிதர்கள் என்ற பெயரால் ஒரு தனிக் கூட்டத்தாரே வாழ்ந்தனர். அவர்கள்தாம் அரச குடும்பத்தார்க்குச் சவரத் தொழில் செய்ய வேண் டும். அரசரின் தலையை அழகு செய்வதோடு பொய் முடியும் அவர்கள் தயாரித்துக் கொடுப்பர். அம் முடிகளில் ஒளிவீசும் வைரங்களை வரிசை யாகப் பொருத்தி வைப்பர். நகத்தை ஒழுங்காகச் சீவிவிட்டு அதற்கு வண்ணம் தீட்டுவதற்கும், அரச குடும்பத்தினரை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவதற்கும், கண்ணுக்கு மை செய்து பூசுவதற்கும், உதட்டுக்கும் கன்னத்திற்கும் வண் ணச் சாந்து செய்து அப்புவதற்கும் தனித்தனியே நூற்றுக்கணக்கான பணியாளர்கள் இருந்தனர்.

"செருப்புத் தைப்பதற்கும், அரைக்கச்சை தைப்பதற்கும் தனித்தனியே தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அரச குடும்பத்து ஆடை தைப்பதற்கென்று, தையற்காரர்களின் கூட்ட மொன்று இருந்தது. அவர்களில், பட்டாடை தைப்

போர், பருத்தியாடை நெய்ப்போர், காலாடை நெய்ப் போர், மேலாடை நெய்ப்போர், தடித்த ஆடை நெய்ப்போர், மெல்லிய துகிலாடை நெய்ப்போர், மகளிர்க்கு ஆடை நெய்ப்போர், உடலோடு பொருந் திய ஆடை நெய்ப்போர் எனப் பல பிரிவினர் இருந் தனர். அரச குடும்பத்தார் பெரும்பாலும் வெண்மை யான ஆடைகளையே உடுத்திக் கொண்டனர். இவ்வாடைகளைச் சலவை செய்வதற்கென்று பணி யாளர்கள் அமர்த்தப் பட்டிருந்தனர்.

"பலவிதமான பொன்னணிகளையும், வைர மிழைத்த நகைகளையும் அரச குடும்பத்தார் அணிந் திருந்தனர்; பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளுக் கேற்பப் பலவித நகைகளை அணிந்தனர். அரசிகளுக்கு நூற்றுக் கணக்கான பணிப் பெண்டிர் இருந்தனர். உள்ளத்தில் சலிப்பேற்பட்ட நேரங்களில் இசைக் குழுவினர் இன்னிசை எழுப்பி அரசியரை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினர். ஆடற்பெண்டிர் ஆடல் நிகழ்த்தினர்; கோமாளிகளும் குள்ளர்களும் கேளிக்கை காட்டி வேடிக்கை புரிந்தனர்.

"அரச குடும்பத்தினர்க்கு நகை செய்வதற் கென்று அரண்மனையின் அருகே ஒரு பட்டறையே இருந்தது. பொற்கொல்லர்களும், கல்லிழைக்கும் பணியாளரும், கருமாரும் உலைக் கூடத்தை விட்டு அகலாது பணி புரிந்தனர். விடிந்தது முதல் இரவு நெருங்கும் வரை உலைக்கூடத்தில் நெருப்படி யில் காயும் இப்பாட்டாளிகள் பெற்ற கூலி மிகமிகக் குறைந்ததுதான்.

"கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த கல் தச்சர் களின் நிலையோ மிகவும் இரங்கத்தக்கது. வெயிலி

லும் மழையிலும் அவர்கள் சலியாமல் உழைக்க வேண்டியவர்களானார்கள். கல்லை அடித்து அடித்து அவர்கள் கை ஓய்ந்துவிடும். இடையிடையே மாபெருங் கற்களைப் பலர் கூடி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இழுத்துச் செல்லவேண்டும்; பெருந் தூண்களை எடுத்து நிறுத்தி நிலைநாட்ட வேண்டும்; மாபெரும் கற்பாலங்களைக் கூரைமேல் ஏற்றவேண்டும். இவ்வேலைகளைச் செய்யும்போது கற்களின் அடியிற்சிக்கி எத்தனையோ தொழிலாளர்கள் மடிய நேரிடும். இவ்வாறு நாள் முழுவதும் உழைத்து, மாலை வேளையில் அரசாங்க அதிகாரிகள் கொடுக்கும் ரொட்டித் துண்டுகளைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச்செல்ல வேண்டும். வீட்டில் மனைவி மக்கள் இவ்வேழையின் வருகையை எதிர் நோக்கி இருப்பர்.

" அரச குடும்பத்தார்க்கு ஆடை நெய்யும் சேணியர்களின் நிலை மிகவும் மோசமானது. காலையிலிருந்து மாலைவரை காலை மடக்கி உட்கார்ந்து வேலை செய்யவேண்டும். இடை வேளைக்குள் குறிப்பிட்ட அளவு ஆடை நெய்தால்தான், அவர்களுக்கு உணவுண்டு. இல்லாவிட்டால் அவ் வேலை முடிந்த பிறகுதான் உணவு கொடுப்பார்கள். சாயப்பட்டறையில் வேலைசெய்யும் தொழிலாளர் நிலை இன்னும் கேவலமானது. சாயத்தண்ணீரின் நாற்றம் மூக்கைத் துளைக்கும். நாள் முழுவதும் தண்ணீருக்குள் கையைவிட்டு நூலையும், ஆடையையும் பிழிந்து கொண்டிருப்பதால், அவர்களுடைய கைகளில் குருதியோட்டமே நின்று விடும். செருப்புத் தைக்கும் தொழிலாளர்களின் நிலை

யைக் கூறவேண்டியதில்லை. நாள் முழுவதும் தீநாற்றம் வீசும் தோலொடு தோலாய் அவர்கள் கிடப்பர். அவர்கள் உடலும், ஆடையும் அழுக்கடைந்து அருவருப்பாகக் காட்சியளிக்கும்.

மேலே விவரிக்கப்பட்ட காட்சிகளை நாம் உள்ளத்தால் காணும்போது, சீரும் சிறப்பும்பெற்று வாழ்ந்த பாரோ மன்னர்களின் ஆட்சியில் ஏழை மக்கள் எவ்வளவு துன்பப் பட்டார்கள் என்பதையும், அரச குடும்பத்தாரும், செல்வர்களும் உல்லாசமாக வாழ்வதற்கு ஏழைமக்கள் எத்தகைய கொடுந் துயர் பட்டு மடிந்தார்கள் என்பதையும் அறியலாம். 'ஒரு மனிதனுக்கு முதுகைப் படைத்திருப்பது அடிக்கும் தடிக்குக் குனிந்து கொடுப்பதற்குத்தான்' என்பது பண்டை எகிப்து நாட்டுப் பழமொழி.

ஆம்! இக்கூற்று உண்மையே! இல்லாவிட்டால் மாபெரும் பிரமிடுகள் உருவாகி யிருக்க முடியுமா? மாபெரும் கோவில்களும், சிற்பத் தூண்களும், விண்முட்டும் சிலைகளும் உருப்பெற்றிருக்க முடியுமா? பல நூறு கி. மீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் வெட்டப்பட்டு நைல் ஆற்றின் நீரை அவற்றில் திருப்பி விட்டிருக்க முடியுமா? மத்தியக் கிழக்கு நாடுகளை வென்று பாரோ மன்னர்கள் வெற்றிக்கொடி நாட்டியிருக்க முடியுமா? இவ்வேழை மக்கள் இவ்வாறு தங்கள் குருதியைச் சிந்தியிராவிட்டால் ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் நாம் பிரமிடுகளைக் கண்டு வியப்படைய மாட்டோம்! பாரோ மன்னர்களின் பழம் பெருமைகளைப் பற்றிப் பாராட்டிப் பேசமாட்டோம்!

# 4. தாஜ்மகால்

இந்திய நாட்டில் மாபெரும் நகரங்கள் பல உள்ளன. அவற்றுள் ஆக்ரா நகரை அறிந்த அளவு, வேறு எந்த நகரையும் உலக மக்கள் அறிந்தார் களல்லர். காரணம் ஆக்ரா நகரம் அழகின் இருப் பிடம்; கலையின் நடுவிடம். இந்திய நாட்டில் எத் தனையோ அரச பரம்பரையினர் அரியணை ஏறி ஆட்சி புரிந்திருக்கின்றனர். அவர்களுள் மொகலாயர்களின் ஆட்சி ஈடு எடுப்பற்றது ; செல்வச் சிறப்புக்கும், ஆடம்பரத்துக்கும், கலைக்கும் பெயர் பெற்றது. மொகலாயர்கள் தங்கள் ஆட்சிக்காலத் தில் மாபெரும் மசூதிகளையும், கோபுரங்களையும், கலைச்சிறப்போடு கூடிய பளிங்குச் சமாதிகளையும், கண்கவர் பூங்காக்களையும் நிறுவினர். அவை யாவும் மொகலாய மன்னர்களின் பெருமையைப் பறைசாற்றிய வண்ணம் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றன.

இச் சிற்பச் செல்வங்களுக்குப் புகழ் பெற்ற இடம் ஆக்ரா நகரமாகும். இந்நகரின் நடுநாயக மாக யமுனை ஆற்றின் கரையில் அமைந்துள்ள தாஜ்மகால் ஈடு இணையற்ற சிற்பக்கலையின் சின்ன மாக விளங்குகிறது. உலக விந்தைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. ஐரோப்பிய மக்களின் உள்ளத்தில் இஃது ஓர் அரிய கலைக் கோவிலாக இடம் பெற்று விட்டது. இப்பளிங்குச் சமாதியைக் காணும் மக்கள் எல்லாரும் மூக்கின்மேல் விரலை வைத்து வியப்புடன் நோக்குகின்றனர். தாஜ்மகால்

தொன்மையானது; அளவால் மிகப்பெரியது; அள வற்ற பொருட் செலவில் கட்டப்பட்டது; செய்தற் கரியது. மொகலாயர்கள் காலத்தில் கட்டடக் கலை மிகவும் உன்னத நிலையில் இருந்தது. அவர்கள் காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக எத் தனையோ கட்டடங்கள் டில்லியிலும், ஆக்ராவிலும், பதேபூர் சிக்ரியிலும் எழுப்பப்பட்டன. இருந்தாலும் மொகலாயப் பேரரசின் கலை வரலாற்றில் தாஜ் மகாலே சிறப்பிடம் பெற்றுள்ளது.

இந்திய நாட்டு வரலாற்றில் ஆக்ராவிற்குச் சிறப்பிடம் உண்டு. இந்நகரில் பல அரச பரம் பரையினர் வீற்றிருந்து அரசு புரிந்தனர். முதன் முதலாக ஆக்ரா நகரம் இராசபுத்திரச் சிற்றரசன் ஒருவனுக்கு உரிமையுடையதாக இருந்தது. பிறகு லோடி வம்சத்தினரும், மொகலாயர்களும் இந் நகரைக் கைப்பற்றிக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினர்.

முதன் முதலாக ஆக்ரா நகரில் தன் ஆட்சிப் பீடத்தை அமைத்த மன்னன் சிக்கந்தர் லோடி. மொகலாயப் பரம்பரையை இந்திய நாட்டில் தோற்றுவித்த பாபர் கி. பி. 1526 ஆம் ஆண்டு தன் ஆட்சிப் பீடத்தை ஆக்ராவில் அமைத்துக் கொண்டார். பாபர் வெறும் படைத்தலைவர் மட்டுமல்லர். அவர் பெரிய கலைஞர். அவர் ஆக்ரா நகரில் அழகு மிக்க சோலையொன்றை அமைத்தார்; அச்சோலையின் நடுவே கலையழ கோடு கூடிய மாளிகை யொன்றைக் கட்டினார்; அச்சோலையின் நடுவே செயற்கை நீர் ஊற்றுக்

களையும், வாய்க்கால்களையும் நிறுவினர்; மணம் மிக்க கொடிப்பந்தர்களையும் அமைத்தார்; நாள் தோறும் மாலை வேளையில் அப்பந்தலில் அமர்ந் திருந்து கவிஞர்களோடும், கலைஞர்களோடும் விருந்துண்டார்; கலையாராய்ச்சி செய்தார்; கவிதைகள் இயற்றினர். பாபர் எழுப்பிய இத் தோட்ட மாளிகை 'சார்பாக்' என்ற பெயரால் வழங்கப்பட்டது. அது இப்போது அழிந்து விட்டது. அதனுடைய சின்னங்கள் கூட இன்று காணப்படவில்லை.

பாபர் இறந்த பிறகு அவர் மகனை உமாயூன் அரியணை ஏறினர். சூர் பரம்பரையின் மன்னரான ஷெர்ஷா உமாயூனைத் துரத்திவிட்டு, ஆக்ராவில் தன் ஆட்சிப் பீடத்தை அமைத்தார். ஷெர்ஷா இறந்தபிறகு உமாயூனின் மகனாகிய அக்பர் ஆக்ரா வைக்கைப்பற்றிக் கொண்டார். அக்பர் உறுதியான கோட்டை யொன்றை ஆக்ராவில் எழுப்பினர். அக்கோட்டை இன்றும் காணப்படுகிறது. ஆக்ரா நகரில் மிகவும் பழமையான வரலாற்றுச் சின்னம் இதுதான். அக்பரின் மகனாகிய ஜஹாங்கீரின் ஆட்சியில் ஆக்ரா சிறப்பிடம் பெறவில்லை. ஜஹாங்கீரின் மகனை ஷாஜகான் அரியணை ஏறிய தும், ஆக்ரா அவருடைய ஆட்சியில் அழியாப் பெரும்புகழைப் பெற்றது.

ஷாஜகானின் அன்பு மனைவியான மும்தாஜ் பேகம் இறந்ததும் அவளுடைய நினைவுச் சின்ன மாகத் தாஜ்மகால் எழுப்பப்பட்டது. இது கி. பி. 1631 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுக் கி. பி.

1648 ஆம் ஆண்டு முற்றுப் பெற்றது. ஷாஜகான், தம் அன்பு மனைவியின் நினைவாக அமைக்கப்படும் இவ்வழகுச் சமாதி ஈடும் எடுப்புமற்றதாக விளங்க வேண்டும் என்று எண்ணினார். இக்கட்டடம் கட்டப்பட்டதைப் பற்றிப் பல கதைகள் வழங்கு கின்றன.

இக்கட்டடம் எழுப்புவதற்கு முன், இதன் அமைப்பை விளக்கும் சிறந்த கிடைப்படத்தை வரைந்து கொண்டு வருபவருக்குப் பெரும் பொருள் பரிசு கொடுப்பதாக ஷாஜகான் பறையறைந்தாராம். அப்போது ஷாஜகானுடைய அரசவையில் இருந்த வெனிசு நாட்டுக்காரர் ஒருவர் தாஜ்மகாலின் கிடைப்படத்தை வரைந்து கொடுத்தாரென்றும், அப்படத்தை வைத்துக் கொண்டு அவ்வமைப்பின் படி இக்கட்டடம் எழுப்பப்பட்டதென்றும் சொல்லு கின்றனர்.

இக்கதையைச் சான்று காட்டிப் பேசுபவ ரெல்லாம் மேலை நாட்டினரே. ஆனால் இக்கதை நம்பத்தகுந்ததாக இல்லை. காரணம், இசுலாமியக் கட்டடக் கலையின் வளர்ச்சி பெற்ற நிலையைத்தான் தாஜ்மகாலில் காண முடியுமே தவிர, மேலை நாட்டுக் கட்டடக் கலையின் சிறு சாயலைக்கூட இதில் காண முடியாது.

தாஜ்மகால் எழுந்த வரலாற்றைப் பற்றி வேறொரு கதையும் வழங்குகிறது. இக்கட்டடம் அமைப்பதற்கான கிடைப்படத்தை முதலில் தீட்டிக் கொடுத்தவன் உஸ்தாத் ஈசா என்ற இசுலாமியன். இவன் பாரசீக நாட்டைச் சேர்ந்தவன். இவன்

எழுதிய அமைப்பின்படியே தாஜ்மகால் கட்டப் பட்டது. இக்கட்டட வேலைக்காகச் சிற்பிகள் பாக்தாத் நகரிலிருந்து வரவழைக்கப்பட்டனர். சமர்க்கண்டிலிருந்து வளைவுக் கோபுரம் அமைக்கும் கலையில் வல்ல சிற்பிகள் வரவழைக்கப்பட்டனர். பளிங்குக் கல்லில் பூவேலைப்பாடு செய்யும் கலையில் மிகவும் கைதேர்ந்தவனான சிற்பியொருவன் சிராஸ் நகரிலிருந்து வரவழைக்கப்பட்டான். எனவே, இசுலாமிய உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தாஜ்மகாலைக் கட்டச் சிற்பிகள் வரவழைக்கப் பட்டனர் என்பது தெளிவாகும்.

மும்தாஜின் சமாதி வெள்ளைப்பளிங்குக் கற் களால் ஆனது. அவ்வழகு மணிமாளிகையைச் சுற்றிக் கண்ணைக் கவரும் வண்ணமலர்கள் பூத்த பரந்த பூஞ்சோலை யொன்று உள்ளது. அப்பூஞ் சோலை, அழகின் இருப்பிடம். அங்கே குளிர் நிழல் தங்கும் பசுமரங்கள் உண்டு. அப்பசு மரங்களைச் சுற்றிப் படர்ந்து பூங்கொடிகள் தலையை ஆட்டிச் சிரிக்கும். மரகதப் பாய் விரித்தாற் போன்று எங்குப் பார்த்தாலும் பசும் புற்றரைகள் தென்படும். திரும் பிய திசையெல்லாம் செயற்கை நீர் ஊற்றுக்கள் தம் உடலையசைத்துக் களிநடம் புரியும்.

இச் சோலையின் நுழைவாயில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வெள்ளைப் பளிங்குக் கற்களா லும், செந்நிறப் பளிங்குக் கற்களாலும் அமைக்கப் பட்டது. இவ் வாயிலில் நுழைந்து, சோலையின் நடுவே நீண்டு செல்லும் கண்கவர் பாதையின் வழியே சென்று சமாதியை அடையவேண்டும்

வழியின் இரண்டு பக்கங்களிலும் இயற்கையழகும், செயற்கையழகும் கூடிய மரங்களும் செடிகளும் வரிசையாக வளர்ந்துள்ளன. இப்பாதையில் நடந்து போகும் போது ஏதோ ஒரு கனவுலகில் மிதந்து செல்வது போலத்தோன்றும். இக்காட்சி கவிஞரின் கற்பனையைத் தூண்டும்; சிற்பியின் சிந்தனைக்கு விருந்தளிக்கும்; ஓவியனின் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டிவிடும்.

இதைக்காணும் மக்களெல்லாரும், "இது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட செயல்; உயர்ந்த கவிஞனின் கற்பனைக்கு, ஒப்பற்ற சிற்பியொருவன் உயிருட்டியிருக்கிறான்! ஷாஜகான் தம் மனைவியின் பால் எத்தகைய அன்பு கொண்டிருந்தாரோ? அவர் கொண்டிருந்த அன்புக்கு எல்லை இருந்திருக்க முடியாது. இல்லாவிட்டால் அவள் நினைவுச் சின்னமாக, உலக விந்தை ஒன்றை உருப்படுத்தியிருப்பாரா? இச்சமாதியே இவ்வளவு பேரழகோடிருந்தால், இங்குப் புதைக்கப்பட்ட மும்தாஜ் எத்துணை அழகியோ! இனி உலகில் எவராலும் இது போன்ற கலைக் கோவிலை எழுப்ப முடியாது; இந்திய நாட்டின் கலைப் புகழுக்கு இதுதான் எடுத்துக் காட்டு!" என்றெல்லாம் வியந்து பேசுவதைக் காதாரக் கேட்கலாம்.

கலப்பில்லாத உயர்ந்த சலவைக் கற்களால் எழுப்பப்பட்டுள்ள இக்கலைக் கோவிலை, முழு நிலா வானத்தில் ஆட்சி செலுத்தும் இரவு நேரத்தில் பார்த்து மகிழவேண்டும். அப்பொழுது தான் அதன் சிறப்பு நமக்குத் தெரியும். தாஜ்மகாலைக் கட்டி

முடித்த சில ஆண்டுகளில் ஷாஜகானை, அவர் மகனான ஔரங்கசேப் கைது செய்து, ஒரு மாளி கையில் சிறைவைத்து விட்டார். சிறைப்பட்ட அம்மாளிகையில் இருந்தவண்ணம், தம் அன்பு மனைவியின் சமாதியை நிலாக்கால இரவில் மணிக் கணக்காக ஷாஜகான் வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பாராம்.

இப்பளிங்குச் சமாதியின் இரு பக்கங்களிலும், செந்நிறக் கற்களால் கட்டப்பட்ட இரண்டு மாபெரும் கூடங்கள் உள்ளன. ஒன்று, முக்கியமான நிகழ்ச்சிகளின் போது அரசர் உள்பட மக்கள் எல்லாரும் கூடும் அவைக் கூடம். மற்றொன்று, சடங்குகள் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட கூடம். செந்நிறமான இவ்விரண்டு கூடங் களுக்கும் இடையில் வெண்மையான பளிங்குச் சமாதி மிகவும் எடுப்பாகவும், கம்பீரமாகவும் காட்சி யளிக்கிறது. தாஜ்மகாலை அருகிலிருந்து பார்ப்பதை விடத் தொலைவிலிருந்து கண்டால், மிகவும் பேரழ கோடு தென்படும். இக் கட்டடத்தின் வெளி உருவ அமைப்புப் போற்றத் தகுந்ததாக உள்ளது.

தாஜ்மகாலின் உட்புறத்தில் சென்று பார்த்தால் சிற்பக்கலையின் முழுச் சிறப்பையும் காணலாம். உட்சுவரில் சிற்ப வேலைப்பாடு இல்லாத இடமே இல்லை என்று சொல்லலாம். அவைகளைக் காணும் போது, அவற்றை உருவாக்கிய சிற்பியின் கை வண்ணத்தை எண்ணி எண்ணி வியவாமல் இருக்க முடியாது. முக்கியமான சிற்பங்களின் நடுவே கெம்பு, மரகதம், நீலம், வைடூரியம், கோமேதகம்,

வைரம் முதலிய நவமணிகளும் பதிக்கப் பட்டிருந்தன. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போது, உயர்ந்த வைரக்கற்களெல்லாம் பெயர்த்து எடுக்கப் பட்டுவிட்டன. அவ்விடங்களில் போலி வைரங்களே இப்பொழுது மின்னுகின்றன.

தாஜ்மகாலின் சிறப்பை இந்திய மக்களைவிட மேலைநாட்டு மக்கள் மிகவும் உணர்ந்திருக்கின்றனர். ஆக்ராவைப் பற்றியும், தாஜ்மகாலைப் பற்றியும் ஐரோப்பியர்களே சிறந்த நூல்கள் எழுதியுள்ளனர்; அந்நூல்களில் தாஜ்மகாலின் சிறப்பை அணு அணுவாகச் சுவைத்து எழுதியிருக்கின்றனர். 17 ஆம் நூற்றுண்டிலிருந்து, தாஜ்மகாலைப்பற்றிப் பல நூல்கள் ஐரோப்பிய மொழிகளில் எழுந்த வண்ணம் உள்ளன.

தாஜ்மகாலை நேரில் கண்ட பெரினியர் என்ற பிரெஞ்சுக்காரர், "அக்கலைக் கோவிலைக் கண்ட போது நான் ஓர் இந்தியனுகவே மாறிவிட்டேன். தாஜ்மகால் உலக விந்தைகளில் ஒன்று என்று எல்லாரும் சொல்லுகிறுர்கள். நான் கூறுகின்றேன்! அது உலக விந்தைகளில் தலைசிறந்தது!" என்று மெய்ம்மறந்து கூறுகிறுர். ஹீபர் என்ற பாதிரியார், "தாஜ்மகாலில் சிற்பக்கலை நுணுக்கம் காணப் படாத இடமே இல்லை. ஐரோப்பியக் கட்டடக் கலைக்கு இஃது ஓர் அறைகூவல்!" என்று வியந்து பாராட்டுகிறுர்.

தாஜ்மகாலைக் கண்டு பொருமைப்பட்ட வெள்ளையர்களும் உண்டு. தங்களுடைய நாட்டில் இத்தகைய கலைக்கோவில் இல்லையே என்ற

ஏமாற்றமே அவர்களுடைய பொருமைக்குக் காரணம். அப்பொருமைக்காரர்களால் கூடத் தாஜ்மகாலைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அவ்வாறு பாராட்டப் புகுந்த ஒரு வெள்ளையர், "பண்டைய கிரேக்க நாட்டுச் சிற்பங்களுக்குத் தாஜ்மகால் ஈடாகாது என்ருலும், இது உலக விந்தைகளுள் ஒன்று என்பதில் ஐயமில்லை!" என்று தம்மை மறந்து கூறுகிருர். தாஜ்மகாலை நேரில் கண்ட அமெரிக்க அறிஞர் ஒருவர் கற்பனை நயத்தோடு பாராட்டுகிருர். "தாஜ்மகால் வானத்தில் தவழும் ஒரு புகை ஓவியம் போலவும், நிலவைப் போலவும் காட்சியளிக்கிறது. அதன் உச்சியில் காணப்படும் வளைவுக் கோபுரங்கள் வெள்ளிக் கொப்புளங்களைப் போல் காணப்படுகின்றன" என்று கூறுகிருர்.

ஹாவல் என்ற மற்ருெர் ஐரோப்பியர், "தாஜ் மகால் காண்பவரின் உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளத்தைக் கொட்டுகிறது; இதற்கு முன் ஒருவன் எண்ணிப்பார்க்காத உயர்ந்த கற்பனைகளையும் சிந்தனைகளையும் தூண்டி விடுகிறது. கலைக்குக் கருவூலமாக விளங்கும் இவ்வொப்பற்ற மாளிகை, இந்திய நாட்டுப் பெண்ணினத்தின் பெருமைக்கும், அழகுக்கும் படைக்கப்பட்ட காணிக்கையாகும். இவ்வுயரிய கலைக்கோவில் எழுவதற்குக் காரணமாக விளங்கிய பெண்மையை நான் நாவார வாழ்த்துகிறேன்!" என்று கூறுகிருர். தாஜ்மகாலின் சிறப்பைப்பற்றி இன்னும் எவ்வளவோ அரிய கருத்துக்களை யெல்லாம் மேலை நாட்டறிஞர்கள் கூறியிருக்கின்றனர்.

'கல்லால் எழுந்த காவியம்' என்று நம் நாட்ட வராலும், மேலை நாட்டறிஞராலும் போற்றப்படும் இக் கலைக்கோவிலின் சிறப்பை, வந்த புதிதில் ஆங்கிலேயர் உணரவில்லை. தமது குடியேற்ற நாடான இந்திய நாட்டின் செல்வத்தைச் சுரண்டு வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த ஓர் ஆங் கிலக் கவர்னர் ஜெனரல், தாஜ்மகாலைப் பிரித்து அதன் சலவைக் கற்களை விலைக்கு விற்றுப் பண மாக்க விரும்பினார். வெளிநாட்டு நிறுவனம் ஒன்ற னுக்கு நூற்றைம்பதாயிரம் ரூபாய்க்கு ஏலத்திலும் விற்றுவிட்டார்.

இக் கொடுஞ் செயலை உணர்ந்த இந்திய மக் கள் கொதித்தெழுந்தனர். நாட்டில் கிளம்பிய பேரெதிர்ப்பைக் கண்ட அவ்வாங்கில ஆளுநர் பிறகு அத்திட்டத்தைக் கைவிட்டார். நல்ல வேளை! தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகை யோடு போயிற்று. அன்று மட்டும் இந்திய மக்கள் உணர்ச்சியற்றவர்களாக இருந்திருப்பார்களேயா னால், தாஜ்மகாலினால் நாம் இன்று அடைந்திருக் கும் கலைப்புகழ் மண்ணோடு மண்ணாயிருக்கும்.

தாஜ்மகால் கட்டப்பட்டு முந்நூற்றுப் பதினாறு ஆண்டுகள் ஆகின்றன. இதைக் கட்டும் பணியில் எவ்வளவு பேர் ஈடுபட்டார்களோ, அதைவிட இதை அழியாமல் காக்கும் பணியில் மிகப் பெரும் தொகையினர் ஈடுபட்டுள்ளனர். இப் பெரும் கலைச் செல்வத்தை இந்திய நாட்டுத் தொல் பொருள் ஆராய்ச்சியினர் தம் கண்ணின் கருமணியாய்க் காத்து வருகின்றனர். இதைப் பாதுகாத்துப் பேண

ஆங்கில அரசினர் இரண்டு லட்சம் ரூபாய் செல விட்டனர். இந்திய நாடு விடுதலை பெற்ற பின்னர், நமது அரசியலார் பதினாறு இலட்சம் ரூபாய் செல விட்டுள்ளனர். ஆங்கில அரசியலார் கி. பி. 1810ஆம் ஆண்டிலும், 1864 ஆம் ஆண்டிலும், 1874 ஆம் ஆண்டிலும் இதைப் பழுது பார்த்தனர் ; கி. பி. 1930 ஆம் ஆண்டில் இந்திய நாட்டுக் கட்டடக் கலைஞர்களையும், பொறியியல் வல்லுநர்களையும் ஒன்று கூட்டி ஒரு குழு அமைத்துத் தாஜ்மகாலை நன்கு ஆராய்ந்து பழுது பார்த்தனர். இந் நிகழ்ச்சி கள் யாவும் ஆங்கிலேயரின் ஆட்சிக் குறிப்புகளில் காணப்படுகின்றன.

தாஜ்மகாலின் அழகுச் சிறப்புக்குக் காரணமாக விளங்குவது அதைச் சூழ அமைந்திருக்கும் சொக் குப் பச்சைத் தோட்டமே. இத் தோட்டம் உயர்ந்த தும், குட்டையானதுமான பசிய மரக் கூட்டங் களைத் தன்னகத்தே கொண்டது. குலுங்கிச் சிரிக் கும் கொத்து மலர்ச் செடிகளையும், பொங்கிப் பாயும் செயற்கை நீரூற்றுக்களையும் எங்கணும் கொண்டது. இவ்விள மரக்காவின் நடுவில், தன் பளிக்குருவம் காட்டித் தலைநிமிர்ந்து நிற்கும் இக் கலைக்கோவில், பச்சைக் கம்பளத்தின் நடுவே கொட்டி வைத்த முத்துக் குவியல் என்று சொன்னால் மிகப் பொருத் தும். இப் பசுமைச் சூழல் தாஜ்மகாலின் அழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டத் துணைபுரிகின்றது.

ஆங்கில ஆட்சியின் போது அறுபதாண்டுக் காலம் இத் தோட்டம் கவனிப்பாரற்று அழிந்து கிடந்தது. இத்தோட்டம் அழிவுற்றதும் தாஜ்

மகாலின் அழகில் செம்பாதி அழிந்து விட்டது என்று கூறலாம். நம் நாடு விடுதலையடைந்த பிறகு நம் நாட்டு அரசியலார் அருமுயற்சி செய்து, பெரும் பொருட் செலவில் இத்தோட்டத்திற்குப் புத்துயிர் வழங்கினர். இக்காவனம் இன்று கண்ணைக் கவரும் பூவனமாகக் காட்சியளித்துக் கண்டவர் உள்ளத்தைச் சுண்டியிழுக்கிறது.

தாஜ்மகாலைப் பழுது பார்க்கும் வேலை, அது கட்டி முடிக்கப் பெற்ற நான்காம் ஆண்டிலேயே முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டது. கி. பி. 1652 ஆம் ஆண்டில் கட்டடத்திற்குக் கீழே பூமிக்குள் அமைக்கப்பட்டிருந்த அறைகளில் அடிக்கடி வெடிப்பு ஏற்பட்டது. தாஜ்மகாலின் கடைக்கால் அடிநில நீரூற்றுக்கள் வரை ஆழமாக அமைந்திருந்தது. யமுனை ஆற்றில் ஏற்பட்ட மிகுந்த வெள்ளப் பெருக்கே இவ் வெடிப்புகளுக்குக் காரணமாக இருக்கலாம் என்று அக்காலக் கட்டடக் கலைஞர்கள் கருதினர். இதை முதன் முதலில் கண்டவர் ஔரங்கசேப்பே. அவர் இதுபற்றி ஷாஜகானுக்கு எழுதித் தெரிவித்தார். பிறகு அவ் வெடிப்புகள் பழுது பார்க்கப்பட்டன. இச் செய்தி 'பாத்ஷா நாமா' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாஜ்மகாலுக்கு ஏற்படும் பழுதுகளில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது, அதன் கற்களில் ஏற்படும் வெடிப்புகளே. இவ் வெடிப்புகள் இருவிதக் காரணங்களால் ஏற்படுகின்றன. தட்ப வெப்ப நிலைகளின் மாறுதலால் கற்களில் ஏற்படும் சுருக்கம்

வெடிப்பை உண்டாக்குகிறது. இக் கட்டடத்தில் பொருத்தப்பட்டிருக்கும் இருப்புக் கப்புகள் துருப் பிடிப்பதாலும் கற்களில் வெடிப்புகள் ஏற்படுகின் றன. வெடித்த இச் சலவைக் கற்களை அகற்றி விட்டுக் குற்றமற்ற தூய பளிங்குக் கற்களை அவ் விடத்தில் பொருத்திப் பழுது பார்க்கின்றனர். கற் களைப் பொருத்துவதற்காகப் புதுவிதச் சுண்ணும்புக் கலவையைப் பயன்படுத்துகின்றனர். சலவைக் கல்லைத் தூளாக்கி எரித்து, அந்த எரிபொருளைக் கொண்டு இச் சாந்து செய்கின்றனர். இச் சாந்தில் போதிய அளவு இளக்கம் ஏற்படுவதற்காக ரூமிமஸ்தகி என்ற ஒருவகைக் கோந்தையும், பதாசா என்ற வெல்லப் பாகையும், பேல்கரி என்ற ஒரு வகைக் கொடியின் சோற்றையும் கலக்கின்றனர். கட்டடக் கலை பற்றிய இந் நுணுக்கம் பண்டைய நூல்களில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. இம் முறையைப் பயன்படுத்துவதனல் கட்டட அமைப் பிற்குள் எந்த விதமான மாசு மறுவோ, கேடு தரும் பொருளோ புகுந்து கட்டடத்தைச் சீர்குலைத்து விடாமல் காக்க முடிகிறது.

கி. பி. 1874 இல் தாஜ்மகாலின் விமானத் (dome)திலும், அதைத் தாங்கும் கழுத்தி (drum) லும் பல கற்கள் வெடித்துப் பழுது நேர்ந்தது. விமானத்தின் அமைப்புச் சீர்குலைந்து விட்டதோ என்று கட்டடக் கலைஞர்கள் ஐயுற்றனர். விமானத் தின் மேற்புறத்தில் பதிக்கப் பெற்றிருந்த சில பளிங்குக் கற்களில் வெடிப்பு ஏற்பட்டது. அவ் வெடிப்புகள் வழியாக மழைநீர் உள்ளே இறங்கி

ஊறிச் சொட்டுச் சொட்டாக உள்ளே விழத்தொடங்கியது. அவ்வாறு சொட்டும் மழைநீர் மும்தாஜின் கல்லறைமேல் விழத் தொடங்கியது. இக் காட்சியைக் கண்ட மக்கள் ஷாஜகான், வடிக்கும் கண்ணீரே மும்தாஜின் கல்லறை மேல் விழுவதாகப் பேசிக் கொண்டனர். கட்டடக் கலைஞர்கள் இவ் விமானத்தை நன்கு ஆராய்ந்தனர். மழைநீரில் ஊறிய காரணத்தால், விமானத்தின் ஒரு பகுதி உப்பேறி வலுவற்றிருந்தது. இவ்வுப்பை அகற்றுவதற்காகக் கட்டடக் கலைஞர்கள் புதிய முறை ஒன்றைக் கையாண்டனர். பத்துப் பங்கு மணலும், ஒரு பங்கு சிமெண்டும் கொண்ட சத்துக் குறைந்த கலவையை விமானத்தின் உட்புறத்தில் பூசினர். இக் கலவை உப்பை உறிஞ்சும் ஆற்றல் பெற்றது இதைப் பன்முறை மாற்றி மாற்றிப் பூசி விமானத்தி லுள்ள உப்பை எடுத்துவிட்டனர். பிறகு வலிமையான சிமெண்டுக் கலவையால் உட்பக்கத்தைப் பழுது பார்த்தனர். விமானம் மீண்டும் உறுதி பெற்றுவிட்டது.

அளவில் மிகப் பெரிதாக இருக்குமொரு கட்டடம் பல நூறு ஆண்டுகள் கழிந்த பின்னும், தன்னுடைய கடைக்கால் சிறிதும் தளராமல் இருப்பது வியப்பிற்குரிய தல்லவா? எனவே நம் நாடு விடுதலை பெற்ற ஆண்டாகிய கி.பி. 1947 இல் நம் நாட்டுக்கட்டடக் கலை வல்லுநர்கள் இதன் கடைக்காலை ஆராய விரும்பினர்; கடைக்காலைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், கடைக்கால் பரப்பிலும் நூற்று நான்கு அடையாளக் குறிகளை (bench

marks) அமைத்து அவற்றின் மட்டத்தைக் குறித்துக் கொண்டனர்; திரும்பவும் இதே சோதனைகளைக் கி. பி. 1953 ஆம் ஆண்டிலும், 1958 ஆம் ஆண்டிலும் செய்தனர்; கி. பி. 1952 ஆம் ஆண்டில் இதன் கடைக்கால் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் இன்றும் சிறிதுகூட மாறுமல், தளராமல் இருப்பதைக் கண்டறிந்தனர்; மேலும் இக் கட்டடத்தின் நாற்புறங்களிலும் உள்ள கூம்புக்கோபுரங்களும் (Minarets) தம் நிலையிலிருந்து சாயாமல் இருக்கின்றனவா என்றும் ஆராய்ந்து தெளிந்தனர்.

காலப்போக்கில் எவ்வளவு உயர்ந்த கட்டடத்திலும் வெடிப்புகள் தோன்றுவது இயற்கையே. தட்ப வெப்ப நிலையால் தாஜ்மகாலில் தோன்றும் சிறு வெடிப்புகள் மேலும் விரிகின்றனவா என்பதை மெல்லிய கண்ணுடித் துண்டுகளை அவ் வெடிப்புகளில் ஒட்டி ஆராய்கின்றனர். வெடிப்பு மேலும் விரிந்தால் இக் கண்ணுடித் துண்டுகள் உடைந்துவிடும். இவ்வாறு இருநூற்று நாற்பத்தொன்பது கண்ணுடித் துண்டுகளைப் பொருத்தித் தாஜ்மகாலின் வெடிப்புகளை ஆராய்ந்தனர். ஒரு துண்டு கூட உடையவில்லை. இதனுல் வெடிப்புகளில் நெகிழ்ச்சி ஏற்படவில்லை என்பது புலனுகிறது.

இவ்வாறு பல்லாற்ருனும் ஆராய்ந்து தாஜ்மகாலின் உறுதியை நம் நாட்டுக் கட்டடக் கலை வல்லுநர்கள் உறுதி செய்திருக்கின்றனர்; இன்னும் ஆயிரம் ஆண்டானுலும் இதைச் சிதையாமல் காப்பாற்ற முடியும் என்று நம்புகின்றனர்.

# 5. குதுப்மினர்

டில்லி நகரில் காலெடுத்து வைத்தவுடன், விண்ணை இடித்துப் பெருமிதத்துடன் நிற்கும் குதுப்மினர் தான் நம் கண்களில் படும். டில்லி நகரில் எப்பகுதியி லிருந்தும் குதுப்மினரைக் காணலாம். அதேபோலக் குதுப்மினரின் மேல் ஏறி நின்று டில்லி நகரம் முழுவதையும் காணலாம். இதன் உயரம் சுமார் 72 மீட்டர். உலகிலேயே மிக உயர்ந்த கோபுரம் இதுதான். உலகில் வர லாற்றுப் புகழ் பெற்ற வேறு பல கோபுரங்களும் உள்ளன. அவைகளில் குறிப்பிடத் தக்கவை இத்தாலி நாட்டுப் பைசா நகரில் உள்ள சாய்ந்த கோபுரமும், சீன நாட்டில் பீகிங் நகரில் உள்ள பெரும்பகோடாவும் ஆகும். ஆனல் இவையிரண் டையும்விட உயரத்தால் மிக்கது டில்லி பெரு நகரில் உள்ள குதுப்மினர்.

மினர் என்ற அரபுச் சொல்லுக்குக் கோபுரம் என்பது பொருள். இதன் அருகில் சென்று இதை நிமிர்ந்து பார்ப்பவரின் உள்ளத்தில் பல கேள்வி கள் எழும். குத்புதீன் மன்னன் இவ்வளவு உயர்ந்த கோபுரத்தை எதற்காக எழுப்பினன்? இக் கோபுரத்தை எழுப்பிய சிற்பி யார்? எழு நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இக் கோபுரம் கீழே விழாமல் எப்படி நிற்கிறது? என்பனவே அக் கேள்விகள். தொழுகைக்காக மக்களை அழைக்கும் அறிவிப்பை ஒலிபரப்புவதற்காகவே இவ்வுயர்ந்த கோபுரத்தைக் குத்புதீன் எழுப்பி

யிருக்கவேண்டும் என்று பலர் கருதுகின்றனர். ஆனால் அதன் உண்மைக் காரணம் என்னவென் பதை ஈண்டு ஆய்வோம்.

இசுலாமிய சமயம் காலத்தால் பிற்பட்டது. இது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அரேபிய நாட் டில் நபிநாயகத்தினால் தோற்றுவிக்கப்பட்டது. பாலைநிலத்தில் நாடோடிகளாகத் திரிந்த அராபிய மக்களை இச்சமயம் ஒன்று சேர்த்தது; நாகரிகத் தையும் பண்பாட்டையும் வளர்த்து வலிவுள்ள இனமாக அவர்களை மாற்றியமைத்தது. புதிய சமயத்தால் ஒன்றாக இணைந்த அம்மக்கள் புத் துணர்ச்சி பெற்றனர். மிக விரைவில் தங்கள் சம யத்தை ஆசிய நாட்டின் மேற்குப் பகுதியில் பரப்பி விட்டனர்.

சமயத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத் தோடு, புதுநாடுகளைக் கைப்பற்றி ஆள வேண்டும் என்ற பேரவாவும் அராபியரைப் பிடர் பிடித்துத் தள்ளியது. மாபெரும் வீரர்களும், அரசியல் தலைவர்களும் அவர்களிடையே தோன் றினர். புயல்போல அவர்கள் நாற்புறமும் சீறி எழுந்தனர். வலிமைமிக்க அவர்கள் வாள்வீச் சுக்கு முன்னால் மணி முடிகள் உருண்டு மண்ணில் விழுந்தன. கொடி கட்டி ஆண்ட மாபெரும் பேரரசுகளெல்லாம் மண்மேடாயின. பாரசீகம், ஆப்கானிஸ்தானம், துருக்கிஸ்தானம், துருக்கி, வடஆப்ரிக்கா முதலிய நாடுகள் அவர்கள் காலடி யில் சரணடைந்தன. ஏறத்தாழ ஐரோப்பாவின் பெரும் பகுதி இவர்கள் குதிரைக் குளம்படியில் கும்பிட்டுப் பணிந்தன.

ஜபர் உல் தாரீக் என்ற ஓர் அராபியத் தளபதி வட ஆப்பிரிக்காவை வட்டமிட்டு, இன்று ஜிப்ரால்டர் நீரிணைப்பு என வழங்கும் இடத்தை அடைந்து, அங்கிருந்து ஸ்பெயின் நாட்டிலும் புகுந்து அதைக் கைப்பற்றினான். அவன் கடந்து வந்த நீரிணைப்புக்கு ஜிப்ரால்டர் நீரிணைப்பு என இன்றும் அவனுடைய பெயரே மருவி வழங்குகிறது. ஸ்பெயின் நாட்டின் தென்பகுதியில் 15 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் இசுலாமியர் ஆட்சி நிலைத்திருந்தது.

இவ்வாறு உலகமே நடுங்கப் போர் முரசு கொட்டிய அராபியர்களின் கவனத்தை இந்தியப் பெருநிலம் ஈர்த்தது. இந்திய நாடு பரந்த ஒரு துணைக்கண்டம். இமயம் முதல் குமரிவரை எல்லாச் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்ற இணையற்ற பெருநிலம். புனிதக் கங்கையும், சீறிப் பாயும் சிந்துப் பேராறும், நல்வளம் கொழிக்கும் நருமதையும், வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமிக்க காவிரியும் ஓடி வளப்படுத்தும் வளநாடு இந் நாவலந்தீவு. முத்தும் பவளமும் அகிலும் தேக்கும் நெல்லும் கரும்பும் தமிழகத்திலுண்டு. குறையாத கோதுமை வளம் சிந்து, கங்கைச் சமவெளியில் உண்டு. மேருமலையில் மணியுண்டு. இங்கிருப்பது போன்ற வளமிக்க பெருஞ் சமவெளிகளை வேறெங்கும் காண்பது அருமை.

இந்திய நாட்டின் செல்வ வளம் அராபியரின் செவிகளுக்கு எட்டியது. அச்செல்வத்தை விட்டு

வைக்கக் கூடாது என்று கச்சை கட்டி நின்றனர் அராபியர்; கி.பி. 712 இல் முகம்மது பின் காசிம் என்ற வீரன் தலைமையில் கடலைக் கடந்து சிந்து நாட்டில் காலடி எடுத்து வைத்தனர். சிந்து நாட்டின் மன்னனுன தாகிர் கொல்லப்பட்டான். சிந்து நாடு அராபியர் ஆட்சிக்கு உட்பட்டது. சிறிது காலமே அவ்வாட்சி நிலைபெற்றது; பிறகு செத்து மடிந்தது.

மீண்டும் பத்தாம் நூற்றுண்டில் இசுலாமியர் இந்திய நாட்டின் மேல் தம் படை வெள்ளத்தைத் திருப்பினர். இப்போது இவர்கள் கடல்வழியாக வரவில்லை; கைபர், போலன் கணவாய்களின் வழியாக இந்திய நாட்டிற்குள் நுழைந்தனர். அவ்வாறு நுழைந்தவன் கஜ்னி நகரை ஆட்சி புரிந்த சபக்டிஜின் என்ற மன்னன். இவன், செயபாலன் என்ற இராசபுத்திர மன்னனைத் தோற்கடித்துப் பெஷாவர் வரையிலுமுள்ள பகுதிகளைக் கைப்பற்றிஞன். ஆஞல் சில நாட்களில் அவனும் செத்து மடிந்தான். அவனுக்குப்பின் அவன் மகஞன மாமூது காட்டாற்றைப்போல் இந்தியப் பெரு நிலத்தில் புகுந்தான்.

இந்திய வரலாற்றில் கொடுமையின் சிகரமாகக் குறிக்கப்படும் கஜ்னி மாமூது என்ற குருதி வெறிக் கோமான் இவனே. இவனை ஒரு காட்டுத்தீக்கு ஒப்பிடலாம். காட்டுத்தீ, பற்றிய இடத்தையெல்லாம் சாம்பலாக்குவது போல, இவன் காலடி வைத்த இடமெல்லாம் சுடுகாடாக்கினுன். இந்திய நாட்டின் வளமிக்க நகரங்களெல்லாம் இவன் வாள்வீச்சுக்குச் சரிந்தன.

மாமூதின் நோக்கம் இந்திய நாட்டில் இசுலாமியப் பேரரசை நிறுவ வேண்டும் என்பதன்று. பொன் விளையும் பூமியான இந்திய நாட்டின் செல்வம் எல்லாவற்றையும் அடியோடு சுரண்டிக் கொண்டு போய்த் தன் நாட்டில் குவிக்க வேண்டும் என்பதுதான். மேலும் இசுலாமிய சமயத்தை இந்திய நாட்டில் பரப்ப வேண்டுமென்றும் இவன் நினைத்தான்; இந்திய நாட்டில் உள்ள கோவில்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டு, எங்கும் மசூதிகளை எழுப்ப வேண்டுமென்று நினைத்தான்; இந்திய நாட்டின்மீது பதினேழு முறை படையெடுத்தான்; ஒவ்வொரு முறையும் குதிரைகளின்மீதும், ஒட்டகங்கள்மீதும் இந்திய நாட்டின் செல்வத்தை வாரி மூட்டை கட்டிக்கொண்டு சென்றான்.

பெஷாவர், மூல்தான், நாகர்கட், படிண்டா, நாராயணபுரம், தானேசுவரம், மதுரா, சோமதநாதபுரம் ஆகிய பட்டணங்களை மாமூது கொள்ளையடித்தான்; கோவிற் சிலைகளைச் சுக்கு நூறாக்கினான்; இந்திய நாட்டிலிருந்து எடுத்துச் சென்ற செல்வத்தைக் கொண்டு தன் தலைநகரான கஜ்னியை அழகு படுத்தினான்; அங்குப் பல்கலைக் கழகத்தையும், நூல் நிலையங்களையும் நிறுவினான்; பிர்தௌசி, அல்பெருனி முதலிய கவிஞர்களை ஆதரித்தான். ஆனால் இந்திய நாட்டில் பேரரசை நிறுவ அவனால் முடியவில்லை.

கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கோரியிலிருந்து புறப்பட்ட முகம்மது என்ற மன்

னன் வடஇந்தியாவில் சிறப்புடன் ஆட்சி புரிந்து கொண்டிருந்த இராசபுத்திர மன்னனாகிய பிருதிவி யைத் தோற்கடித்து விட்டு இசுலாமியப் பேரரசை டில்லியில் நிறுவினான். ஆனால் அவனும் சில ஆண்டுகளில் கொலையுண்டு இறந்தான். இவ்வாறு இசுலாமியர்கள் பலமுறை இந்திய நாட்டின்மீது படையெடுத்தும் யாராலும் நிலைத்த ஓர் அரசியலை உருவாக்க முடியவில்லை.

இந்திய நாட்டில் முகம்மது கோரி துவக்கி வைத்த இசுலாமிய அரசு என்னும் அடிப்படையின் மீது, பேரரசு என்னும் பெருமாளிகையை எழுப்பிய பெருமை, அவனுடைய அடிமை ஒருவனையே சாரும். அவன்தான் குத்புதீன். முகம்மது கோரி யிடம் இவன் அடிமையாகப் பணி செய்தவன்; தன் உழைப்பாலும் அறிவாற்றலாலும் கோரியின் நன் மதிப்பைப் பெற்றுப் படிப்படியாக உயர்ந்து, இறுதி யில் அவன் முழு நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரியவனாக மாறிவிட்டான்.

கோரி கி. பி. 1206 ஆம் ஆண்டில் இறந்ததும், இந்திய நாட்டில் அவன் வென்ற பகுதிகளுக்குக் குத்புதீன் மன்னன் ஆனான்; மேலும் பல பகுதிகளை வென்று, தன் ஆட்சியின் எல்லையை விரிவு படுத்திக் கொண்டான்; வலிமை மிக்க ஆட்சியை இந்திய நாட்டில் வேரூன்றுமாறு செய்து விட் டான். எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில், இந்திய நாட்டை வென்று ஒரு பேரரசை நிறுவ வேண்டும் என்று எண்ணி முயன்ற அராபியரின் முயற்சி ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின் குத்புதீனால்

முற்றுப் பெற்றது. தன் முன்னோரால் சாதிக்க முடியாத பெருஞ்செயலைச் சாதித்து முடித்த குத்புதீன் அவ்வெற்றிப் புகழ் என்றும் நிலைத் திருக்குமாறு செய்ய விரும்பினான். அவ்விருப் பத்தின் விளைவாக எழுந்த வெற்றிச் சின்னமே குதுப்மினார்.

குதுப்மினார் உலகிலேயே மிக உயர்ந்த கோபுர மென்று நாம் கண்டோம். இதன் உச்சியில் ஏறி நிற்கும் ஒருவன் உரக்கக் கூவினால்கூட, இதன் அடியில் நிற்பவனின் காதில் அச்சத்தம் விழாது. இவ்வுயர்ந்த கோபுரத்தை வெற்றியின் சின்னமாகத் தான் குத்புதீன் எழுப்பினான் என்பதற்கு வேறு சில சான்றுகளும் உண்டு. இந்திய நாட்டைப் பதினேழு முறை கொள்ளையடித்துச் சென்ற கஜ்னி மாமூது, தன் தலைநகரான கஜ்னி மாநகரில் இதைப் போன்றே, ஒரு கோபுரத்தைத் தன் வெற்றியின் சின்னமாக எழுப்பினான். கோரி முகம்மதுவும் வெற்றிச் சின்னமாகக் கோரி நகரில் ஒரு கோபு ரத்தை எழுப்பினான். தன் முன்னோர்களைப் பின் பற்றிக் குத்புதீனும் டில்லியில் குதுப்மினாரை எழுப்பி யிருக்கவேண்டும்.

கோரி முகம்மது டில்லியைக் கைப்பற்றுவதற்கு முன்பாக இப்பெரு நகரில் வீற்றிருந்து ஆட்சி புரிந்த இராசபுத்திர வீரன் பிருதிவி. அவனோ அல்லது அவன் மாமனான விக்கிரக ராஜாவோ, தோமார் இராசபுத்திரர்களிடமிருந்து டில்லியைக் கைப்பற்றிய அவ்வெற்றியின் சின்னமாக இக்கோபு ரத்தை எழுப்பி யிருக்கலாம் என்று சில வரலாற்

ரூசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால் இந்து அரசர் கள் வெற்றிச் சின்னமாகப் பெருந்தூண்களை எழுப்பி யிருக்கின்றனரே யன்றி, இதுபோன்ற உயர்ந்த கூம்புக் கோபுரங்களை எழுப்பியதாக இந்திய நாட்டு வரலாற்றில் காணமுடியாது. இக் கோபுரத்தைக் குத்புதீன்தான் எழுப்பி யிருக்க வேண்டும் என்று நம்புதற்கிட மிருக்கின்றது. அல்லது கோரி முகம்மது இக்கோபுர வேலையைத் தொடங்கி, குத்புதீனும் அல்டமிசும் இதை முற்றுப் பெறச் செய்திருக்கலாம் என்றும் எண்ண இடமிருக்கிறது. இக்கோபுர வேலை கி.பி. 1220 ஆம் ஆண்டு முற்றுப் பெற்றது.

குத்புதீன் தோற்றுவித்த அடிமையினப் பேரரசு அழிந்த பிறகு டில்லி நகரில் அரியணை ஏறி ஆட்சிபுரிந்த இசுலாமியப் பேரரசர்கள் கில்ஜி இன அரசர்கள். இவர்களில் குறிப்பிடத்தக்க பெரு வீரன் அலாவுத்தீன் கில்ஜி. இவனுடைய படைத் தலைவனை மாலிக் காபூர் தமிழகத்து மதுரை வரையில் படையெடுத்து வந்து வெற்றி பெற்றான். வடக்கே இமயம் முதல் தெற்கே மதுரை வரையில் இவன் பேரரசு பரவிக்கிடந்தது.

தக்கணத்தில் தான் பெற்ற இவ்வெற்றியை நிலைநாட்டும் பொருட்டுக் கில்ஜி ஒரு வெற்றிக் கோபுரம் எழுப்ப விரும்பினான்; அக்கோபுரம் குதுப்மினாரைப் போல் இருமடங்கு உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணினான். கட்டட வேலையும் துவக்கப்பட்டது. ஆனால் அதன் துவக்க காலத்திலேயே அலாவுத்தீன் இறந்து

விட்டான். அதன் பிறகு அக்கோபுரப் பணி முற்றுப் பெருமலேயே நின்று விட்டது. அவன் வழியில் வந்த மன்னர்கள் யாரும் அப்பணியைத் தொடர்ந்து செய்ய முன் வரவில்லை. குத்புதீனுடைய மசூதிக்கு மறுபுறத்தில் முற்றுப்பெருத இக்கோபுரத்தின் அழிவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

பிரோஜ்ஷா வினுடைய ஆட்சிக் காலத்தில் டில்லியில் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நில நடுக்கத்தால் குதுப்மினரின் உச்சியிலுள்ள இரண்டு மாடிகள் சிதைந்தன. பிரோஜ்ஷா அவற்றைப் புதிதாக அமைத்து ஓர் அழகிய தாழ்வாரத்தையும் சேர்த்தான். இம்மாடிகள் கி. பி. 1505 ஆம் ஆண்டு சிக்கந்தர் லோடியினுல் மீண்டும் பழுது பார்க்கப்பட்டன. கி. பி. 1794 ஆம் ஆண்டில் குதுப்மினர் மீண்டும் பழுதடைந்தது, மேஜர் ஸ்மித் என்ற பொறியியல் வல்லுநர் இதைப் பழுது பார்த்ததோடு இதன் உச்சியில் மற்ருெரு தாழ்வாரத்தையும் அமைத்தார். கி. பி. 1848 ஆம் ஆண்டு இந்திய நாட்டின் தலைமை ஆளுநராக விளங்கிய ஹார்டிஞ்சு பிரபு இத்தாழ்வாரங்களை அகற்றி விட்டார். இத்தாழ்வாரங்கள் குதுப்மினருக்கும் தங்கல் மனைக்கும் நடுவிலுள்ள பூங்காவில் கிடக்கின்றன.

பிரோஜ் ஷாவினுல் புதிதாக அமைக்கப்பட்ட அவ்விரண்டு மாடிகளும் வெண்மையான சலவைக் கற்களால் கட்டப்பட்டவை; பளபளப்பானவை. அவற்றிற்கு அடிப்புறத்திலுள்ள மூன்று மாடிகளும் செந்நிறக் கற்களால் கட்டப்பட்டவை.

குதுப்மினுரைச் சற்றுத் தொலைவிலிருந்து கூர்ந்து நோக்கினுல், அது செங்குத்தாக இல்லாமல் சற்றுச் சாய்ந்திருப்பது தென்படும். பலமுறை ஏற்பட்ட நிலநடுக்கங்களே இச் சாய்வுக்குக் காரணம். டில்லியிலுள்ள தொல்பொருள் காப்புத் துறையினர் இதை மிகவும் கண்காணிப்போடு காத்து வருகின்றனர். சிறு விரிசல் ஏற்பட்டால் கூட உடனுக்குடன் அதைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

குதுப்மினுரின் அருகிற் சென்று பார்த்தோமானுல் அல்டமிசின் சமாதியில் காணப்படுவது போன்ற அழகிய சிற்ப ஓவியங்கள் கீழ்மாடிகளின் சுவர்களில் காணப்படுகின்றன. கோபுரச் சுவர்களில் நாற்புறமும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அல்டமிசு குதுப்மினுரைக் கட்டிமுற்றுப் பெறச் செய்த செய்தியைப் பற்றிய எல்லாக் குறிப்புகளும் அவற்றில் காணப்படுகின்றன. கோபுரம் உறுதியாக இருக்க வேண்டும் என்பதற்காக, இதன் சுவர்களை வெளிப்புறத்தில் மிகவும் சரிந்திருக்குமாறு சாய்த்துக் கட்டியிருக்கின்றனர். கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒருவன் கீழே குதித்தால் அவன் நேராகப் பூமியில் விழமாட்டான்; சுவரிலேயே மோதிக் கொள்வான். தாவிக் குதிப்பதில் மிகவும் வல்லவனு யிருந்தால்கூடச் சுவரில் மோதாமல் கீழே குதிக்க முடியாது.

குதுப்மினுரின் உச்சியை நாம் அடைந்தோமானுல் டில்லி நகரின் அழகிய காட்சிகளையெல்லாம் ஒன்று விடாமல் பார்க்கக் கூடும். இவ்வுச்சியை யடைய 378 படிக்கட்டுகளை ஏறியாக

வேண்டும். இவ்வுச்சியில் நிற்போருக்குச் செங் கோட்டையின் வெளிப் புறச் சுவர்கள் தென்படும்; டில்லி நெடுஞ்சாலை ஆறு கிடந்தாற்போல் அகன்று செல்வதைக் காணலாம் ; இடப் புறத்தில் ஆஸ்காஸ் மாளிகைகளையும், வலப்புறத்தில் ஜகன்பன்னு, சிரி ஆகியவற்றின் சுவர்களையும் காணலாம்.

(ஜகன்பன்னு என்ற இடம், முகம்மது துக்ளக் என்பவனால் கட்டப்பட்ட கோட்டை; சிரி, அலாவுத்தீன் கில்ஜியால் கட்டப்பட்ட கோட்டை. அவைகள் யாவும் சிதைந்து, அழிவுச் சின்னங் களாகவே இன்று காணப்படுகின்றன.)

இவ்வுச்சியின் மேல் ஏறி நின்றுதான், துக்ளக் அரசர்களும், கில்ஜி மன்னர்களும், முரட்டு மொகலாயர்கள் டில்லி நகரைச் சூறையாடிய கொடிய காட்சியைக் கண்ணால் கண்டனர். தைமூரின் படை வெள்ளம், இப்போதுள்ள வில்லிங்டன் விமான நிலையத்தில் பாசறை அமைத்துத் தங்கியிருந்த காட்சியை, முகம்மது துக்ளக் இவ்வுச்சியில் ஏறி நின்றுதான் கண்டான்.

இவ்வுச்சியில் நின்ற வண்ணம் நம் பார்வையைச் சற்றுத் தொலைவில் செலுத்தினால் ஒரு பக்கத்தில் துக்ளகாபாத்தின் சுவர்களையும், மறு பக்கத்தில் பழங்கோட்டை (புரானு கிலா) யையும், உமாயூனுடைய சமாதியையும் காணலாம். உமாயூனுடைய சமாதியின் மேல் நம் கண் பார்வை மோதியவுடன் நம்மையறியாமல் நம் உணர்ச்சி சிலிர்ப்படையும். மொகலாயர்களின் மிக்க அழகிய

கலைக் கோவில்களில் இதுவும் ஒன்று. கி. பி. 1565 ஆம் ஆண்டு மொகலாயப் பேரரசின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக விளங்கிய அக்பரின் தாயும், உமாயூனின் மனைவியுமான அமிதா பானு பேகத்தினால் இச்சமாதி எழுப்பப்பட்டது. சிற்பக் கலையழகில் தாஜ்மகாலுக்கு அடுத்த நிலையில் வைத்து உமாயூன் சமாதி பேசப்படுகிறது.

இச்சமாதியில் நிலைத்த நம் பார்வையைத் திருப்பினால் பிரோஜ்ஷா கோட்லா தென்படும். அதை அடுத்து ஜும்மா மசூதியின் உச்சிப் பிறைக் கோளங்கள் தென்படும். மொகலாயப் பெரு மன்னர்களின் மதிப்பிற்குரிய தொழுகையிடம் இதுவே. ஜும்மா மசூதிக்கு அடுத்தாற்போல் நம் கண்ணில் படுவன சப்தர் ஜங்கின் சமாதியும், புது டில்லியும் ஆகும். கடைசியாக நம் கண்ணில் படுவது தென்மேற்குப் பகுதியில் காணப்படும் பாறைக் கூட்டம் ஆகும். அப்பாறைக் கூட்டத்தின் நடுவில் சுல்தான் காரியின் அழகிய சமாதியைக் காணலாம். இவ்வரலாற்றுச் சின்னங்களையெல்லாம் இணைக்கும் பாதைகள், இருபுறங்களிலும் செழித்த பசுமரங்களைக் கொண்டு விளங்குகின்றன.

மேலே கூறப்பட்ட இவ்வளவு காட்சிகளையும் குதுப்மினாரின் உச்சியிலிருந்து உளங்குளிரக் காணலாம். இத்தகைய அழகுக் காட்சிகளை உரோமாபுரியிலன்றி, உலகில் வேறெங்கும் காண முடியாது.

---

# 6. செங்கோட்டை

ஐரோப்பாக் கண்டத்தில் வரலாற்றுச் சின்னங்களுக்குப் புகழ்பெற்ற பெருநகரம் உரோமாபுரியாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் வரலாற்றுச் சின்னங்களுக்குப் புகழ்பெற்ற இடம் டில்லி மாநகரம்.

இந்நகரம் எத்தனையோ அரச பரம்பரையைக் கண்டுள்ளது. இந்நகரில் மணி முடி தரித்த மன்னர் பலர் அரியணை ஏறி அரசு புரிந்துள்ளனர். மாவீரர் பலர் தங்கள் குருதிச் சேற்றை இந்நகரில் கொட்டி வெற்றி விழாக் கொண்டாடி யிருக்கின்றனர்.

வெனிசு, யவனம், பாரசீகம், துருக்கி முதலிய நாடுகளிலிருந்து கட்டடக் கலைஞர்களும் சிற்பிகளும் இங்கு வந்து கூடி இந்நகரைத் தம் கைவண்ணத்தாலும், கலை வண்ணத்தாலும் அழகுபடுத்தி இருக்கின்றனர். தான்சேன் போன்ற மாபெரும் இசைக் கலைஞர்கள், தம் இசை வெள்ளத்தில் இந்நகரை ஆழ்த்தி இன்பம் கண்டிருக்கின்றனர். இராசபுதனத்து எழில் மங்கையரும், அரபு நாட்டு அழகியரும், பாரசீகப் பாவையரும் இப்பொன்னகரின் பூங்காக்களில் அடி பெயர்த்து நடந்து இதை விண்ணகராக்கி யிருக்கின்றனர். வரலாற்றாசிரியர்களின் பொன்னேட்டைப் புரட்டிப் பார்த்தால், புகழ் மிக்க இத்தலைநகரம் ஆயிரமாயிரம் கதைகள் கூறும்.

டில்லி நகரில் அரசுக்கட்டில் ஏறிய அரசப் பெருங்குடியினரில் மொகலாயர் குறிப்பிடத் தக்கவர்கள் என்பது சொல்லாமல் விளங்கும். ஷாஜகான்

ஆட்சியை மொகலாயர்களின் பொற்காலம் என்று சொல்லுவர். அவன் காலத்தில் அரண்மனைக் கருவூலத்தில் பொன்னும் மணியும் மலைபோலக் குவிந்து கிடந்தன. டில்லிப் பெருநகரம் அவன் கைவண்ணத்துக்காகக் காத்துக்கிடந்தது. இந்நகருக்குள் காலடி எடுத்து வைப்பவர் ஒவ்வொருவரும் காண விரும்புவது செங்கோட்டையைத்தான். இக்கோட்டையை எழுப்பிய பெரு மன்னன் ஷாஜகானே.

இக்காலத்தில் இதைச் செங்கோட்டை என்று வழங்குகின்றனர். ஷாஜகான் காலத்தில் இது உருது - இ - முஅல்லா என்ற பெயரால் வழங்கப் பட்டது. ஷாஜகானுக்குப் பிறகு ஆண்ட மொகலாய மன்னர்கள் 'பெருமைக்குரிய பெருங்கோட்டை' என்ற பெயரால் இதை அழைத்தனர்.

இந்தியாவில் பல இடங்களில் உள்ள மன்னர்களுடைய அரண்மனைகளைவிடச் செங்கோட்டை பேரழகோடு விளங்குகிறது. குறிப்பாகச் சொல்லப் போனல், இந்திய நாட்டிலேயே செங்கோட்டைக்கு ஒப்பான பெருமாளிகையை எங்கும் காண முடியாது. இது கோட்டைக்குக் கோட்டையாகவும், அரண்மனைக்கு அரண்மனையாகவும் விளங்கியது. திவானீ ஆம், திவானீ காஸ், ஜெஞு, ரங்மகல் முதலிய மாளிகைகள் செங்கோட்டையில் அடங்கிய பகுதிகளாகும். அயத்பக்சு, மேதாப் பாக் என்பன இம்மாளிகைகளைச் சூழ்ந்திருக்கும் அழகிய பூங்காக்களாகும்.

கோட்டையின் மதிற்சுவரைக் கடந்து உள்ளே நுழைந்ததும் அரண்மனை வாயில் தென்படும்.

அரண்மனையின் வாயில் மிக்க பேரழகுடையது. இதை நக்கர் காஞு என்று அழைப்பர். இவ்வாயிலுக்குள் நுழைந்தவுடன், முரசுப் பீடம் தென்படும். இப்பீடத்தின் மேல் முரசங்கள் அணிபெற வைக்கப்பட்டிருக்கும். காவல் மரமும், முரசுக் கட்டிலும் தமிழ் மன்னர்களால் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டன என்பதை நாம் சங்க இலக்கியங்களின் மூலமாக அறிந்திருக்கிறோம். அதே போல மொகலாயர்களும் முரசுப் பீடத்தைப் புனித முடைய ஒன்றாகப் போற்றி வந்தனர். அரச குடியினரும், அரசரின் பெரு மதிப்பிற்குரிய அதிகாரிகளுமே இம் முரசை முழக்கும் உரிமை பெற்றவர்கள். இவ்வரச முரசம் நாள்தோறும் ஆறு முறை முழக்கப்படும்.

நக்கர் காஞு என்று கூறப்படும் இவ்வழகு மிக்க பெருவாயிலுக்குமேல், மாடம் ஒன்று அமைந்துள்ளது. முரசை முழக்கும் குழுவினர் அம்மாடத்தின் மேல் அணி பெற வீற்றிருப்பர். இப்போது இம்மாடம் பண்டைப் போர்க் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும் பொருட் காட்சி நிலையமாக விளங்குகிறது.

இவ்வாயிலுக்குள் நுழைந்துதான் அரச மாளிகைகளுக்குள் செல்ல வேண்டும். கி. பி. 1754 ஆம் ஆண்டு, பேரரசர் அகமதுஷா இந் நக்கர் காஞுவில்தான் படுகொலை செய்யப்பட்டார். மதிற் சுவரின் வாயிலுக்கும் நக்கர் காஞுவுக்கும் இடைப்பட்ட வெளியில் அரண்மனைக் காவலுக்கென அமர்த்தப்பட்ட படை வீரர்களின் பாடி அமைந்

திருந்தது. அரண்மனைக் காவல் என்பது பெரு மதிப்பிற்குரிய பணியாகும். இப்பணியை ஏற்கப் போர் வீரர்கள் போட்டியிட்டு முந்துவர். பெரும் பாலும் இராசபுத்திரர்களே இப்பணியை ஏற்கும் காவல் வீரர்களாக அமர்த்தப் பட்டனர்.

நக்கர் கானவைக் கடந்து உள்ளே சென்றதும், திவானீ ஆம் என்ற பெருமாளிகை உள்ளது. இம் மாளிகையின் முன் பகுதியில் அமைந்துள்ள அத் தாணி மண்டபம் மிகப் பெரியது; கலைச்சிறப்புடன் கூடியது. மொகலாய மன்னர்களின் நாளோலக்கம் இம்மண்டபத்தில் தான் இடம் பெறும். மன்னர் பெருமான் இம்மண்டபத்தில் வீற்றிருந்து வெளி நாட்டுத் தூதுவர்களுக்குக் காட்சி கொடுப்பார்; அவர்களோடு அரசியல் உறவுபற்றி உரையாடு வார்; படை வீரர்களின் அணி வகுப்பை நாள் தோறும் பார்வையிடுவார்; வணிகர்களோடு வாணிகம் பற்றி உரையாடுவார். மன்னனைக் காண விரும்பும் பொது மக்களும், முன்னிசைவு பெற்று இம்மண்டபத்தில் சென்று காணலாம்.

திவானீ ஆம் மாளிகையின் சுவர்கள், வெண் ணெய்போல் மென்மையாக அரைத்தெடுத்த சுண்ணச் சாந்தினால் தளம் பூசப் பெற்றவை. அரசர் வீற்றிருக்கும் அத்தாணி மண்டபத்தின் முன் பகுதி நீண்ட, சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய அழகு முற்றத்தைக் கொண்டது. டில்லி நகரில் வாழும் பிரபுக்கள் யாவரும் தத்தம் தகுதிக் கேற்ப, முறைப்படி வரிசையாக, எதிரெதிரில் இம்

முற்றத்தே நிற்பர். இளவரசர்கள் அரியணைக்கு இரு மருங்கும் நின்று கொண்டிருப்பர்.

அரியணைக்குப் பக்கத்தில் ஓர் அழகு வாயில் தென்படும். இவ்வாயிலின் வழியாகத் தான் அரசர் பெருமான் அத்தாணி மண்டபத்தில் அடியெடுத்து வைப்பார். அ ர ச ர் வீற்றிருக்கும் அரியணை, உயர்ந்த பீடத்தின் மேல் அமைந்துள்ளது. ஷாஜகானும், அவுரங்கசேப்பும் நாள் தோறும் இரு முறை இந்நாளோலக்கத்தில் அமர்ந்து அரசியற் செயல்களை மேற் கொண்டனர். வாரத்தில் குறைந்தது நான்கு நாட்களாவது இப் பேரவை கூடும். சிறிய பிரபுக்களெல்லாம் அத் தாணி மண்டபத்தின் வெளியில் நிற்பர். இவர்களை மற்றவர்களினின்றும் பிரிப்பதற்காக நடுவில் ஒரு திரை இடப்பட்டிருக்கும்.

மொகலாயப் பெருமன்னர்கள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் மிகச் சிறந்த கலைஞர்களை வரவழைத்து அவர்களை ஆதரித்து வந்தனர். பன்னாட்டுக் கலைஞர்களும் தங்களுடைய அரசவையை அலங்கரிக்க வேண்டும் என்று அவர்கள் பேரவாக் கொண்டனர். அதைப் பெருமைக்குரிய செயலாகவும் கருதினர். அரசர் வீற்றிருக்கும் அரியணைக்குப் பின்னால், உயரத்தில் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் சிற்பத்தோடு கூடிய வண்ணப் பளிங்குப் பலகையொன்று பொருத்தப் பட்டுள்ளது. அது ஒரு பிரெஞ்சுச் சிற்பியினால் செதுக்கப்பட்டது. ஓர் ஆடவன் ஒரு கின்னரத்தை மீட்டி இன்னிசை எழுப்புவதுபோல் அச்சிற்பம்

அமைந்துள்ளது. கிரேக்கர்களின் இசைக் கடவுளான ஆர்பியசையே (Orpheus) அவ்வாடவனின் உருவம் குறிப்பிடுகிறது என்று கூறுகின்றனர். கி. பி. 1857 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் (Soldiers' Mutiny) என்று வரலாற்றுசிரியர்களால் குறிப்பிடப்படும் முதல் உரிமைப் போரின்போது, இச்சிற்பம் இம்மாளிகையினின்றும் பெயர்த்தெடுத்துக் கொண்டு செல்லப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஆங்கிலத் தலைமை ஆளுநராக இந்தியாவிற்கு வந்த கர்சன் பிரபு இலண்டன் மாநகரில் அச்சிற்பத்தைக் கண்டுபிடித்து, மீண்டும் இம்மாளிகையிலேயே கொண்டு வந்து பொருத்தினர். கோடை நாட்களின் வெப்பத்தைத் தணிப்பதற்காக இவ்வத்தாணி மண்டபத்தைச் சுற்றிச் செந்நிறத் திரைகள் தொங்கவிடப்படும். அத்திரைச் சேலைகள் தொங்கவிடப் பொருத்தப்பட்ட வளையங்களை இன்றும் அங்குக் காணலாம்.

திவானீ ஆம் என்று சொல்லக்கூடிய இம்மாளிகையின் இடப் புறத்தில் ஒரு பாதை செல்லுகிறது. இப்பாதையின் முகப்பில் ஒரு வாயில் உள்ளது. இவ்வாயிலைச் செந்நிறத்திரை மறைத்துக் கொண்டிருந்த காரணத்தால் 'செந்திரை வாயில்' (லால் பர்தா) என்று இது அழைக்கப்பட்டது. அரசரின் நன்மதிப்பைப் பெற்ற பெருமக்களே இவ்வாயிலுக்குள் நுழைய முடியும். அவர்கள் 'லால் பர்தாரிகள்' என்று அழைக்கப்பட்டனர். லால் பர்தாரிகள் மொகலாய அரசியலில் செல்வாக்குப் பெற்றவர்கள்.

திவானீ ஆம் மாளிகையிலிருந்து பார்த்தால் லாகூர் வாயிலுக்கு (Lahore gate) எதிரில் ஒரு நெடுஞ்சுவரைக் காணலாம். இது பேரரசன் அவுரங்கசேப்பினுல் கட்டப்பட்டது. இது இம் மாளிகையையும் நிலவு அங்காடி (Chandni chowk) யையும் பிரிக்கிறது. அரசர் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்தால் அங்காடியில் போவோர் வருவோர் எல்லாரும் கண்களுக்குத் தென்படுவர். இதைத் தடுக்கவே இப்பெருஞ்சுவர் எழுப்பப் பட்டது.

திவானீ ஆம் என்ற இப்பெரு மாளிகையை அடுத்தாற்போல் திவானீ காஸ் என்ற மற்ருேர் அழகு மணி மாளிகை அமைந்துள்ளது. இம் மாளிகைக்குள் எல்லாரும் செல்ல முடியாது. அரசரின் தனிப்பட்ட உரையாடல்களுக்கு இம் மாளிகை இடமாக விளங்கியது. அரசியலில் பங்கு கொண்டுள்ள முக்கிய அலுவலர்களே இதனுள் செல்ல முடியும். அவ்வலுவலர்கள் இக் காலச் சட்டசபை உறுப்பினர்களின் தகுதியைப் பெற்ற வர்கள் என்று கூறலாம். இம்மாளிகையில் வேறு சில தனிப்பட்ட அறைகளும் உண்டு. அவ்வறை கள் கண்ணைக்கவரும் ஒப்பனையுடன் கூடியவை. இவ்வறைகளில் மன்னர் தம் நண்பர்களோடு உரையாடுவார்; விருந்துண்பார்.

இத்திவானீ காசில்தான் மயிலாசனம் (Peacock throne) அமைக்கப்பட்டிருந்தது. இது மொகலாய மன்னன் ஷாஜகானுல் செய்து வைக்கப்பட்டது. இவ்விருக்கை பொன்னுலாகியது; நவமணிகளும் பதிக்கப் பெற்றது; பன்னூருயிரக் கணக்கான

மோகராக்கள் மதிப்புடையது. பாரசீக மன்னன் நாதிர்ஷா இந்தியாவின்மீது படையெடுத்தபொழுது டில்லி நகரத்தின் செல்வங்களைக்கொள்ளையடித்துக் கொண்டு சென்றுனல்லவா? அப்போது இம் மயிலாசனத்தையும், விலைமதிப்பற்ற கோகினூர் வைரத்தையும் மற்றக் கொள்ளைப் பொருள்களோடு கொண்டு சென்று விட்டான்.

நாதிர்ஷா தன் கொள்ளைப் பொருள்களோடு பாரசீகம் திரும்புவதற்கு முன்பாக இம்மாளிகையில் தான் வீற்றிருந்து, வெற்றிகொண்ட இந்நாட்டை மீண்டும் முகம்மது ஷாவிற்குத் திருப்பிக் கொடுத்தான். குலாம்காதிர், ஷா ஆலத்தின் கண்களைக் குருடாக்கிய இடமும் இதுவே. மொகலாய மன்னன், ஷா ஆலம், இம்மாளிகையில் வீற்றிருந்துதான் கி. பி. 1803 ஆம் ஆண்டு ஆங்கிலத் தளபதி லேக் பிரபுவிற்கு வரவேற்பு நல்கினுன். இந்திய நாட்டிற்குச் சுற்றுலா வந்த ஆங்கிலப் பேரரசன் ஐந்தாம் ஜார்ஜும், அவருடைய மகன் வேல்சு இளவரசனும் இந்தத் திவானீ காசிலேயே அமர்ந்து நாளோலக்கம் நடத்தினர்.

திவானீ காஸ் மாளிகையின் பின்பகுதி மன்னர் வாழும் இருப்பிடத்தைக் கொண்டதாகும். இந்திய நாட்டைத் தம் விரலசைவில் ஆட்டிப் படைத்த மொகலாயப் பெருமன்னர்கள் உண்டு, உறங்கும் இடம் எத்தகைய சிறப்போடு இருந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நம் கண் பட்ட விடமெல்லாம் மிக உயர்ந்த பளிங்குக் கற்களே தென்படும். சிற்ப நுணுக்கம் இல்லாத இடமே அங்கு இல்லை. உலகின் நாற்புறங்களிலும்

வாழ்ந்த சிற்பக்கலை வல்லுநர்கள் தங்கள் தங்களது பேராற்றலை இவ்விடத்தில் நிலைநாட்டிச் சென்றிருக்கின்றனர். தொட்ட இடமெல்லாம் 'கலைகலை !' என்று முழக்கம் செய்கின்றன. மின்னொளி பரப்பும் அப்பன்னிறச் சலவைக் கற்களுக்கு வாயிருந்தால், ஒவ்வோர் அணுவும் ஓராயிரம் கதைகளை நம் காது குளிர எடுத்தியம்பும் என்பதில் ஐயமில்லை.

மொகலாய மன்னர்கள் படுத்துப் புரண்ட இப்பளிங்கு மாளிகை, கலைத் தேவியின் அழகுத் தொட்டில்; அழகுக்கலை பதுக்கி வைக்கப் பட்ட அலங்காரப் பெட்டகம்; மனிதன் வளர்த்த கலை நாகரிகத்தின் உச்ச வரம்பு. இவ்விடமே டில்லியில் பரந்து காணப்படும் மொகலாயக் கட்டடக் கலையின் மூலநாடி. இவ்விடத்தில் மன்னர் அமர்ந்து உரையாடுவதற்கென்று ஒரு முன் அறை (Drawing room) உள்ளது. இதில் மொகலாய மன்னர்களின் நீதியின் சின்னமான துலாக்கோல் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது. மன்னர் நண்பர்களோடு உரையாடுவதும்,பொதுமக்களுக்குக் காட்சி கொடுப்பதும் இவ்விடத்தில்தான்; இவ்வறைக்கு எதிரிலுள்ள திறந்த வெளியில் பொதுமக்கள் கூடி நிற்பர். மன்னர் நாளுக்கு ஒரு முறை இவ்விடத்தில் அமர்ந்து அவர்கட்குக் காட்சி கொடுப்பார்.

திவானீ காசிற்கு இடப் புறத்தில் அரச குடும்பத்தினர் நீராடும் வாவிகளும், குளியல் அறைகளும் உள்ளன. இதைப் போன்ற குளிக்கும் கட்டடத்தை உலகில் வேறெங்கும் காண முடியாது. இங்குள்ள நீர் வாவி ஒன்றில் பளிங்குக் கல்லால் அமைக்கப்பட்ட மாபெரும் தாமரைப்பூ ஒன்றுள்

ளது. இது தொட்டிபோல் அமைந்துள்ளது. இதைச் சுற்றிலும் மூன்று குழாய்கள் அமைந்துள்ளன. ஒரு குழாயில் தண்ணீரும், மற்றொன்றில் வெந்நீரும், பிறிதொன்றில் பன்னீரும் கொட்டுமாம். அரச மகளிர் வேண்டும் நீரில் விருப்பப்படி குளித்து மகிழ்வராம். இவ்விடத்தை நேரில் காணக் கொடுத்து வைத்தவர்கள் உள்ளத்தில், மொகலாயப் பேரரசர்களின் இன்ப வாழ்வும், ஆடம்பர வாழ்வும் தென்படாமல் போகா.

இக் குளிக்கும் கட்டத்திற்கு அருகில் அரச குடும்பத்திற்கென்று அமைக்கப்பட்ட மசூதி உள்ளது. விழாக் காலங்களில் அரசர் பெருமான் அரண்மனைக்கு வெளியில் உள்ள ஜும்மா மசூதிக்குச் சென்று தொழுகை நடத்துவார். மற்ற நாட்களில் இம் மசூதியே மன்னர்களின் தொழுகைக்கு ஏற்ற இடமாக அமைந்திருந்தது. இம் மசூதியைக் கட்டியவர் அவுரங்கசேப். இவர் ஒவ்வொரு நாளும் பன்முறை இம் மசூதிக்குச் சென்று தொழுகை நடத்துவார்.

இம்மசூதியை அடுத்தாற்போல் அரண்மனைப் பூஞ்சோலைகள் அமைந்துள்ளன. அவைகளில் குறிப்பிடத்தக்கது அயத்பக்சு என்ற பூங்காவாகும். இது மொகலாயர் காலத்திய பூங்காக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. இப்பூங்காவின் ஒரு பகுதி இன்று படைவீடாகப் பயன்படுகிறது. இப் பூங்காவிற்கு அருகில் மேதாப் பாக் என்ற மற்றொன்றும் உள்ளது. 'நிலவொளிப் பூங்கா' என்பது இதன் பொருள். நிலவொளியில் மலரக்கூடிய

மலர்ச் செடிகள் இதில் நிரம்பியிருந்த காரணத்தால் மொகலாய மன்னர்கள் இப் பெயரை இதற்குச் சூட்டினர். இப்பூங்காவில் அருவி யொன்று மேலிருந்து கொட்டுவதற்காகக் கல்லினுல் அமைக்கப்பட்ட நீர்வீழ்ச்சி யொன்றும் காணப்படுகிறது.

இந்நிலவொளிப் பூங்காவின் ஓரத்தில் அமைந்த மாடி ஒன்று உள்ளது. உயரமான இம் மாடியின் பெயர் ஷாபர்ஜ் என்பதாகும். மொகலாய மன்னர் தம் அந்தரங்க அமைச்சர்களுடனும் அலுவலர்களுடனும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தும் இடம் இதுவே. கி. பி. 1787 ஆம் ஆண்டு மொகலாய மன்னன் ஷாஆலத்தின் மூத்த மகனுன சிக்கந்தர்பக்த் டில்லியிலிருந்து தப்பி ஓடுவதற்காக இம்மாடியின் மீதிருந்தே கயிற்றினுல் கட்டி இறக்கப்பட்டான். இம்மாடியின்மீது அமைந்துள்ள முற்றம் இரண்டாம் அக்பர் ஷாவினுல் கட்டப்பட்டதாகும்.

மொகலாய மன்னனின் பட்டத்தரசி குடியிருக்கும் இடம் பொதுவாக ஜெனுனு என்று அழைக்கப்படும். ஜெனுனுவில் ரங்மகல் என்ற ஒரு மாளிகை உள்ளது. வண்ண மாளிகை என்பது இதன் பொருள். இம்மாளிகையின் கலையழகு போற்றத் தகுந்தது. ஆனல் இம்மாளிகை பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் போதிய கண்காணிப்பின்மையால் சிதைவுற்றது. இந்த ரங்மகலுக்கு அருகில் மற்றொரு மாளிகையும் காணப்படுகிறது.. அது இப்போது பொருட் காட்சி நிலையமாகப் பயன்படுகிறது.

திவானீ ஆம் மாளிகைக்கு எதிரில் அமைந்திருக்கும் வெளியில் நிலவங்காடி என்றொரு கடைத் தெரு இருந்தது. நிலாக்கால இரவுகளில் இவ்வங்காடி மிகவும் பரபரப்பாக இருக்கும். லாகூர் வாயிலுக்குள் மூடு அங்காடி (chattar chowk) என்றொரு கடைத் தெருவும் உண்டு. இக்கடைத்தெரு மொகலாய வரலாற்றில் மிகவும் சிறப்பிடம் பெற்றது. இவ்வங்காடி அரச குடும்பத்தினர்க்கென்றே கூடியது. அரச குடும்பத்தார்க்கு வேண்டிய ஆடம்பரப் பொருள்களெல்லாம் இங்கு விற்கப்பட்டன. பாண்டி நாட்டிலிருந்து முத்தும், மேருவிலிருந்து மணியும், அரபு நாட்டிலிருந்து உயர்ந்த சாதிக் குதிரைகளும், கிரேக்கம், உரோம் முதலிய நாடுகளிலிருந்து பட்டும், ஐரோப்பிய நாடுகளிலிருந்து மதுவும் மணப் பொருள்களும், அரேபியா, பாரசீகம், பிரான்சு, வெனிசு முதலிய நாடுகளிலிருந்து அழகியரும் இவ்வங்காடியில் கொண்டு வந்து விற்கப்பட்டனர். குர்ரம் இளவரசன் (ஷாஜகான்) மும்தாஜை முதன் முதலாகச் சந்தித்த இடம் இதுவே. அரச குடும்பத்தாரைத் தவிர மற்றையோர் இங்கு நுழையக் கூடாது.

'இறப்பதற்கு முன் வாழ்வில் ஒரு முறையேனும் நேபிள்ஸ் நகரைக் கண்ணால் கண்டுவிட்டு இறக்க வேண்டும்' என்பது ஆங்கிலப் பழமொழி. இந்தியனாகப் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் இந்நாட்டின் தலைநகரான டில்லியை ஒரு முறையாவது கண்ணால் கண்டபிறகே இறக்க வேண்டும் என்றுரைப்பதும் முறையே.

---

# 7. வாத்திகன் நகரம்

வாத்திகன் (Vatican) என்ற சொல் கிறித்தவர் களுக்கு ஒரு மந்திரச் சொல். ஓர் இந்து காசி நகரை எவ்வாறு ஒரு புனிதமான இடமாகக் கருதுகின்ருனே, ஓர் இசுலாமியன் மக்காவை எவ்வாறு ஒரு புனிதமான இடமாகக் கருதுகிருனே, அதுபோல ஒவ்வொரு கத்தோலிக்கக் கிறித்தவனும் வாத்தி கன் நகரைக் கருதுகிருன். ஓர் இந்து காசி நகரை யும், ஓர் இசுலாமியன் மக்கா நகரையும் தன் வாழ் நாளில் ஒரு முறை காணுவதைக் கிடைத்தற்கரிய பெரும் பேருகக் கருதுவதைப்போல, ஒவ்வொரு கத்தோலிக்கக் கிறித்தவனும், தன்னுடைய வாழ் நாளில் ஒரு முறையாவது வாத்திகன் நகரைக் காண விரும்புகிருன். காரணம், கிறித்தவ சமயத் தின் இரண்டாயிரம் ஆண்டு வளர்ச்சியும், வர லாறும் இவ்வாத்திகன் நகரத்தோடு பிரிக்க முடியாதபடி பின்னிப் படர்ந்து கிடக்கின்றன. போப்பாண்டவரின் தலைமைப் பீடம் இந்நகரமே. உலகிலேயே மிகப் பெரிய கிறித்தவக் கோயிலான புனித பீட்டர் தேவாலயமும், மிகப் பெரிய மாளிகை யான போப்பாண்டவர் மாளிகையும் வாத்திகன் நகரில் இருக்கின்றன. உலகில் வாழும் ஐம்பது கோடிக் கத்தோலிக்கரின் உள்ளங்களும் இந்நகரின் எல்லைக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

### வாத்திகன் வரலாறு

வாத்திகன் உரோம் நகரின் ஒரு பகுதி. வாத்தி கன் என்ற மலையின்மேல் இச்சிறு நகரம் அமைந்

துள்ளது. 'வாத்திகன்' என்னும் சொல்லுக்குக் கடவுளிடமிருந்து வரும் வாழ்த்துச் செய்தியைப் பரப்பும் இடம் என்பது பொருள்.

இயேசு பெருமானுக்குப் பிறகு, அவருடைய சமயக் கொள்கைகளைப் பரப்பச் சீடர்கள் பலர் இருந்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் செயின்ட் பீட்டர் என்பார். இவரைத் தூய இராயப்பர் என்றும் வழங்குவர். இயேசு பெருமானுக்குப் பின், இவரே கிறித்தவ சமயத்தின் தலைவரானார்.

"பீட்டரும், இவருக்குப் பின்வரும் போப் பாண்டவர்களும் நேர்மை உள்ளத்தோடு இறைவனுக்குத் தொண்டு செய்கிறவர்கள் ; இவர்கள் பால் எவ்விதக் குற்றமும் இடம்பெறாது" என்று இயேசு பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு இயேசு பெருமானின் நல்லாசியைப் பெற்ற புனித பீட்டர், தாம் தலைமைப் பொறுப் பேற்ற கத்தோலிக்கத் திருச் சபையின் தலைமைப் பீடத்தை உரோமாபுரியில் அமைத்துக் கொண்டு பணிபுரிந்தார். புனித பீட்டருக்குப்பின் இலைனசு என்பார் சமயத் தலைவரானார். இவரும் இவருக்குப் பின் சமயத் தலைவராக வந்த போப்பாண்டவர் களும், உரோமாபுரியையே தங்கள் தலைமைப் பீட மாகக் கொண்டனர். அன்றையைநாள் தொட்டு இன்றுவரை போப்பாண்டவர்கள் தங்கிச் சமயப் பணி புரியும் இடமே வாத்திகன் என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டுவரை கிறித்தவ சமயம் செழித்துப்

பரவியது. ஐரோப்பாக் கண்டம் முழுவதும் கிறித்தவ சமயம் பரவி விட்டது. எட்டாம் நூற்றாண்டில் போப்பாண்டவருக்கு அரசியலில் பெருத்த செல்வாக்கு ஏற்பட்டது. புனித உரோமானியப் பேரரசின் மன்னர்கள் போப்பாண்டவரால் முடி சூடப் பெறுவதைப் பெரும் பேருகக் கருதினர். ஒரு காலத்தில் புனித உரோமானியப் பேரரசே போப்பாண்டவர்களின் ஆணைக்கு உட்பட்டிருந்தது. காலப் போக்கில் அரசியல் மாறுபாட்டால் இப்பேரரசின் எல்லை குறைந்துவிட்டது. கி. பி. 1870 ஆம் ஆண்டு இத்தாலியர் எஞ்சிய பகுதிகளையும் பிடுங்கிக்கொண்டனர். இப்போது போப்பாண்டவரின் ஆட்சியில் உள்ளவை, அவர் தங்கி வாழும் பெரிய மாளிகையும், புனித பீட்டர் தேவாலயமும், இவற்றைச் சூழ்ந்துள்ள தோட்டம் முதலியவையுமே. இவற்றின் மொத்தப் பரப்பு 108 ஏக்கர். போப்பாண்டவரின் ஆணைக்கு உட்பட்ட இச்சிறிய இடத்தையே வாத்திகன் நகரம் என்றும், வாத்திகன் மாளிகை என்றும் குறிப்பிடுகின்றனர்.

### கலைச் செல்வங்கள்

உலகில் வரலாற்றுப் புகழ் பெற்ற நகரங்களில் முதன்மையானது, இப்போது இத்தாலி நாட்டின் தலைநகரமாக விளங்கும் உரோமாபுரி நகரம்தான். மேலை நாட்டு மக்களுக்குக் கலை, இலக்கியம், நாகரிகம், பண்பாடு ஆகிய உயர்ந்த செல்வங்களை வழங்கிய பெருமையில் பெரும்பங்கு இந்நகரையே சாரும். சீசர், பாம்பே, ஆண்டனி போன்ற மாபெரும் வீரர்களையும், சிசெரோ போன்ற பெரும் பேச்சாளர்

களையும், வர்ஜில் போன்ற மாகவிஞர்களையும் உலகிற்கு நல்கிய பெருமையும் இந்நகருக்கு உண்டு. ஏறத்தாழ 1500 ஆண்டுகள் உலகைக் கட்டியாண்ட உரோமப் பேரரசின் வரலாற்றுச் சின்னங்கள் யாவும் இந்நகரில் குவிந்து கிடக்கின்றன. எனவே உலகில் வேறு எந்த நகரிலும் கூடாத அளவு பெருந்திரளான மக்கள் இந்நகரைக் காண நாள்தோறும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றனர்.

இந்நகரில் பயணிகளின் வசதிக்கென நூற்றுக் கணக்கான விடுதிகள் உள்ளன. ஒவ்வொரு விடுதியிலும் இரண்டு மணிக்கொருமுறை பயணிகளை ஏற்றிக் கொண்டு பேருந்துகள் நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்புகின்றன. உரோமாபுரி நகரில் பார்க்கத்தக்க இடங்களில் குறிப்பிடத்தக்கவை வாத்திகனில் உள்ள போப்பாண்டவர் மாளிகையும், புனித பீட்டர் தேவாலயமும்தாம்.

### வாத்திகன் மாளிகை

உலகிலேயே மிகப் பழமையான கட்டடம் வாத்திகன் மாளிகைதான். இம்மாளிகை எந்த ஆண்டில் கட்டப்பட்டது என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பேரரசர் சிலரால் இம்மாளிகை கட்டப்பட்டிருக்க வேண்டும். இம்மாளிகை போப்பாண்டவர் வாழும் இடம் மட்டுமன்று; உலகிலுள்ள கத்தோலிக்கச் சமயத்தினரின் தலைமை அலுவலகமும் ஆகும். போப்பாண்டவரின் அமைச்சர்களும், அலுவலர்களும், நூற்றுக்கணக்கான துறவிகளும்

இம்மாளிகையிலேயே வாழ்கின்றனர். வாத்திகன் நகரின் மொத்தக் குடிமக்கள் ஆயிரம் பேர்.

வாத்திகன் மாளிகை மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கட்டடம். இதன் சுவர்களின் அகலம் 4 மீட்டர். ஆயிரக் கணக்கான தூண்களும், ஓராயிரம் அறைகளும் இதில் உள்ளன. நூறு இடங்களில் மாடிப்படிகள் அமைந்துள்ளன. இருநூறு அறைகளில் போப்பாண்டவரும், அவருடைய உயர் அலுவலர்களும் பணியாட்களும் வாழுகின்றனர்.

வாத்திகன் மாளிகையில் போப்பாண்டவர் தங்கி வாழும் அறை மிகவும் அழகானது. பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட இவ்வறை கண்ணைப் பறிக்கும் கலையழகு வாய்ந்தது. இவ்வறையின் நடுவில் போப்பாண்டவர் அமர்வதற் கென்று அமைக்கப் பட்ட சிம்மாசனம் உள்ளது. இது பொன்னாலானது. இச் சிம்மாசனத்திற்கு அருகில் போப்பாண்டவர் பயன்படுத்தும் தங்கத்தாலான தொலை பேசி வைக்கப்பட்டுள்ளது. போப்பாண்டவர் தம் துயில் நீங்கிப் படுக்கையை விட்டு எழுந்ததும், புனித பீட்டர் தேவாலயம் அவர் கண்ணில் நேராகப் படும்படி அவ்வறை அமைக்கப்பட்டுள்ளது.

போப்பாண்டவரின் குளிக்கும் அறையில் பலவித நூதனப் பொறிகள் அமைக்கப் பட்டுள்ளன. அவ்வறையில் உள்ள நீராடும் அமைப்புக்கள் கலைச் சிறப்புடன் கூடியவை. சுவரில் பொருத்தப் பட்டுள்ள விசையைத் தட்டி விட்டதும் இக் கருவிகள் இயங்கத் தொடங்கும். மின்விசையின்

துணையால் இயங்கும் முகம் மழிக்கும் கருவிகளும் (Shaving set) குளியல் அறையில் உள்ளன. பன்னாட்டு மக்களால் பரிசளிக்கப்பட்ட அக் கருவிகள் யாவும் பொன்னால் ஆனவையே.

வாத்திகன் மாளிகையைக் குளிர் காலங்களில் சூடாக்குவதற்காகவும் சில அமைப்புகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவ்வமைப்புக்களில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால், போப்பாண்டவர் இருக்கிற அறையைச் சூடாக்குவதற்குத் தனியான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

புனித பீட்டர் ஆலயம்

தில்லையிலுள்ள நடராசப் பெருமான் கோவிலை நாம் அறிவோம். அங்கு ஆனந்தக் கூத்தாடும் இறைவனுக்குப் பொன்னம்பலவன் என்றும், அவன் காலைத் தூக்கி ஆடும் மேடைக்குப் பொன்னம்பலம் என்றும் பெயர்களுண்டு. தில்லை நடராசன் கோவில் கொண்டிருக்கும் கருவறை பொன்னோடுகளால் வேயப் பெற்றது. தில்லைக் கோவிலுக்குப் பொன் வேய்ந்த பெருமை பிற்காலச் சோழர்களையே சாரும்.

இதே போல வாத்திகனில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தின் மேல் முகடு பொன் தகடுகள் பதித்து மெருகிடப் பட்டுள்ளது. இயேசு நாதருக்குப் பிறகு கிறித்தவ சமயத்தலைவரான புனித பீட்டரின் நினைவாகக் கட்டப்பட்டதே இத் தேவாலயம். புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் இவருடைய சமாதியைக் கண்டறிந்து பல அரிய உண்மைகளை வெளிப்படுத்தினர்.

இக்கோவில் கி. பி. நான்காம் நூற்றுண்டில், உரோமானியப் பேரரசராக விளங்கிய கான்ஸ்டன்டைன் (Constantine) என்பவரால் கட்டப்பட்டது. மிகவும் தொன்மையான கிறித்தவக் கட்டடக் கலைக்கு இக் கோவிலே சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியது. கி. பி. பதினுன்காம் நூற்றுண்டின் இறுதி வரையில் மேலை நாட்டுக் கிறித்தவர்களுக்கு இதுவே தலைசிறந்த தேவாலயமாகக் கருதப் பட்டது. கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டில் ஏற் பட்ட மறுமலர்ச்சியினுல் மக்கள் உள்ளத்திலும், கலை உலகிலும் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்தன. எனவே புனித பீட்டர் தேவாலயத்தைக் காலத் திற்கேற்ப மாற்றிப் புதுப்பிக்க விரும்பினர்.

தேவாலயத்தைப் புதுக்கும் திருப்பணி கி. பி. 1506 ஆம் ஆண்டு துவங்கியது. இவ்வாண்டில் துவங்கிய திருப்பணி 120 ஆண்டுகள் தொடர்ந்து நடை பெற்றது. இக் கோவிற் புதுக்குத் திருப்பணி மூதன் முதலாக, பிராமண்டீ என்ற ஒரு சிற்பியின் கையில் ஒப்படைக்கப்பட்டது. அவர் கோவிலின் ஒரு பகுதியை விரிவு படுத்திஞர். எட்டாண்டுகள் அவர் பணி தொடர்ந்தது. கி. பி. 1514 ஆம் ஆண்டு அவர் இறந்ததும் கோவில் திருப்பணி சில ஆண்டுகள் தடைப்பட்டு நின்றது; முப்பது ஆண்டு கள் கழித்து மீண்டும் தொடர்ந்தது. இம் முறை கட்டட வேலையின் பொறுப்பை மேற் கொண்டவர் மைக்கேல் ஆஞ்சலோ என்ற மாபெரும் சிற்பி. மேலை நாட்டுச் சிற்பக் கலையின் மறுமலர்ச்சிக்குக் காரண மாக விளங்கியவர் இவரே. இவர் விரிவான திட்ட மிட்டுப் பீட்டர் தேவாலயத்தைப் பெரிதாக

அமைத்தார். தற்போது கோவிலில் உள்ள நடு மன்றமும், அதன் இரு புறமும் அமைந்துள்ள வண்ண வளைவுகளும், நாற்புறமும் தலை நிமிர்ந்து நிற்கும் கொத்தளங்களும் இவரால் அமைக்கப் பட்டவை.

இக்கோவிலின் நடுமன்றம் ஒரு கலைக் கருவூலம். பளிங்குக் கல்லாலும், கருங்கல்லாலும் விவிலிய நூலில் வரும் கதை நிகழ்ச்சிகள் சிற்பங் களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பச் செல் வங்கள் காண்போரிடம் நேரில் பேசுவது போலக் காட்சியளிக்கின்றன. இத்தேவாலயத்தின் மேல் விதானத்தில் மிகவும் அழகான வண்ண ஓவியங் கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் யாவும் அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த ஓவியக் கலைஞர்களின் கலைத் திறமைக்குச் சான்றுகளாக இன்றும் விளங்குகின்றன.

இக்கோவிலின் முன்னால் பெரிய முற்றம் ஒன்றுள்ளது. இது மிகவும் பெரியது. மூந்நூறு யிரம் மக்கள் ஒரே சமயத்தில் திரளாகக் கூடி இம் முற்றத்தில் நிற்க முடியும். இவ்வெளி முற்றத்தி லிருந்து கோவிலை நிமிர்ந்து பார்க்கும்போது மேலே பளிங்கில் பதிக்கப் பெற்றுள்ள எழுத்துக்கள் நம் கண்களுக்குப் புலப்படும். இவ்வெழுத்துக்கள் பார்ப்போருக்கு நன்ருகத் தெரிவதற்காக மிகப் பெரிய வடிவத்தில், மேலே செல்லச் செல்ல ஒவ் வோர் எழுத்தின் அளவும் கீழே இருப்பதைவிடப் பெரிதாக அமைந்துள்ளன. நெடுந் தொலைவி லிருந்து பார்த்தாலும் இந்தக் கோவிலின் சிகரம்

நன்கு தெரியும். மிகப் பழமையானதும், பல நூற்றுண்டுகள் புனிதமானதென்று கருதப்பட்டதுமான இம்மண்ணிலிருந்து 141 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள தளத்தில் பொன்னுலான சிலுவையொன்று வைக்கப்பட்டுள்ளது. இப் பொற்சிலுவையும், போப்பாண்டவருடைய இருக்கையும் எல்லாருக்கும் தெரியும்படி கோவில் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோவிலின் நடுமன்றத்தில் 43,000 மக்கள் ஒரே சமயத்தில் கூடி மண்டியிட்டுத் தொழுகை நடத்தலாம். இறந்துபோன போப்பாண்டவர்களின் சவங்கள் இம்மன்றத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலில் வழிபாட்டிடங்களாகத் தனித்தனியே இருபத்தேழு இடங்கள் உள்ளன. பல மொழிகளில் அங்கு விவிலிய நூல் படிக்கப்படுகிறது. புனித பீட்டர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் பாதிரிகள் சென்று பாவ மன்னிப்புக் கேட்பர்.

நம் நாட்டுக் கோவில்களில் உக்கிராண அறை ஒன்றுண்டு. அதே போல இக்கோவிலிலும் உக்கிராண அறை உண்டு. இதைப் புனிதக் கருவூலம் (Treasury of Sacristy) என்பர். இவ்வறையில் கோவிலைச் சேர்ந்த நகைகளும், தங்கத்தால் செய்யப்பட்ட சிலுவைகளும் வைக்கப் பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள எல்லா வகையான நாணயங்களும் பதக்கங்களும் இங்கு உள்ளன. விலைமதிப்பற்ற மாணிக்கங்களும், நவரத்தினக் கற்களும் இங்கு அளவு கடந்து சேர்த்து வைக்கப் பட்டிருக்

கின்றன. 28,000 வகையான உயர்ந்த இரத்தினக் கற்கள் இங்கு உள்ளன. இவற்றை வகைப்படுத்தித் தனித்தனியே சிறு அறைகளுடைய மரப் பெட்டியில் பேணி வைத்திருக்கிறார்கள்.

சிற்பக்கலையும் ஓவியக்கலையும் செழித்து வளர்வதற்கு நம் நாட்டிலும் சரி, மேலை நாட்டிலும் சரி, சமயங்களே பெருந்துணையாக இருந்திருக்கின்றன. சமயக் கடவுளரின் உருவங்களையும், புராண நிகழ்ச்சிகளையும் சிற்பங்களாகச் செதுக்கியும், ஓவியங்களாகத் தீட்டியும் கலைஞர்கள் இவ்விரு கலைகளையும் வளர்த்தனர். பௌத்தர்கள் புத்த பெருமானின் திருவுருவத்தைப் பல வடிவங்களில் செதுக்கினர். இந்துக்கள் கோவில்களில் இறை வடிவங்களையும், புராண நிகழ்ச்சிகளையும் கல்லில் வடித்தனர். இந் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த இந்திய ஓவியரான இராசா இரவிவர்மா அவர்கள் கூட கண்ணன், இலக்குமி, கலைமகள் ஆகிய கடவுளரின் ஓவியங்களைத் தீட்டியே ஓவியக் கலையை வளர்த்தார்.

இதே போன்று மேலை நாட்டுச் சிற்பக்கலையில் ஏசுவின் திருவுருவம் பெரிய மறுமலர்ச்சியை உண்டாக்கியது. விவிலிய நூலில் கூறப்பட்டுள்ள கதை நிகழ்ச்சிகள் ஓவியக் கலையில் பெரிய புரட்சியை உண்டு பண்ணின. ஏசுவின் திருவுருவத்தை எவ்வெவ்வாறெல்லாம் வடிக்க முடியுமோ அவ்வவ்வாறெல்லாம் வடித்து மேலை நாட்டுச் சிற்பிகள் அழகு பார்த்தனர். இக்கலைச் செல்வங்களையெல்லாம் கத்தோலிக்கர்கள் இக்கோவிலில் கொண்டு வந்து குவித்து வைத்துள்ளனர். போப்பாண்ட

வரின் மாளிகையிலும், புனித பீட்டர் கோவிலிலும் இக்கலைச் செல்வங்கள் யாவும் தொகுக்கப் பெற்றுக் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. கிரேக்க நாட்டுக் கலைச்செல்வங்களே இங்கு ஏராள மாக உள்ளன.

இக்கோவிலில் வண்ண வளைவுகளும், பகுதி பகுதிகளாக அமைக்கப்பட்ட மண்டபங்களும், நயமான செதுக்கு வேலையுடன் கூடிய உயர்ந்த தூண்களும் நிறைய உள்ளன. கிரேக்கர்களின் அரிய படைப்புக்களான மனித உருவப் படங்களும், வெள்ளைப் பளிங்கிலும் வண்ணப் பளிங்கிலும் தீட்டப்பட்ட உயிரினங்களின் வடிவங்களும், இரா∴பியேல் போன்ற இத்தாலிய மேதைகளால் தீட்டப்பெற்ற 463 ஓவியங்களும் நம்மை வியப்பி லாழ்த்தும் கலைப்பொருள்களாக உள்ளன. 5 மீட்டர் உயரமுள்ள பளிங்குச் சிலைகள் பலவற்றை இங்குக் காணலாம். வாத்திகன் நகரத்தைச் சில மணித் துளிகளில் நடந்து கடந்து விடலாம். ஆனால் இங்குள்ள கலைச் செல்வங்களைக் கண்டு மகிழப் பல்லாண்டுகள் வேண்டும்.

# 8. இறுவாய்

மக்கள் நாகரிகம் பெறத் தொடங்கிய காலந் தொட்டு ஒவ்வொரு நாட்டிலும் சிறிதும் பெரிதுமாகிய எத்தனையோ கட்டடங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. மக்களின் கலையறிவு வளர வளரக் கட்டடக் கலையும் நுட்பமும் புதுமையும் பெற்று வளர்ந்து வருகின்றது. புதுமை என்பது மக்கள்பால் படிந்திருக்கும் இயல்பூக்கங்களில் தலையாய ஒன்று. நாள்தோறும் மாந்தர்கள் புதுமையை நாடி அலைகின்றனர். புதுமையின்பால் அவன் கொண்டிருக்கும் ஆருக் காதல்தான் ஆராய்ச்சியாக மாறி, இன்று அறிவியலாக வளர்ந் திருக்கிறது. நேற்றைய பொருள் இன்று நமக்குப் பழமையாகப் படுகிறது.

இப்புதுமை விருப்பம் மக்களின் கலையுணர்வையும் மாற்றிக் கொண்டிருக்கிறது. இம்மாறுதலுக் கேற்ப நூற்றாண்டு தோறும் கட்டடக்கலை மாறு பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் இக்கலை பல தனித் தன்மைகளையும், சிறப்புக்களையும் பெற்று விளங்கு கின்றது. கிரேக்கக் கட்டடக் கலை, உரோமானியக் கட்டடக் கலை, பாரசீகக் கட்டடக் கலை, இந்தியக் கட்டடக் கலை, தமிழர் கட்டடக்கலை எனப் பல துறைக் கலைகள் உலகில் பிரித்துப் பேசப்படுவத னால் இவ்வுண்மை விளங்கும்.

இக்கால இந்திய மக்களின் கலைச்சுவை பண்டைச் சுவையினின்றும் முற்றிலும் மாறி

விட்டது. சில நூற்றுண்டுகளுக்கு முன் இந்தியர்களாலும், இசுலாமியர்களாலும் பேணி வளர்க்கப்பட்ட கட்டடக்கலை, இன்று காட்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரிய பழங்கலையாக மாறிவிட்டது. பண்டைய இந்தியாவில் அமைக்கப்பட்ட சிற்பக்கலையழகோடு கூடிய கட்டடங்கள் இன்று கட்டப்படுவதில்லை. சிற்பக்கலையும் இன்று வலிமை குன்றி நசித்துவிட்டது. இருபதாம் நூற்றுண்டின் ஓவியக்கலையை எண்ணும்போது நமக்குப் பெருங் குழப்பமும் வியப்பும் ஏற்படுகின்றன. இன்றைய கலைப்பிரியர்கள் ஓவியனின் ஆற்றலுக்கு முதலிடம் அளிக்கின்றுர்களே ஒழிய, எழுதப்படும் கலை இயற்கையை ஒட்டியதாக அமைந்திருக்க வேண்டும் என்று கருதுவதில்லை. இன்றைய மறுமலர்ச்சி ஓவியர்களின் புகைப்படங்களும், அவர்களைப் பற்றிய அறிமுகக் கட்டுரைகளும், அவர்கள் தீட்டிய ஓவியங்களும் செய்தித் தாள்களில் அடிக்கடி வெளிவருகின்றன. அவ்வோவியங்கள் யாவும் மேலும் கீழும், குறுக்கும் நெடுக்குமாக உள்ள பல நேர் கோடுகளாகவும், வளைவுக் கோடுகளாகவுமே காணப்படுகின்றன. உடைந்துபோன வண்ணக் கண்ணுடிப் பலகைபோல் அவைகள் காட்சியளிக்கின்றன. தெளிவான உருவம் எதையும் அவற்றில் காண முடியாது. ஆனுல் அவற்றை உயர்ந்த ஓவியங்கள் என்று உலக மக்கள் பாராட்டுகின்றனர்; பரிசு வழங்குகின்றனர். இன்றைய மக்களின் கலைச்சுவை அவ்வாறு மாறிவிட்டது.

சென்ற நூற்றுண்டு வரை இந்திய நாட்டில் ஒருநோக்குக் கட்டடங்களே (Symmetrical buildings)

மக்களால் பெரிதும் விரும்பப்பட்டன. பழையகால மசூதிகள், அரண்மனைகள், கோவில்கள் முதலி யவை ஒருநோக்குக் கட்டடங்களே. ஒரு பக்கம் எம்மாதிரி அமைக்கப்படுகின்றதோ, அதே போல அக்கட்டடத்தின் எதிர்ப் புறத்தையும் அமைப்பது இதன் சிறப்பியல்பாகும். வடக்கில் தாஜ்மகாலும், தெற்கில் தஞ்சைப் பெரிய கோவிலும் ஒருநோக் குக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு களாகும்.

இருபதாம் நூற்றுண்டில் இதுபோன்ற கட்ட டங்களை மக்கள் விரும்புவதில்லை. இன்று பல் நோக்குக் கட்டடங்கள் (Unsymmetrical buildings) மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப் படுகின் றன. இக்கட்டடங்கள் பல கோணங்களில், பல வித உருவ வேறுபாடுகளோடு அமைக்கப் படுகின் றன. ஒருநோக்குக் கட்டடங்களில் நடுவிடமே வாயிலுக்கு ஏற்றதாகக் கருதப்பட்டது. பல் நோக்குக் கட்டடங்களில் வாயிலை ஒரு மூலையில் அமைப்பது சிறப்பாகக் கருதப்படுகிறது.

பண்டைக் காலத்தில் கட்டடங்கள் செங்கல், கருங்கல், வண்ணக்கல், சலவைக்கல், சுண்ணச் சாந்து, மணல் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கட்டப்பட்டன. இந்நூற்றுண்டில் சிமெண்டு என்ற புதிய பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. சிமெண்டு கண்டு பிடிக்கப்பட்ட பிறகு கட்டட வேலை மிகவும் எளிதாகிவிட்டது. சிமெண்டு, மணல், பொடிக் கற்கள் ஆகியவற்றை ஏற்ற அளவில் கலந்து 'காங்கிரீட்டு' செய்கிருர்கள். அதன்

குறுக்கே இரும்புக் கம்பிகளை வைத்து 'வலுப்படுத்தப்பட்ட காங்கிரீட்டு' செய்கிறார்கள். காங்கிரீட்டு கண்டு பிடிக்கப்பட்ட பிறகு கட்டடக் கலையில் வியக்கத்தக்க மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தூண் தாங்கும் கட்டடங்கள் (Column frammed structures): மேற் கூரையின் பளுவைத் தூண்கள் பகிர்ந்து கொள்ளுதலே இக்கட்டடத்தின் சிறப்பியல்பாகும். மதுரைத் திருமலை நாயக்கர் மகாலும், சிதம்பரத்திலுள்ள ஆயிரங்கால் மண்டபமும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் இவ்விரு கட்டடங்களிலும் நாட்டப் பட்டுள்ள பெரும் பெரும் தூண்கள் இடத்தைப் பெரிதும் அடைத்துக் கொண்டிருக்கின்றன. வலுப் படுத்தப் பட்டுள்ள காங்கிரீட்டு கண்டு பிடிக்கப் பட்ட பிறகு தூண் தாங்கும் கட்டடங்கள் மிகவும் பிரபலமடையத் தொடங்கி யிருக்கின்றன. வலுப் படுத்தப்பட்ட காங்கிரீட்டுகளைக் கொண்டு சிறிய தூண்களை அமைத்து, எங்கெங்கு மறைப்புச் சுவர்கள் தேவையோ அங்கெல்லாம் மிகவும் அகலக் குறைவான சுவர்களைக் கட்டிவிடுகிறார்கள். பல பெரிய கடைகள், தொழிற்சாலைகள் முதலியன அமைப்பதற்கு இக்கட்டட முறை பெரிதும் பயன் படுகின்றது.

பிரித்தமைக்கும் கட்டடங்கள் (Collapsible buildings): இக்கட்டடங்கள் மேலை நாடுகளில் நடுத்தர வகுப்பினராலும், அலுவலகங்களில் வேலை செய்வோராலும் பெரிதும் விரும்பப் படுகின்றன. இக்கட்டடங்கள் பல மூலைத்தூண்களாலும்,

சிமெண்டுப் பலகைகளாலும் அமைக்கப்படுகின்றன. தூண்களில் பலகைகள் செருகுவதற்குத் தேவையான இடைவெளிகள் விடப்பட்டிருக்கும். இது போன்ற கட்டடங்களைத் தேவையான பொழுது பிரித்து எடுத்துச் சென்று வேறு இடங்களில் அமைத்துக் கொள்ளலாம். நம் நாட்டில் கட்டடங்களில் வெளிப்புறச்சுவர் (Compound walls) அமைப்பதற்கு மட்டும் இம்முறை கையாளப் படுகிறது.

புறக்காழ்க் கட்டட முறை (Hollow block building): செங்கற்களைப் போல் சிமெண்டினால் பெருங்கற்கள் செய்யப்படுகின்றன. சிக்கனத்தின் பொருட்டு இடையில் தொளை விடப்பட்டு இக்கற்கள் அமைக்கப் பெறுகின்றன. இக்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிச் சுவர்கள் எழுப்பப் படுகின்றன. இம்முறையைக் கட்டடங்களின் உட்புறச்சுவர்கள் அமைக்கக் கைக்கொள்ளுகின்றனர்.

இடச்சுருக்கம் : உலக மக்களின் எண்ணிக்கை நாள்தோறும் நூறுயிரம் நூறுயிரமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப மக்களின் குடியிருப்புக்களும் பெருகிக் கொண்டிருக்கின்றன. வீட்டு நிலங்களின் விலையும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. எனவே சிறு இடத்தை வாங்கி அதில் பல வசதிகளையும் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஒரு வீட்டை எடுத்துக் கொண்டால் அதில் குறுக்குச் சுவர்கள் பல இருப்பதைக் காணலாம். இச் சுவர்களை மிகவும் மெல்லியவையாகக் கட்டினால்

வீட்டின் உட்பரப்பு மிகுந்து காணப்படும். புதிய முறையில் கட்டப்படும் வீடுகளில் வெளிச்சுவர்கள் கனமானவையாகவும், உட்சுவர்கள் ஒன்பது அங்குல கனத்திற்கு மிகாமலும் கட்டப்படுகின்றன. கூரையின் பளுவை வெளிச்சுவர்களே தாங்கிக் கொள்கின்றன.

பண்டைக் காலத்தில் செல்வர்கள் மிகப் பரந்த பல அடுக்கு மாடிகளையுடைய மாளிகைகளையே பெரிதும் விரும்பினர். இன்று நிலைமை மாறிவிட்டது. 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்ற பழமொழியை வாழ்க்கையில் கடைப் பிடிக்கத் தொடங்கி விட்டனர். வீட்டைச் சிறியதாகக் கட்டிச் சுற்றிலும் திறந்த வெளிகள் இருக்கும்படி விட்டுச் சுற்றுச்சுவர் எழுப்புகின்றனர். அத்திறந்த வெளியில் இளமரங்களையும், அழகிய பூச்செடிகளையும் பயிரிட்டு வீட்டைக் கலையழகோடு வைத்துக் கொள்ளப் பெரிதும் விரும்புகின்றனர். வீட்டோடு வீட்டை ஒட்டிக் கட்டுவது வாழ்க்கை நலத்திற்கு ஏற்றதல்ல என்று மக்கள் உணருகிறார்கள். சுரங்கக் கழிநீர்ப் பாதைகள் சுற்றுப்புறத் தூய்மைக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

**வண்ணத் தளவமைப்பு (Mossaic flooring):** பண்டைக் காலத்தில் அரசர்களும் செல்வர்களும் அழகானதும் வழவழப்பானதுமான பளிங்குக் கற்களைத் தமது மாளிகைகளில் பதித்துத் தளம் அமைத்தனர். இக்கற்கள் மிகவும் விலையுயர்ந்தவை. ஆனால் இக்காலத்திலோ வெள்ளைச் சிமெண்டு, மணல், கண்ணாடிக் கற்கள் ஆகியவற்றைப் பயன்

படுத்திச் சிறுசிறு பலகைகள் செய்து நிலத்தில் பதித்துத் தளம் அமைக்கின்றனர். தளங்களில் மட்டுமின்றி, சுவர்களிலும் சிறிது உயரத்திற்கு இப் பலகைகளைப் பதிக்கின்றனர். இத்தள வமைப்பு மிகக் கவர்ச்சியாக இருப்பதோடு, அழுக்குப் படியாமல் தூய்மையாகவும் காட்சி யளிக்கிறது.

பூச்சு முறை: பண்டைக் காலங்களில் தூய்மையின் பொருட்டும், சுகாதாரத்தின் பொருட்டும் சுவர்களுக்குச் சுண்ணாம்பினால் வெள்ளையடிப்பது வழக்கம். இன்று சுவர்களுக்கு வண்ணம் பூசுவது நாகரிகமாகக் கருதப்படுகிறது. சுண்ணப்பூச்சுச் சில திங்கள்களில் உதிர்ந்துவிடும். சுவரில் சாயும் போது சுண்ணம் நம்மேல் ஒட்டிக் கொள்ளும். ஒட்டாமலும், விரைவில் அழியாமலும் ஆண்டுக் கணக்கில் இருக்கக் கூடியதான உயர்ந்த வண்ணப் பூச்சுக்கள் (Silvicrete) இப்பொழுது வீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு பல துறைகளிலும் கட்டடக் கலை வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. எளிமை, வாழ்க்கை வசதி, சுகாதாரம் ஆகிய மூன்றுமே இன்றைய கட்டடக் கலையின் நோக்கங்களாக இருக்கின்றன.

மேற்படித்த இருபதாம் நூற்றாண்டின் கட்டடக் கலையினை நுகரும் நாம் பண்டைக் கட்டடக் கலையை நோக்குங்கால், நினைவலைகளில் எழும் கதைகளைப் போன்று தோன்றி நம்மை வியப்பிலாழ்த்துகின்றன அல்லவா?